Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஐப்பசி 21- ஆம் நாள். ஜமாதிஹவல் பிறை 5 (7-11-59) சனிக்கிழமை இதழ் 40.

# தமிழருக்கு இரு மந்திரிப் பதவிகள் அளிக்க பிரதமரின் யோசனை?

## மொழிக் குறையைத் தீர்க்க தகநாயக்கா ஏதும் செய்வாரா?

### தமிழரின் ஆதரவைப் பெற பிரதமரின் புதிய ஆவல்

— நமது அரசியல் நிருபர் —

இப்போது மந்திரி சபையில் இரு மந்திரி பதவிகள் காலியாகவுள்ளன. அந்த இரண்டையும் தமிழருக்கு அளிப்பதாயும், இதன் மூலம் தமிழருக்குள்ள குறைகளை நீக்குவதாயும் பிரதமர் தகநாயக்கா கூறி, தமிழ் எம். பிக்களை அழைத்து உறுதி அளிப்பாரென்றும் பலத்த அரசியல் வதந்திகள் உலவுகின்றன.

தமது கட்சியைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாயும், எதிர்க்கட்சியிலே தமிழ்ப்பிரதிநிதிகள் இருப்பதாலும், அவர்களின் ஒத்துழைப்பைப் பெற தகநாயக்கா முனைந்துள்ளதாகத் தெரிகிறது.

தமிழரின் குறைகளை நீக்குவதாக உறுதி மொழி கிடைத்தால், தமிழ்ப் பிரதிநிதிகள் மந்திரி பதவியேற்பதைப் பற்றி ஆலோசிப்பதுடன், அதையொட்டிய பிரச்சினைகளையும் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கேற்ப ஆராய்வார்களெனவும் கூறப்படுகிறது.

பார்லிமெண்ட் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின்போது, ஒரே ஒரு தமிழர் தான் பேசினர். வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் பேச எழுந்தபோது, டாக்டர் கொல்வின் உள்ளிட்டு பலர் பேச ஏக காலத்தில் எழுந்தனர். தலைவரின் உத்தரவுக்காக திரு. அமிர்தலிங்கம் சற்றே தயங்கியிருக்கையில், "ஆரம்பியுங்கள், ஆரம்பியுங்கள்" என்று அவர் கட்சியிலிருந்த சிலர் தூண்டினர். அவரும் பேச ஆரம்பித்துவிட்டார்.

'சீக்கிரம் முடித்துவிடுங்கள்' என்று டாக்டர்கொல்வின்,ஆவலுடன் கேட்டார். "யாருக்காகவும் நாங்கள் எங்கள் பேச்சு உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம். நாங்கள் கூறவேண்டியதைக் கூறியே தீருவோம்" என்று வட்டுக்கோட்டை பிரதிநிதி கூறி, தமிழ்ப் பேசும் மக்களின் குறைகளைக் கூறி, இடது சாரிக்கும் தங்களுக்கும் உள்ள வேற்றுமையை மறைமுகமாக வெளியிட்டார்.

தமிழரின் குறைகளைக்கேட்டு அவற்றைத் தீர்க்கப் போவதாக திரு. தஹநாயக்கா, பிரதமரானதும் பத்திரிகைப்பிரதிநிதிகள் மகாநாட்டில் தெரிவித்தாரல்லவா? தனிச் சிங்களச் சட்டமும் அதை அமுல் நடத்தும் முறையுமே தமிழரின் அடிப்படைக் குறையென்றும், மொழிக் கமிஷனர் திரு. சேனவிரத்ன அச்சட்டத்தை நிறைவேற்றப் போகும் ஒவ்வொரு சிறிய உத்தரவும், தமிழரைப் புண்படுத்தி, ஒரு புதிய பிரச்சினையாகிறதென்றும், அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதை நிறுத்தி வைத்து, அந்த அதிகாரியை மாற்றிவிட வேண்டுமென்றும், வட்டுக்கோட்டை பிரதிநிதி, பார்லிமெண்டில் காரசாரமாகப்பேசி, புதிய பிரதமர் தமிழருக்கு தமது நல்லெண்ணத்தை நிரூபிக்க இதையாவது செய்ய வேண்டுமென்று கேட்டார்.

அவர் பேச எழுந்ததும், பிரதமர் தஹநாயக்காவும், மந்திரி இலங்கரத்னவும், மொழி பெயர்ப்புக் கருவியைக் காதில் வைத்து மிகக்கவனமாகக் கேட்டனர்.

மறுநாள் "ஒப்ஸேர்வர்" பத்திரிகை நிருபருக்கு பிரதமர் அளித்தபேட்டியில், "தமிழ் பிரச்சினையைப் பற்றி நாங்கள் யோசிக்கவேண்டியுள்ளது. எங்கள் மீது தமிழருக்கு ஒரு குறையுண்டு. வெள்ளிக்கிழமை இரவு நிகழ்த்தப்பட்ட ஒரே தமிழ்ப் பிரசங்கத்திலும் அஃசர நெருக்கடி முதலிய விஷயங்களைப்பற்றி ஒன்றும் இல்லை. தமிழருக்கு மாருக வேற்றுமை காட்டப்பட்டது பற்றியும், அரசாங்கத்தின் மீதுள்ள குறையைப்பற்றியுமான ஒரு கதையேயாகும். இதை நாங்கள் கவனிக்க வேண்டியுள்ளது" என்ருர்.

இதைப்பற்றி அவர் என்ன செய்யப்போகிருர்? செனேட் சபைகளில் ஏற்கெனவே ஏழு, தமிழ் மெம்பர்கள் இருந்திருக்கையில் இப்போது இரண்டே தமிழர்தான் இருக்கிருர்கள். அவ்விருவரும் தெரிவு செய்யப்பட்டவர்கள். அரசாங்கக்கட்சி ஒரு தமிழரைக்கூட நியமிக்கவில்லை. நியமன மெம்பரான சேர். எஸ். பரராஜசிங்கத்துக்குப்பதிலாக ஒரு தமிழரை ஏன் நியமித்திருக்கக்கூடாது? தமிழரின் குறைகளை நீக்குவது பற்றி திரு. தகநாயக்காவின் உண்மை மனப்பான்மையைக் காட்ட இது ஒன்றே போதாதா? என்று ஒப்சேவர் பத்திரிகை, "திரு. தகநாயக்காவும் தமிழரும்" என்ற தலைப்புடன் எழுதியுள்ள தலையங்கத்தில் கேட்டுள்ளது.

இவ்விஷயமாக ஓர் அரசாங்கக் கட்சி மெம்பரை விசாரித்ததில், ஏற்கெனவே செனேட் சபையில் அரசாங்கக் கட்சிக்குப் போதிய பலமில்லை என்றும், அதைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசிய மேற்பட்டதாயும், தமிழரை ஒதுக்கவேண்டுமென்ற எண்ணம் பிரதமருக்குச் சிறிதுமில்லை என்றும் சமாதானம் கூறினர்.

அப்படியாயின், தமிழரின் குறைகளைத் தீர்க்க பிரதமர் தகநாயக்கா இனி என்ன செய்யப் போகிருர்? தனிச் சிங்களச் சட்டத்தை அவர் மாற்ற முடியுமா? அவர் கட்சியிலேயே பலத்த எதிர்ப்புக் கிளம்பும். தமிழரின் ஆதரவைப் பெறுவதற்காக, தமது சமூகத்தின் எதிர்ப்பை அவர் பெற விரும்ப மாட்டார்.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி கூறியதுபோல் ஒரு அதிகாரியை மாற்றுவதால் மட்டும் தமிழர் குறை தீர்ந்துவிடமாட்டாது. வேறு என்ன செய்ய வேண்டுமென்பதே இப்போதைய கேள்வி.

சென்ற மூன்றரை வருடங்களுக்குமேல் மந்திரிசபையில் ஒரு தமிழர்கூட இல்லை. இதனல் அரசாங்கத்துக்கும் தமிழர் சமூகத்திற்கும் எவ்விதமான தொடர்பு மில்லாமலும் போய் விடடது. இது பெரிய குறை. இந்த அரசாங்கத்தின் அமைப்பே, வகுப்புவாதம் வளரவும், தமிழர் எல்லாத் துறைகளிலும் அலட்சியப்படுத்தப் படவும் தூண்டுவதாகவுள்ளது. மந்திரி சபையில் இரண்டொரு தமிழர் இருப்பின் தனிச் சிங்கள மசோதா சட்டமாகியிராதென்றும், நாட்டில் வகுப்புவாதம் பெருகி, சென்ற வருட வகுப்புக் கலகமும் மூண்டிராதென்றும், தமிழரை எல்லாம் ஒதுக்கி, சர்வ சிங்கள மந்திரிசபையை அமைத்ததுதான் பெரிய அரசியல் தவறென்றும், இந்தத் தவறைத் திருத்த இப்போது திரு. தகநாய்க்காவுக்கு தங்க

[9ஆம் பக்கம் பார்க்க]



Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினுல் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினுல் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496
தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

# கொழும்பு நகர் மத்தியில் காட்சி அளிக்கும் ருஷ்யா

சென்ற புதன்கிழமை கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் சோவியத் வர்த்தகத் தொழில் பொருட்காட்சிஆரம்ப விழா நடைபெற்றது. இடி மின்னலுடன் பலத்த மழை. என்ருலும் மணி 4க்கு மழை நின்றது. சுமார் இரண்டாயிரம் பிரமுகர்கள் அழைப்பின் மீது வந்திருந்தனர். காட்சி சாலைக்கு உள்ளே நுழைந்ததும், ருஷியாவில் இருப்பதாகவே உணருகின்ருேம். லெனினின் பெரிய உருவச்சிலையுடன், அண்டவெளி சென்ற 'ராக்கெட் ஸ்பூட்னிக்' உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆனுல் அதைப்பற்றிய விவரம் எதுவும் அளிக்கப்படவில்லை.

அணு சக்திக் கருவிகள், மின்சார மெஷீன்கள், நெசவு, தையல், அச்சு, போட்டோ, டெலிவிஷன், முதலிய பல பல உபயோகமான இயந்திரங்கள் எல்லாம் கண்ணையும் கருத்தையும் கவரும்முறையில் வைக்கப்பட்டுள்ளன. உள்ளுக்குள்ளாகவே, ஒரு மச்சு. அதில் விதம் விதமான உடைகள், கலைப் பொருள்கள், பீங்கான் பண்டங்கள் முதலிய அழகான பொருள்கள் உள்ளன.

ஆருயிரம், பத்தாயிரம், முப்பதினுயிரம் விலையில் மூன்று வித புதிய மோட்டார்கள் ருஷியாவிலிருந்து தருவிக்கப்பட்டு காட்சிக்கு வைத்திருக்கப்பட்டுள்ளன. அழகான ரேடியோசெட்டின் விலை சுமார் 300 ரூபாய். வீட்டுப்பாவனைக்கு வேண்டிய எல்லாவித சாமான்களும் உள்ளன. ருஷியாவில் கைத்தொழில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளதென்பதை அங்கு காண முடிகின்றது. திறந்த வெளி சினிமா காட்சிச்சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. வெறும் கட்டாந் தரையாக இருந்த இடம் அழகானகாட்சி சாலையாக மிளிர்கின்றது. பார்க்கக் கட்டண மெதுவுமில்லை. ஆனுல் "க்யூ" வரிசையில் மணிக்கணக்காக நிற்க வேண்டியிருக்கும்.

சோவியத்வெளிநாட்டு வர்த்தக உதவி மந்திரி ஹோமிசின், காட்சியைத் திறந்து வைக்கையில் ருஷிய கைத்தொழில் முன்னேற்றத்தைப்பற்றிச் சொன்னுர். "சோவியத் யூனியனில் வேலையில்லாக் கஷ்டமே இல்லை. 30வருஷங்களுக்கு முன்பாகவே அது ஒழிக்கப்பட்டு விட்டது. ருஷிய தொழிலாளர் அனைவரும் ஒரு நாளைக்கு 7 மணி நேரமே வேலை செய்கின்றனர்" என்ருர்.

இலங்கை கைத்தொழில் உதவி மந்திரி வீரசேகரா, இலங்கைக்கு ருஷியா அளிக்கும் பொருளாதார உதவிக்கு நன்றி தெரிவித்துப் பேசினுர். காட்சி ஆரம்பமானதும் அடைமழையும் பிடித்துவிட்டது. சந்திரனைத் தாக்கும் ருஷியர்களாலும் இந்த மழையை நிறுத்த ஒரு வழி செய்யமுடியவில்லை!

## வரி விளம்பரம்

**அறிவித்தல்**

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வரரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்


# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

காலம் சென்ற சேர். பி. இராமநாதன் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய அரிய சேவையைக் குறைவாகக் கணிக்கவோ அல்லது மறந்துவிடவோ முடியாது. முன்னைநாள் தபால் வானொலி மந்திரி திரு. நடேசன் அவர்கள் பரமேசுவரக் கல்லூரியையும் இராமநாதன் கல்லூரியையும் அதற்குச் சொந்தமான நிலங்களையும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்காகப் பெருந்தன்மையுடன் உவந்தளிக்க முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதே. தமிழ் பேசும் மக்கள் திரு. நடேசன் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். அரசாங்கம் இதை ஒரு பிரச்சினையாகக் கருத மாட்டாது. ஆனால் தமிழ்மாகாணங்களில் கலாசாரத்தை வளர்க்க உதவுமென்ற நோக்கத்துடன் அதை வளர்க்க முன்வருவார்கள் எனக் கருதலாம். சில நல்ல எண்ணமுடைய பெரியார்கள் திருக்கோணமலையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ முயன்று கொண்டிருப்பது எவ்விதத்திலும் திரு. நடேசன் அவர்களின் கோரிக்கைக்குத் தடையாகக் கூடாது. அவர் சகல வசதிகளுடைய இரு கல்லூரிகளையும் அரசாங்கத்தின் உதவியுடன் பல்கலைக்கழகமாக மாற்ற எண்ணியுள்ளார். திருக்கோணமலையில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகம் எவ்வளவு சீக்கிரம் நிறைவுறுமோ அவ்வளவு நல்லது என்றே கூறலாம்.

யாழ்ப்பாணக் கல்லூரிகள் மாணவர்களை லண்டன் பல்கலைக்கழகப்பரீட்சைகளில் தோன்றுவதற்குத் தயார் செய்து கொண்டிருக்கின்றன. இலங்கைப் பல்கலைக்கழக அதிகாரிகள்வெளியிலிருந்து வரும் மாணவர்கள் இப்பரீட்சைகளில் பங்குபற்ற அனுமதித்தாலும் இப்பணிகள் துரிதமாகத் தொடர்ந்து நடைபெற வேண்டியதே. எங்களுடைய அனுபவத்திலிருந்து ஏழை மாணவர்களுக்கு வசதியளிக்க, அவர்கள் தமது நாட்டிலேயே தொடர்ந்து கல்விபெறப் பல்கலைக் கழகங்கள் பல தேவைப்படுகின்றன. இது நாம் அனைவரும் அறிந்ததொன்றே.

**எஸ். ஏ. வைத்தியலிங்கம்**
சுவாமியார் தெரு,
யாழ்ப்பாணம்.

## மக்கள் மனம் திருந்த வேண்டும்

யாழ்ப்பாணம் முன்னேற்றமடைந்து வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. எனினும் முன்னேற்றமடைய வேண்டிய அளவிற்கு முன்னேற்றமடையவில்லை என்றே கூற வேண்டும்.

தியேட்டர்காரர் ஒருவரை நான் சந்தித்து நல்ல கதிரைகளை உங்கள் தியேட்டரில் வாங்கிப் போட்டால் என்ன என்று கேட்டேன். யாழ்ப்பாண மக்களுக்கு அதைச் சரியாக உபயோகிக்கத் தெரியாது. அதனால் தான் நாம் 'குஷன்' போட்ட நல்ல கதிரைகளை வாங்கிப் போடுவதில்லை யெனக் கூறினர். அவர் கூறிய சில காரணங்கள் எனக்கும் சரியாகவே பட்டன. சிலர் சிகரட்டைப் புகைத்துவிட்டு அது எரிந்து கொண்டிருக்கும்போது கதிரையில் வைத்து விடுகின்றனர்.

பஸ்களிலும் மக்கள் சீட்களில் சாய்ந்து கொண்டு உரோஞ்சுவது, சுண்ணும்பு பூசுவது போன்ற அருவருப்பான பழக்கங்களைக் காண முடிகின்றன.

தியேட்டரில் நல்ல கதிரைகள் தேவை; பஸ்கள் புதியனவாகத் தேவை என்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் தாமும் அவற்றை நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ள மக்கள் பழகிக் கொள்ளவும் வேண்டும்.

ஆகவே, நம் நாட்டிலுள்ள பொருள்களை நாமும் நல்ல முறையில் பாவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை மக்களிடையே தோன்ற வேண்டும். இவ்வித எண்ணம் ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும்.

**ஆர். பாலசுப்பிரமணியம்**
யாழ்ப்பாணம்

## புதிய ஜே. பி.

### திரு. ரி. விநாயகமூர்த்தி

வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆசிரியராகவிருக்கும் திரு. ரி. விநாயகமூர்த்தி, பி. ஏ. புதிய சமாதான நீதவானாக (ஜே. பி.) நியமனம் பெற்றுள்ளார். சமூகத்தொண்டுகளில் ஈடுபட்டு உழைத்துவரும் இவ்வாசிரியர் 16 வருடகாலம் வட்டுக்கோட்டைக் கிராமச் சங்கத்தின் அங்கத்தவராக விளங்கினர். இப்போது தமது பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராகவும், மூளாய் ஆஸ்பத்திரியின் நிர்வாகசபை அங்கத்தவராகவும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஆஸ்பத்திரிகளைத் தரிசித்து அங்குள்ள நிலைமையை அறிபவராகவும் பணியாற்றி வருகின்றார்.

## உலக விழா நியூயோர்க் நகரில் நடைபெறும்

நியூயோர்க் நகரில் 1965-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் உலக விழா ஜனாதிபதியின் ஆதரவைப் பெற்றுள்ளது. நியூயோர்க் நகர் பல கோடி மக்களுக்குச் சுதந்திர சின்னமாக விளங்குகிறது. ஐ. நா. தலைமைக் காரியாலயம் அங்கு இருப்பதுடன், அந் நகர் கலை, கலாச்சாரம், வர்த்தகம், தொழில் முதலான பலவற்றில் உலகில் முன்னணியில் உள்ளது.

# ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையை மாணவிகள் கடைப்பிடித்தல் அவசியம்

### பரிசளிப்பு விழாவில் அரசாங்க அதிபர் கூற்று

— நமது நிருபர் —

அனுராதபுரம்

"மன்னரது மொழியாக மிளிர்ந்து இன்று மகாராணியின் மொழியாக விளங்கும் ஆங்கில மொழி உலகின் பல பாகங்களிலும் வேரூன்றிக் கிளையோடியுள்ள ஒரு மொழியாகும். அத்தகைய வளம் நிறைந்த மொழியிற் கல்வி கற்பது மிகவும் அவசியமாகும்" இவ்வாறு அனுராதபுரம் ஹோலி பமிலி கொன்வென்ட் (கன்னியர் மடம்) ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா பி. விஜேரத்தின கூறினர்.

தமது இளமைக் காலக் கல்வியின் பயனாகவே தாம் இன்றைய நிலைமையை அடைய முடிந்தது என்றும், பொதுவாகக் கத்தோலிக்கக் கல்லூரிகளில் ஒழுக்கத்தோடு கூடிய கல்வி போதிக்கப்படுகிறது. எனவும் அவர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "வேறொரு மாவட்டத்திலுள்ள ஒரு கன்னியர் மடத்தில் உள்ள பாலர் வகுப்பில்தான் என் கல்வியைத் தொடங்கினேன். அங்கு எனக்குக் கல்வி கற்பித்த 'மதர்' ஒருவர் எம்மை மிகவும் அன்புடன் அழைத்துப் பாலர் பாடல்களைச் சொல்லித் தருவது எனக்கு இன்னமும் நினைவிலிருக்கிறது. இன்று குழந்தைகள் பரிசுகள் பெற்றபோது அந்தக் காட்சி மீண்டும் நினைவில் உதித்தது. இந்தக் கன்னியர் மடத்தின் தராதரம் மிகப் பெருமளவில் உயர்ந்துள்ளது என்றும், வட மத்திய மாகாணத்திலேயே சிறந்த கல்லூரிகளில் ஒன்ருகத் திகழ்வதற்கு அதன் நிர்வாகிகளின் அசாத்தியத் திறமைதான் காரணமென நான் நம்புகின்றேன்.

### கொள்கைகளைப் பேணுக

புது நகருக்கு இப்பாடசாலையை மாற்றும் எண்ணத்தில் பல்வேறு முயற்சிகள் செய்யப்படுவதை நான் அறிந்துள்ளேன். அரசாங்கத்தின் கொள்கைப்படி அந்த மாற்றம் தவிர்க்க முடியாததொன்ருக இருக்கின்றது. மாணவிகள் ஒழுக்கம் கெடாத வாழ்க்கையைக் கல்லூரியை விட்டு விலகிய பின்னரும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை நான் இங்கு கூற விரும்புகின்றேன். இதுவே அவர்களது வாழ்க்கையில் இன்னல்களை விளைவிக்காமலிருக்கும். கூடிய மட்டில் தத்தம் கொள்கைகளைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதோடு, பிறரின் அவதூறுக்கு ஆளாகாமல் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும்.

ஆரம்பத்தில் கல்லூரியின் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டபோது, கல்லூரியின் சாதனைகளும், கல்வி, அறிவியல், விளையாட்டு ஆகிய துறைகளில் காட்டப்பட்ட முன்னேற்றங்களையும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

திருமதி விஜேரத்தின பரிசில்களை வழங்கினர். விளையாட்டுத் துறைகளில் முக்கிய வெற்றியீட்டிய டியோபன் இல்லத்துக்காக அதன் சார்பில் செல்வி டோரத்தி மிராண்டாவுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் மாணவியரின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

### பௌத்த மண்டலத்தின் கோரிக்கைகள் !

காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கொலை வழக்கு பற்றி நாடெங்கணும் எழுந்துள்ள கொந்தளிப்பினாலும், அரசாங்கத்தில் நம்பிக்கையீனம் எழுந்துள்ளதாலும் பிரதமர் கொலை வழக்கை ஒரு நீதிக் குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கவேண்டும் என்றும், அந்த வழக்கு முடியும்வரை எந்த ஒரு முக்கிய அரசியல் கட்சியோ, தனிப்பட்டவரோ பாராளுமன்றத்தைக் கலைக்க முயன்று நாட்டில் குழப்ப நிலையை உண்டாக்கவோ கூடாது என்றும் கோரும் இருதீர்மானங்களை அனுராதபுரம் பௌத்த மண்டலம் சமீபத்தில் நிறைவேற்றியது.

இக் கூட்டத்துக்கு திரு. டபிள்யு. ஏ. பி. ஆரியதாச தலைமைதாங்கிப் பேசுகையில், அனுராதபுரம் பௌத்த உலகின் ஒரு முக்கிய இடமாகத் திகழ்கின்றதெனவும் அதற்குப் பொறுப்பாளராக இருந்தவர் திரு. பண்டாரநாயக்கா என்றும் விளக்கமாகப் பேசினர்.

இதன் பின்னர் இராஜரட்டை விவசாயிகள் ஊர்வலம் கார்களில் சென்று ஹொரகொல்லையில் திரு. பண்டாரநாயக்கா கல்லறையைத் தரிசிக்கவும், ஊர்வலக் கார்களில் திரு. பண்டாரநாயக்காவின் இளம் பருவத்துப் படங்களை ஓவியமாகத் தூக்கிச் செல்லவும் முடிவு செய்யப்பட்டது.

### ஆசிரியருக்குப் பிரியாவிடை

அனுராதபுரம் அர்ச். சூசையப்பர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், உள்ளூர் சமசமாசக் கட்சியின் பொதுக் காரியதரிசியாக விளங்கியவருமான திரு. எல். பீட்டர் பெரேரா பி. ஏ. கொலனை வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக மாற்றப்பட்டுள்ளார்.

தலைமையாசிரியர் திரு. எஸ். ஏ. மரியாம்பிள்ளையின் தலைமையில் அவருக்கு ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது. தலைவர் உட்பட வேறும் பலரும் பெரராவைப் பாராட்டி அவரது குணதிசியங்களை எடுத்துரைத்தனர்.

# பட்டின சபைத் தேர்தல் ஆரம்பம்

### தரம் கெட்ட பங்கீட்டு அரிசி

— நமது நிருபர் —

மட்டக்களப்பு

மூன்று வருடத்திற் கொருமுறை நடைபெறும் பட்டின சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தேர்தல் அதிகாரி திரு. பி. முருகேசு ஏற்றுக் கொண்டார். நாலாம் வட்டாரத்துக்குத் திரு. க. அழகரத்தினமும், ஒன்பதாம் வட்டாரத்துக்கு திரு. ஆர். கதிரவேலுவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற எட்டு வட்டாரங்களில் 17 அபேட்சகர்கள் போட்டியிடுகிருர்கள். இவர்களில் ஆறு பேர் தற்போதைய அங்கத்தவர்கள். இருவர் பழையஅங்கத்தவர்கள். மிகுதி 9 பேரும் ஸ்தலஸ்தாபன அரசியலில் புதிதாகக் குதிப்பவர்களாவர். தேர்தல் சுரம் இன்னும் தோன்றவில்லை.

தேர்தல் இம்மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

### 13ஆவது கூட்டுறவு மாநாடு

மட்டக்களப்பு மாவட்டக் கூட்டுறவு மாநாட்டை உணவு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். அவர் கூட்டுறவு இயக்கத்திற் சேர்ந்தவர்கள் நடுவு நிலையும், நேர்மையும் தவருதவர்களாயிருக்க வேண்டுமெனக் கூறி, அப்படித்தான் பழந் தமிழர்கள்வாழ்ந்தார்களௌனச் சங்க இலக்கியத்தில் மேற்கோள் காட்டினர். மாவட்ட சங்கத் தலைவர் தாம் ருஷியாவிலும், மற்ற நாடுகளிலும் பெற்ற அனுபவங்களை எடுத்துரைத்தார்.

இம்மாநாட்டில் உணவு, வியாபார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி. பி. முனகுலம கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். அவர் அடுத்த முறை தமிழ்ப் பகுதிகளில் பேச வேண்டியேற்பட்டால் தமிழில் பேசத் தம்மைத் தயாரித்துக் கொள்ளப் போவதாகக் கூறினர். அவர் சபையில் நிறைவேறிய பிரேரணைகளைக் கவனிப்பதாக வாக்களித்தார்.

கூட்டுறவுக் கமிஷனர் திரு. பி. ஈ. வீரமனும், திரு. ஆர். இராசரத்தினமும் சொற்பொழிவாற்றினர்கள். பெருந்தொகையான பெண்கள் மாநாட்டிற் கலந்து கொண்டது விருந்தினர் அனைவரையும் பெரிதும் கவர்ந்து விட்டது.

### பண்டசாலை அரிசி பற்றிப் பலத்த கண்டனம்

பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் மிக மோசமாக விருப்பதால் உயர்ந்ததரஅரிசிவிநியோகத்திற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனக் கூறும் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் திரு. எம். சிவநேசராசா "மிருகங்களுக்கும் உதவாத மணமும் நிறமும் கொண்ட அரிசி விநியோகிக்கப்படுவதால், பொது மக்கள் அரிசிக்கு வழங்கப்படும் மானியத்தை அனுபவிக்க முடியாது போய் விடுகிறதென்றும்கள்ளச்சந்தை வளர்கிறதென்றும்" கூறி முக்கிய உணவான அரிசியின் தரத்தைக் குறையாமலிருக்கப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டார். அதிகாரிகள் இப் பிரச்சினையைக் கவனிக்க ஒப்புக் கொண்டார்கள்.

மட்டக்களப்பிலுள்ள ஐம்பது மைல் நீளமான வாவியைக் கடக்க உபயோகிக்கப்படும் பல துறைகளின் சேவையின் படுமோசமான நிலையை எடுத்துக்காட்டி அவை யாவற்றுக்கும் இயந்திரப் படகுச் சேவை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரும் பிரேரணையும்; விவசாயிகளுக்கு அவர்களது பூமி விஸ்தீரணத்தைக் கவனியாது மானியப் பசளை வழங்க வேண்டுமெனக்கோரும் தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன.

### கூட்டுறவு நிலையத் திறப்பு விழா

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் அமைக்கப் பட்டுக் கனடா நிதி உதவியுடன் விஸ்தரிக்கப்பட்ட கூட்டுறவுக் கல்வி நிலையத்தைக் கனடிய ஹை கமிஷனர் கௌரவ நிக்கவல் திறந்து வைத்தார்.

### மத்திய கல்லூரியில் விஞ்ஞான, கைப்பணிக் காட்சி

மட்டக்களப்பு மெதடிஸ்ற் மத்திய கல்லூரியில் சிறந்ததொரு விஞ்ஞான கைப்பணிக் காட்சி நடைபெற்றது. இக் காட்சியை அமெரிக்கத் தூதுவர் காரியாலயப் பொதுஜனத் தொடர்பதிகாரி திறந்து வைத்தார். ஏராளமான மாணவர்களும், ஆசிரியர்களும் காட்சியைப் பார்த்துப் பயன் பெற்றனர்.

பாரத நாட்டை ஒரு தேசிய சமுதாயமாக்கி, தேசாபிமானத்தை வளர்த்து அதை ஐக்கியப்படுத்தி பாதுகாக்க வேண்டுமாயின், பிரிட்டனிலுள்ளது போன்ற அரசியல் அமைப்பே சாலச்சிறந்தது. சமஷ்டி முறை முற்றிலும் தகுதியற்றதென பாரத நாட்டு முன்னாள் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதியரசரான மேகர் சந்திரமகாஜன் கூறுவதுடன், இன்று இந்தியாவிலே பல பல ராஜ்யங்களிலுமுள்ள அரசியல் ஊழல்களையும், பிளவுகளையும் இக் கட்டுரையில் அம்பலப்படுத்துகின்றார்.

# "இந்தியா ஒற்றுமைப்பட வேண்டுமானால் சமஷ்டி முறை நீங்கி பிரிட்டனிலுள்ளது போல் ஒற்றை ஆட்சி ஏற்படவேண்டும்"

சமஷ்டி அரசியல் அமைப்பு அரசியல்வாதிகளிடையே ஒரு சுயநல ஆசையைக் கிளப்பி விடுகிறது. ஒருபகுதி எவ்வளவு சிறிதாக இருப்பினும், அதைத் தனி அரசாக்கி, அங்கு தாங்கள் ஆளவேண்டுமென்ற ஆசையே அது.

டில்லியிலே ஒரு சூழ்ச்சிக்கார அரசியல் கும்பலுள்ளது. அக்கும்பல், டில்லிநகரை ஒரு தனி அரசாக்கிவிடவேண்டுமென்று என்னென்னவோ செய்கிறது. பல ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. அங்கு நகரசபையில் இப்போது தங்கள் சூழ்ச்சிக் கைவரிசையைக் காட்டுகின்றனர்.

'இமாசலம்' என்பது மிகவும் சிறிய பகுதி. அங்கு பொருள்வசதி இல்லை. அதுவும் தனி ராஜ்யமாகவேண்டும். இது பற்றிய கூச்சல்கள் கிளம்புகின்றன. பஞ்சாபிலே சட்டசபையில்லாமல் கவர்னரே சில ஆலோசகர்களைக்கொண்டு ஆட்சி நடத்தியிருந்தால், அங்கு உணவுப் பஞ்சங்கள் ஏற்பட்டிராது. இப்போது பேச்சுக்கள், உபதேசங்கள், பயனற்ற இவற்றுக்குத்தான் அங்கு பஞ்சமில்லை. கொடுக்கும் உறுதிமொழிகளை அவர்களால் என்றும் நிறைவேற்ற முடியாது.

வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கடலை நோக்கி வருவோம். கேரளம் ஒரு சிறிய ராஜ்யம். கொச்சி, திருவாங்கூர் என்ற இரு சமஸ்தானங்களைப் பிணைத்து இப் புதிய ராஜ்யம் உருவாக்கப்பட்டது. அங்கு சமஷ்டி அரசியலமைப்பினால் நடப்பதென்ன என்று பார்ப்போம்.

## இலட்சியத்தை முறியடிக்கும்

அரசியல்முறை சமஷ்டியாக இருப்பினும் எல்லா ராஜ்யங்களிலும் காங்கிரஸ்கட்சியே மெஜாரிட்டியாக இருப்பதாலும், காங்கிரஸ் தலைமைப்பீடமே அவர்களை ஆட்டிவைப்பதாலும், அரசியல் திட்டம் முறியாமல் உள்ளது. நாட்டு நிர்வாகம் உண்மையில் ஒற்றை ஆட்சிபோலவே நடக்கின்றது. மண்டல ராஜ்யங்கள், வேறு கொள்கைகளும், லட்சியங்களுமுள்ள கட்சிகளின் ஆதிக்கத்துக்கு வருவதாயின், என்னநேரிடுமென்பதைப்பற்றி நான் முன்னர் ஒருசமயம் கூறியிருந்தேன். ராஜ்ய அரசுகளுக்கு, கல்வி, சட்டம், ஒழுங்கு, விவசாயம், பொலிஸ், சுகாதாரம், சிறை முதலிய நிர்வாகம்பற்றி விசேஷ அதிகாரங்களுண்டு. இவ்விஷயங்களில் தலைமை அரசாங்கம், மாகாண அரசுகளின் அதிகாரத்தில் தலையிட முடியாது. ஆயுதபாணிகளான பொலிஸ்படைகள் தங்கள் கட்சிக்காரரைக்கொண்டே அமைத்துக்கொள்ளலாம். தங்கள் கட்சி இலட்சியங்களை நிறைவேற்றும் முறையில் கல்வித்திட்டத்தை வகுக்கலாம். தங்கள் கட்சியினருக்கே நிலங்களை வழங்கும் முறையில் சட்ட திட்டங்களை வகுக்கலாம். அவர்கள் அடிப்படை உரிமைகளையெல்லாம் அலட்சியம் செய்து தலைமை அரசாங்க அதிகாரத்தையும் மீறி, ஒரு தனியான சுதந்திர ராஜ்யமாகப் பிரிந்துவிடவும் முற்படலாம். அதுபோன்று பொதுத் தேர்தலின் பயனாக அரைடஜன் தனி ராஜ்யங்கள் ஏற்படுமாயின், வலதுசாரி அல்லது இடதுசாரிக் கட்சிகள் அங்கு ஆட்சி செலுத்தி தங்கள் கட்சி நலனையே கருதுவதாயின், இந்தியாவின் ஒற்றுமை சிதையும். பாரத நாட்டின்மீது தேசாபிமானமென்பது பெரிதும் குறையும். சமஷ்டி அரசியலால், நிர்வாகத்திலே பல சங்கடங்கள் ஏற்படுவதுடன், நாட்டை ஒன்றுபடுத்தும் லட்சியத்தை முறியடிக்கும். தங்களது கல்வி, மொழிக் கொள்கைகளால், ஒரு ராஜ்யமக்களை, அண்டை ராஜ்ய மக்களிடமிருந்து பிரித்து, அவர்களை அன்னியர்களாக்கவும் செய்யும். அன்று நான் என்ன நினைத்தேனோ அது கேரளத்தில் இன்று உண்மையாயிற்று. அங்கு கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கப் பொறுப்பேற்றதும், தங்கள் கட்சியின்லட்சியங்களைப்பரப்ப, தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினர். அரசியல் திட்டத்தைத் தங்கள் கட்சிக்காரரின் நன்மைக்காக உபயோகித்தனர்.

இதெல்லாம் ஏற்பட்டது சமஷ்டிஅமைப்பினால்தான். பல சட்ட, நிர்வாக அதிகாரங்கள், சுயாட்சி பெற்ற ராஜ்யங்களில் அவர்களுக்குக் கிடைப்பதாக இருக்கின்றன. பிரிட்டனில் உள்ளது போல் ஒற்றை ஆட்சி முறை இருப்பின், அதிகாரத்துக்கு வரும் கட்சி நாடனைத்தினதும் நிர்வாகத்தை நடத்துகின்றது. ஸிவில் சர்வீஸைப் பாதிக்காமல் தனது கொள்கைகளின்படி நாட்டை நிர்வாகிக்கின்றது. ஸ்கொட்லந்தில் ஒரு ஆட்சியும், வேல்ஸிலே வேறொரு வித ஆட்சியும் இருப்பதில்லை.

பாரத நாடு கம்யூனிஸ்ட் மயமாயினும் சரி, அது ஒரே ஐக்கிய பாரத நாடாக இருக்கும். கம்யூனிஸ்ட் லட்சியத்தை ஆதரிக்கும் ஒரே பாரதமாக இயங்கும். இதற்கு மாறாக அது வலதுசாரி ஆட்சிக்கு உட்படினும் அப்பொழுதும் ஒற்றை ஆட்சிமுறைப்படி ஒரே பாரதமாக இயங்கும். தேர்தலில் எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் சரி, அந்தக் கட்சியின் கொள்கையின்படி நாடெங்கும் சீரான ஒரே ஆட்சியாக அமையும்.

## நிர்வாகங்களிலுள்ள குறை

பஞ்சாப், கேரளம் இம்மாகாணங்களிலுள்ள நிர்வாகத்திலே என்ன குறைகளுள்ளன வென்று குறிப்பிட்டேனோ அவையே மற்ற ராஜ்ய நிர்வாகங்களிலுமுள்ளன. வங்காளத்திலே டாக்டர் பி. ஸி. ராயின் செல்வாக்கினால் வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அங்கு சில சமயம் கிளர்ச்சிகள் ஏற்படுகையில், பல கோஷ்டிகளும், கும்பல்களும், கட்சிகளும், லஞ்சம், சுயநலம் முதலிய ஊழல்களும் அம்பலத்துக்கு வருவதைக் காணலாம். சென்ற முறை மந்திரிகளில் ஒருவர் அங்கு ராஜினாமாச் செய்தபோது, அங்குள்ள ஊழல்கள் சற்றே வெளிப்பட்டன. 1950ஆம் வருட அரசியல் அமைப்புச் சட்டப்படி, வங்காளிகளுக்கு, வங்காளி அல்லாதவர் மீது வெறுப்பு அதிகரித்து வருகின்றது. அங்கு ஹை கோர்டுக்கு வெளி மாகாணத்திலிருந்து ஒருவரை நியமிப்பது அசாத்தியமாகும். கண்டனங்கள் கிளம்பும். பாரத நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி உயிர் நீத்த பல அரிய தேசாபிமானிகளை வங்காளம் ஈன்றெடுத்தது. அகில இந்திய புகழ்பெற்ற தலைவர்களைத் தந்தது. அவர்கள் இந்தியாவை ஒரே தேசமாக இணைத்தனர். ஆனால் இப்போதோ "வங்காளம் வங்காளிகளுக்கே" என்ற கூச்சலும் எண்ணமும் தான் ஓங்கி வருகின்றன.

## போட்டி மனப்பான்மை

இந்தியாவிலேயே உத்தர பிரதேசம்தான் ஆகப் பெரிய ராஜ்யமாகும். தலைமை மந்திரி சபையில், அந்த ராஜ்ய தலைவர்கள் பெரிய பதவிகள் வகிக்கின்றனர். காங்கிரஸின் மேலிடத்திலும் அவர்கள் இடம் பெற்றுள்ளனர். கோஷ்டி சூழ்ச்சிகள் கிளம்பாதபடி தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்துகின்றார்கள். ஆனாலும் பஞ்சாபிலுள்ளதைவிட உத்தர பிரதேசத்தில் கோஷ்டிப் பிரிவினைகள் அதிகமுள்ளன. இப்போது அந்தக் குமிழி வெடிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. சமாளிக்க முடியாதபடி நிலைமை மோசமாகிவிட்டது. தனிப்பட்டவர் அதிகார ஆசை கொண்டு போட்டி போடுகிறார்கள். நிர்வாகம் மோசமாக இருப்பதாகக் காரணம் சொல்லப்படுகின்றது.

அதிகாரத்திலுள்ள கோஷ்டிக்கு ஆதரவு தேடுவதற்காக மந்திரிகளின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் வருகின்றனர். 'ஆமாம் சாமி' போடாதவர்களை வெளியேற்றிவிடுவர். எல்லாரும் ஒரே கட்சிதான். அதனால் கொள்கையில் வேற்றுமை கிடையாது. சில ராஜ்ய மக்களுக்கு உத்தர பிரதேச மக்கள் மீது வெறுப்பும் துவேஷமுமுள்ளன. அங்கு பேசப்படும் இந்திக்கு மாறாகவும் எதிர்ப்பு கிளம்புகிறது. உத்தரபிரதேசத்துக்கும் வேறு சில ராஜ்யங்களுக்கும் போட்டி மனப்பான்மை அதிகரிக்கின்றது. இவ்வித நிலை, நாட்டின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பலப்படுத்த உதவுமென்று கூறமுடியுமா? சமஷ்டி அரசியல் அமைப்பும், மாகாண சுயாட்சியும்தான் இந்த விஷமத்துக்குக் காரணமாகும். உத்தர பிரதேசத்தின் கிழக்குப் பகுதி தனி ராஜ்யம் வேண்டுமென்று கேட்கிறது. பிளவுபட்டுப் பிரிந்து செல்ல வேண்டுமென்ற உணர்ச்சிகளே அதிகரிக்கின்றன. ஒற்றுமையாக, ஒரே தேசிய சமுதாயமாக வேண்டுமென்ற நோக்கம் மறைகின்றது.

ராஜஸ்தானைப் பற்றிய சில உள் அந்தரங்கங்களை நான்றிவேன். பிக்கனீர் மகாராஜாவின் ஆலோசகராக நான் சில மாதங்கள் இருந்ததால் அங்குள்ள கட்சிகள், கோஷ்டிகள், சூழ்ச்சிகள் இவற்றை நான் அறிவேன். அங்கு அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளின் ஒரே நோக்கம் என்னதெரியுமா? எப்படியும் தங்கள் பதவிகளை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கவேண்டுமென்பதும், எதிராளிகளை ஒதுக்கித்தள்ள வேண்டுமென்பதுமேயாகும்.

## பிரதேசங்களுக்கிடையே ஒற்றுமையில்லை

ஜெயபுரியை தலைநகராகக் கொண்டு பல சமஸ்தானங்கள் ஐக்கியப்பட்டு ராஜஸ்தான் ராஜ்யமாகியது. ஹைகோர்ட்டை எங்கே அமைப்பது என்பது பற்றி ஜயபுரிக்கும் ஜோதிபுரிக்கும் அதிக தகராறு ஏற்பட்டது. பாரதநாட்டின் மீது அங்கு எவ்வளவு அபிமானம் உள்ளதென்பதை அந்தத் தகராறு நிரூபித்துக் காட்டியது. ஜோதிபுரிமக்களும், ஜெயபுரி மக்களும், வேறுபட்டவர்களென்ற எண்ணம் அதிகமுள்ளது. ஒற்றைஆட்சி இருந்தால், மாகாண, ராஜ்ய பொறாமைகளும்குரோதங்களும் வளரா. நாடனைத்தும் ஒரே ஆட்சியின் கீழிருப்பின், ஆட்சியாளரும், ஜாகிர்தர்களும் அதற்கு அடங்கியிருப்பர். தங்களுக்கு பதில் வேறு புதிய தலைவர்கள் அந்தந்த இடங்களில் கிளம்புவதை அவர்கள் வெறுக்கிறார்கள்.

ஆந்திராவிலே, ஹைதரபாத்தின் பழைய மதிப்புமிக்க கலாசாரமும், மொழியும் படிப்படியாக மறைந்து வருகின்றன. தெலுங்கு, தெலுங்கல்

[5ஆம் பக்கம் பார்க்க]

# குழந்தைகள் நாட்டின் செல்வம்
# நாடெங்கும் தேசீயக் குழந்தைகள் விழா

— அஜன் —

பாதுகாப்பு, நல்ல வாய்ப்பு, அன்பு, உரிமை, ஆதரவு, நம்பிக்கை என்பன குழந்தைகளின் அதிமுக்கியமான அடிப்படைத் தேவைகளாகும். கலைக்கோயிலொன்றின் செங்கற்களை அகற்றும் போது கட்டடமே தகர்ந்துவிடுகின்றது. அதே போன்று பேசும் பொற்சித்திரங்களான குழந்தைகளின் அடித்தளக் கற்களாக அமைந்துள்ள மேற் கூறிய பண்புகளில் ஒன்றுதானும் பாதிக்கப்படுமாயின் குழந்தைகளின் எதிர்கால வாழ்வே சரிந்துவிடும். பெற்றோரும்சூழ்ந்துள்ள சமூகமும் இதனை உணர்ந்து குழந்தைகளைக் கண்ணின் மணிகளாகப் போற்றிப் பேணவேண்டியவர்களாகின்றனர். இந்த அடிப்படையில் எழுந்துள்ளதே இக் கட்டுரை.

சின்னஞ் சிறு கிளியே,—<br>
கண்ணம்மா!<br>
செல்வக் களஞ்சியமே!<br>
என்னைக் கலிதீர்த்தே—உலகில்<br>
ஏற்றம்புரிய வந்தாய்.

ஆம், உலகில் ஏற்றம்புரிய வந்துள்ள பேசும் பொற் சித்திரங்களாகிய குழந்தைகள் நாட்டின் செல்வமாகும்.

சென்ற சில வருடங்களாக ஒக்டோபரில் உலகக் குழந்தைகள் தினம் இலங்கை முழுவதிலும் கொண்டாடப்பட்டுவந்தது. சென்ற மாதம் நாட்டில் எழுந்த அவசர காலச்சட்டமும் பயங்கரச் சூழ்நிலையும் குழந்தைகள் தினத்துக்குக் குந்தகம் விளைத்துவிட்டன. ஆகவே, இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரையும் தேசியக் குழந்தைகள் வாரம் நாடெங்கணும் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இளம் குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் அரசாங்கப்பகுதியினரதும், அகில இலங்கை குழந்தைகள்பொதுநலசங்கத்தினரதும் ஆதரவில் இவ் வாண்டு தேசியக் குழந்தைகள் வாரம் கொண்டாடப்படுகின்றது.

தவறுதலான சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தைகளை அச் சூழ்நிலையிலிருந்தும் விலக்கி நல்வழிப்படுத்தல் வேண்டும். ஆருமற்ற அனாதைகளும், தேடுவாரற்ற குழந்தைகளும் பரிவுடன் பாதுகாக்கப்பெற்று உதவியளிக்க வேண்டும். இந் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இவ் வாண்டு தேசியக் குழந்தைகள் விழா இலங்கையில் கொண்டாடப்படுகின்றது.

## அடிப்படைத் தேவை

ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையான சில தேவைகள் உள. உரிமைபெற்றவர்களாக வாழவும், நல் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து சமூகத்தின் கட்டுக்கோப்புகளுக்கு அமைய நடக்கவும் அவர்கள் பழகிக்கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள்.

உண்ண உணவும் உடுக்க உடையும் உறங்குவதற்கு இல்லங்களும் தமக்குஉண்டு என்ற நம்பிக்கை ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படவேண்டும். தான் வசித்துவரும் வீட்டில் தனக்கென ஓர் இடம் உண்டு என்ற எண்ணம் குழந்தைகளின் உள்ளத்தில் ஊன்றிப் பதியவேண்டும். இவற்றினும்மேலாகப் பெற்றோர்கள் தனக்கு என்றுமே உதவியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை உதிக்க வேண்டும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதோ ஒரு துறையில் திறமை இருக்கிறது. அத் திறமைகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் தமக்குக் கல்வி அறிவும் பயிற்சியும் கிடைக்குமென அக் குழந்தை அறிந்துகொள்ளக்கூடிய நிலைமை உண்டாக வேண்டும்.

தமது திறமைகள் தமக்கு மாத்திரமின்றிச் சமூகத்துக்கும் பயன்படல்அவசியம் என்ற எண்ணம் அவற்றின் நெஞ்சில் உதயமாக வேண்டும்.

அன்பே உலகை வெல்லும் ஆயுதம் என்பதை நாம் அறிவோம். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்து' என்பது ஆன்றோர் வாக்கு. பெற்றோர்கள், தம்மீது அன்பைப் பொழிந்து வருகின்றார்கள் என்ற உணர்வும், இந்தப் பரந்த உலகிலே தம்மைப் பேணி வளர்ப்பதற்கு பலர் இருக்கின்றனர் என்ற நினைவும்

[6ஆம் பக்கம் பார்க்க]


### வாடகைக்கு

5 அறைகள், 1 கூடம் (ஹோல்) சாப்பாட்டு அறை, அடுக்களை, கார் கராச், மாட்டுக்கொட்டில்,குளிக்கும் அறை, பைப் (Pipe) மூலம் தண்ணீர், மின்சார வசதி, றெயினேச் (Drainage) வசதிகளும் உள்ள வீடு யாழ்ப்பாணம், 49, அரசடி வீதியில் வாடகைக்கு இருக்கிறது.

விபரங்களுக்கு: திருமதி S. நடராஜா, 49, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 9. மாற்றுவழி

"என்னப்பா வேலாயுதம் நித்திரை கொண்டிற்ருயா?" அந்தக் கிழவியின் சன்னமான குரலைக்கேட்டு எழுந்தான் வேலாயுதம். அவனுக்கு எப்போதுமே கோழித்தூக்கந்தான். ஆழ்ந்து நித்திரை செய்வதென்பது கிடையாது. அதுவும் மத்தியான வேளையில் அரி வெய்யிலிற் படுப்பதென்ருல் முடியுமா?

எழுந்து பார்த்த போது நாலைந்து பெண்கள் தலைச்சுமையைக் கீழே இறக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோருமேபேரிளம் பெண்கள்தான். வெய்யிலில் நடந்து வந்ததினல் அவர்கள் மேற்சட்டை தெப்பமாக நனைந்து, சுருக்கம் விழுந்த அவர்களது வற்றிய உடம்புகளோடு ஒட்டிப் போயிருந்தன. தள்ளாமையின் அலுப்பினல் ஓடிக்களைத்த பந்தயக் குதிரைபோல இளைத்தார்கள்.

"குளுகுளு என்று காற்றடிச்சுது. கண்ணை மூடியதே தெரியவில்லை. நித்திரையாய்ப் போயிற்றேன்" என்ருன் வேலாயுதம்.

"வெயில் தீய்க்குதுதம்பி. எங்களுக்கு நேரமில்லை. வா போவோம்" என்று துரிதப்படுத்தினுள் அப்பெண்களில் ஒருத்தி.

"ஆமாம், வா போவோம்" என்று மற்றப் பெண்களும் ஒத்தூதினுர்கள்.

"ஒரு கை பிடிச்சுடுடா தம்பி" என்று கீழே குனிந்தாள் அவர்களில் வயதில் மூத்தவளான வள்ளியம்மை.

வேலாயுதம் குனிந்து பெட்டியைத் தூக்கி அப் பெண்ணின் தலையிலே வைத்தான். பெட்டி பாரமாகத்தான் இருந்தது. எப்படியும் ஐம்பது இருத்தலாவது இருக்கும்.

மற்றப் பெண்களின் பெட்டியையும் தூக்கி ஒவ்வொருவர் தலையிலும் வைத்துக் கொண்டே, "ஒருத்தரையும் காணவில்லையே. தண்டு வலிக்க ஒரு ஆம்பிள்ளையும் இல்லையே" என்று அலுத்துக் கொண்டே,

"வா தம்பி! எங்கட்கு நேரம் இருக்கா? வீடு வீடாத் திரிஞ்சு விலைப்படுத்த வேணும். இப்பவே மத்தியானமாப் போச்சு. தனியவாச்சும் கொண்டு போய் விடு" என்ருள் வள்ளியம்மை.

அவள் சொல்வதில் அர்த்தம் இருக்கவே இருந்தது. எப்படியும் அவர்கள் மூதூர்க் கிராமத்தை அடைவதற்கிடையில் மதியந் திரும்பியே விடும். மாசி மாதம் பனி பெய்யத் தொடங்கி விட்டால் காய் கறிக்கும் என்ன பஞ்சமா? வெண்டிக்காயும் கத்தரிக்காயுமாகத் தெருவெல்லாம் புழுத்துப் போயிருக்கும். இந்தக் கொள்ளை மலிவில், வள்ளியம்மை தன் இருபது ருத்தல் கத்தரிக்காயையும், இருபத்தைந்து ருத்தல் வெண்டிக்காயையும் ஒரு ருத்தல், அரை ருத்தலாக விற்றுத் தீர்க்க வேண்டுமே. அதுமட்டுமா? விற்ற பிறகு மறுபடியும் திரும்பி நடையாக நடந்து வீட்டுக்குத் திரும்ப வேண்டும்.

வேலாயுதத்துக்கு இரக்கம் மேலிட்டது. தனியேயாகிலும் அப் பெண்களை அக்கரைக்குக் கொண்டு போகத்தான் வேண்டும் என்று அவன் தீர்மானித்து விட்டான். வள்ளத்தையும் ஆற்றிலே தள்ளினுன்.

இப்போது அவன் பின்னணியத்திற் சுக்கான் பிடித்தபடி அசமந்திருக்க முடியாது. துடுப்பு வலிக்க எவருமே இல்லை. நீரை எதிர்த்து அங்குலம் அங்குலமாக முன்னேற வேண்டும்.

சவளைத் தண்ணீரில் துழாவி வலிப்பதை விட நிலத்தில் ஊன்றித் தள்ளிக் கொண்டு போவதுதான் இலேசானது. எனவே ஆற்றங்கரையோரமாகக் கோரைப் புற்களின் அருகாமையிலே சவளை நிலத்தில் ஊன்றித் தள்ளிக் கொண்டிருந்தான். வள்ளமும் பிரயாசையோடு முன்னேறிக் கொண்டிருந்தது.

கோரைப் புற்களின் நடுவே, ஆற்றுமுள்ளிகளின் மெல்லிய முகையையும், நீலப்புரு போன்ற முள்ளிப் பூக்களையும் இரசித்துக் கொறித்துக்கொண்டிருந்த எருமைகள், வள்ளம் கரையோரமாக வருவதைக் கண்டு பயந்து, கோரைப் புற்களைத் துவைத்து மிதித்துக் கொண்டு ஓடின. அவைகளின் ஓட்டத்தைத் தொடர்ந்து, நிச்சலனமாக ஆனல் கூரிய கண்களோடு குறி பார்த்துக் கொண்டிருந்த மீன்கொத்திப் பறவைகள், கீ, கீ என்று கத்திக்கொண்டு பறந்தன.

தோணி கரையோரமாக ஊர்ந்து செல்கையில் வேலாயுதம் கேட்டான் "எப்படியம்மா; காய்கறி நல்லாக் காச்சிருக்கா?"

ஆமாம்; 'ஆற்றுப் பெருக்கற்றடிசுடு மன்னுளும், ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்' என்ற வெண்பா வேலாயுதத்துக்குத் தெரியாது. அதன் காரணம், மகாவலிகங்கை என்றைக்குமே வற்ருது என்பதல்ல. வேலாயுதத்துக்கு வெண்பாவே தெரியாது என்பதுதான். ஆனல் மழையின்றிக் கண்டக்காடு என்ற வயல்வெளியிலே வெள்ளாண்மை தீய்ந்து கருகிப் போய்விட்டாலும், ஒவ்வொருவரின் வயலினதும் காவற்குடிசை அமைந்திருக்கும் மேட்டு நிலத்தில், மனித முயற்சியின் காரணமாக வள்ளியும், வற்ருளையும், வெண்டியும், கத்தரியும், மிளகாய்ச் செடியும் செழுமையாக வளர்வதை அவன் கண்டிருக்கிருன்.

புரட்டாசி மாதம் வயல் விதைப்பு முடிந்ததும், எல்லா உழவர்களுமே மேட்டு நிலத்தில் பயிர் ஏற்றிவிடுவார்கள். மழை பொய்த்தால் என்ன? தோண்டப்பட்ட 'துரவு' என்ற கிணறுகளிலிருந்து குடங்குடமாகத் தோளிலே தண்ணீர் சுமந்துகொண்டு வந்து பயிர்கட்கு ஊற்றுவார்கள். குடத்துத் தண்ணீரைப் பயிர்கட்கு ஊற்றுகையில், அக் கமக்காரர்களின் நெற்றி வியர்வையும் குடத்துத் தண்ணீரோடு சேர்ந்து நிலத்தில் விழும்.

தைமாதம் பனி கொட்ட ஆரம்பித்ததும் பயிர்கள் எல்லாம் பூவும் பிஞ்சுமாக இருக்கும். வியாபாரி வயலுக்கே போய் வாங்குவதென்ருல் அருவிலைக்குத்தான் வாங்குவான். இருத்தல் பத்துச்சதத்துக்குக் கொடுக்க முடியுமா? அதனுற்தான் அந்தப்பெண்கள் காய் பிஞ்சுகளைத் தங்கள் தலையாலேயே சுமந்துசென்று விற்கவேண்டியிருக்கிறது!

இந்தவருடம் மழை பொய்த்து நெற்பயிர் அழிந்துவிட்டது. கருகிய காடாகத் தோன்றும் கண்டக்காட்டு வெளியிலே, இடைக்கிடை தோன்றும் இந்தப் பசுமையும் இல்லாவிட்டால்...... என்று எண்ணினுன் வேலாயுதம்.

அவன் சிந்தனை மேலும் நீண்டுபோவதற்கிடையில் வள்ளியம்மை பதில் சொன்னுள். "பயிர் எல்லாம் நல்லாத்தான் தம்பி காய்ச்சிருக்கு, ஆனல் விற்றுக் காசாக்குவது தான் பெரியகாரியம். இராசவள்ளியையும் கச்சான் கொட்டையையும் வைத்திருந்து விற்கலாம். வெண்டிக்காயை என்ன செய்வது? ஒருநாள் பிந்திச் சென்ருல் நெத்தாப் போயிடும்" என்ருள் கிழவி.

அவள்சொல்வது சரிதான். பூமித்தாய் தன்னை நம்பியவருக்கு என்றைக்குமே துரோகம்பண்ணுவதில்லை. எதை நிலத்திற் போட்டாலும் பலன் கிடைக்கத்தான் செய்கிறது. ஆனல் அதை விற்றுக் காசாக்கவேண்டுமே. எப்படி என்றுதான் வேலாயுதத்துக்கு விளங்கவில்லை.

தயிர்க்காரன் சொல்லியது அவனுக்கு ஞாபகம் வந்தது. கொழும்பு முதலாளி தயிரை எல்லாம் 'வானில்' ஏற்றிக் கொழும்புக்கு அனுப்புகிருனுமே, கொழும்பிலே என்ன இழவைக் கொண்டுபோனுலும் விலைப்பட்டுவிடுமாமே, நியாயமான விலைக்கு இங்கே காய்கறிகள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு, அந்த முதலாளி கொழும்புக்குக் கொண்டு போய் விற்ருல் என்ன? அதை விட்டுவிட்டுத் தயிரை ஏற்றுமதி பண்ணி எத்தனையோ ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிருன்?

இப்படிச் சிந்தித்தபடியே வேலாயுதம் வள்ளத்தை ஊன்றிச்செலுத்துவதை கணத்துக்கு மறந்துவிட்டான். நீர்ச்சுழியிற் சிக்கிய தோணி 'டக்'கென்று இடப்பக்கமாகத் திரும்பிக் கோரைப் புற்களிடையே செல்லும் போலத் தோன்றிற்று. தன் பலத்தையெல்லாம் முன்னங்கையிற் சேர்த்துச் சவள் வலித்து வள்ளத்தை நேராக்கி, மறுபடியும் நிலத்தில் ஊன்றித் தோணியை முன்னேற்றினுன் வேலாயுதம். இதோ;. நாணல் முனை வந்துவிட்டது. இனித் திருப்பி விட்டால் நீரோட்டத்தோடு வள்ளம் போகும். வேலாயுதம் தோணியைத் திருப்பி விட்டான்.

இதற்குள் வேலாயுதத்தின் பழைய எண்ணங்கள் மாண்டு மடிந்துவிட்டன. 'காய்கறிக்காரர்கள் எல்லாம் கிளம்பி விட்டார்கள். ஆனல் இன்னும் கச்சான் கொட்டைக் காரரைக் காணவில்லை. இந்தக் காலத்திலேதான் கச்சான் கொட்டையும் பிடுங்குவார்கள்.'

இப்படிப் புதுசாகச் சிந்தித்தபடியே, "ஏனம்மா இன்னமும் கச்சான் கொட்டை பிடுங்கவில்லையா?" என்று கேட்டான் வேலாயுதம்.

வள்ளியம்மைதான் எல்லோரையும் முந்திக்கொண்டு பதில் சொன்னுள். "ஏன் தம்பி பிடுங்கவில்லை. எல்லாருமே பிடுங்கிக் கொண்டுதான் இருக்கிருேம். ஆனல் முன்னதைப் போல இப்பவெல்லாம் அவிச்சுத் தின்பதற்காகப் பிஞ்சிலே பிடுங்கிறதில்லை. நல்லா முற்றினுற்தான் பிடுங்கிருேம். காயவைச்சா, மாதக்கணக்கா வருஷக்கணக்கா வைத்திருந்து பாராட்டி விற்கலாமே. தூக்கிக் கொண்டு ஏன் திரியவேண்டும்? இப்பவே அந்தர் நாற்பது ரூபாய் விற்கிறதே. இன்னமும் இரண்டு மாதம் போனுல் ஐம்பது அறுபது என்று விற்கும்"

வேலாயுதம் யோசித்தான். சில வருடங்கட்கு முன்பெல்லாம் தை, மாசி, என்றதுமே கண்டக்காட்டிலிருந்து சாக்குச் சாக்காகக் கச்சான் கொட்டை வரத்தொடங்கிவிடும். அத்தனையும் கடைச்சிக்கொட்டையைப் போன்று உருண்டைக்கச்சான். வெள்ளைவெளேரென்று இருக்கும். அந்தப் பிஞ்சுக் கொட்டைகளை அவித்துத் தோலை உரித்துத் தின்ருல் எத்தனை ருசியாக இருக்கும்? பொல்லாத மந்தமாம். அதனுல்என்ன? அந்த ருசிக்கு ஈடானது உலகத்தில் இருக்கிறதா?

ஆனல் இப்போதெல்லாம் உருண்டைக் கச்சானைக் கண்ணுற் காணமுடியவில்லை. நீட்டுக் கச்சானையும் பிஞ்சாகப் பிடுங்குவதில்லை. அதனுல் என்ன? முற்றிய கொட்டையை வறுத்துச் சாப்பிட்டால்தான் அது ருசியாக இருக்கும்!

இதற்கு முன்பெல்லாம், திருக்கோணமலைப் பட்டினத்திற்கு இந்தியாக் கச்சான்தான் வருமாம். ஆனல் இப்போது வருவதில்லை. வேண்டிய அளவு கச்சான் கிண்ணியாப் பக்கத்திலேயே விளைந்து விடுகிறது. இன்றும் கொஞ்சக் காலஞ் சென்ருல் கச்சான் கொட்டையில் இருந்து எண்ணெய் எடுக்கவுந் தொடங்கி விடுவார்கள்! ஆமாம்; நல்லெண்ணெய் என்று கடையில் விற்பதெல்லாம் இந்தியக் கச்சான் கொட்டை எண்ணெய் தானே. அந்த எண்ணெயை இங்கேயே ஊற்றிக் கொண்டால் எல்லாருக்கும் நல்ல பிழைப்புக் கொடுத்து விடும்! ஆமாம். கடவுள் கச்சான் கொட்டைக்குள்ளே எத்தனை ஆயிரம் மக்களின் வாழ்க்கையை வைத்திருக்கிருனே?

கச்சான் கொட்டை மட்டும் இல்லாவிட்டால் இந்தமட்டும் கிண்ணியாக்காரர்கள் எல்லோருமே பஞ்சாய்ப் பறந்திருக்க வேண்டும். அந்தப் பயிருக்கு மாரிமுழுவதும் மூன்று நான்கு மழை பெய்தாலே போதும். வெறும் கானற் பயிர்தான். பசையற்ற வெள்ளை மணலிலே அது நன்ருக விளையும். விலையும் மோசமில்லைத்தான்!

தண்ணியில்லாத கண்டக் காட்டிலே சாவதைவிட, மணல் தரையிலே கச்சான் கொட்டை விளைவிப்பது எவ்வளவோ மேல்! எதைச் செய்தாலும் வயிறு நிறைந்தாற் சரிதான்!

மலையாளம் தீன் புகையிலைக்கு விலையிறங்கியதும், யாழ்ப்பாணத்தவர் சிகரட் புகையிலை செய்யத் தொடங்கி விட்டார்களாம். இங்கேயும் நெல் விளைவிக்க முடியாத இடங்களில் கச்சான் கொட்டையை நாட்டலாம்! அடுத்த மாரிக்கு. தான் குடியிருக்கும் துண்டுக் காணிக்குள் கச்சான் கொட்டை விதைக்க வேண்டும் என்று வேலாயுதம் எண்ணிக் கொண்டான்.

இதற்குள் தோணி அக்கரையை அடைந்து விட்டது. காய் கறிக்காரப் பெண்கள் இறங்கிக் கொண்டு நடந்தார்கள். கரையிலிருந்த கனுவிலே வள்ளத்தைக் கட்டிவிட்டு மணலில் நடந்து குடிசைக்குட் செல்கையில் வேலாயுதத்தின் நிழல் காலடிக்குள் மறைந்து கிடந்தது.

—தொடரும்


உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே

வாங்குங்கள்.




'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய

லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

**தெற்கு ஆசியப் பிரதேசங்களில் மற்றநாட்டு மண்ணைவிட இலங்கை மண்ணை அதிகமாகப் பரிசோதித்திருக்கிறார்கள். டக்டர் ஜோக்கிம் என்பவர் செய்த ஆராய்ச்சியிலிருந்து இலங்கையின் வறண்ட பகுதி பெரும்பாலும் கரும்பு உற்பத்திக்குப் பயன்படும் என்று தெரிந்தது.**

# வெல்லம் நாட்டின் செல்வம்

## இலங்கையில் கரும்புச் சாகுபடி

— நிம்பை தாசரதி —

மனிதவாழ்க்கையின் அன்றாட தேவைகளுக்கு வேண்டிய பொருள்களில் சீனி, வெல்லம் முதலியவை மிக முக்கியமானவை. மேல்நாடுகளில் கரும்பிலிருந்து மட்டுமன்றி, பீட்ரூட், கரட் ஆகிய கிழங்குவகைகளிலிருந்தும் சீனி, வெல்லம் முதலியவைகள் தயார் செய்யப்படுகின்றன.

பல நூற்றாண்டுகாலமாக இலங்கையில் கரும்பு சிறிய அளவு பயிரிடப்பட்டு வருகிறது. வீட்டுத் தோட்டங்களிலும் அன்றாட உபயோகத்துக்கும் இதனைப் பயிரிடுகிறார்கள். நம் நாட்டில் வருடாவருடம் ஏறத்தாழ ஒரு லட்சம் டன் சீனிக்குமேல் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய முடியாதா? முடியும் என்றே சொல்ல வேண்டும். அப்படியிருந்தும் ஏன் வியாபாரமுறையில் பெருவாரியாக உற்பத்தி செய்யவில்லை? அதைப்பற்றிப் போதுமான அனுபவ அறிவு இல்லாததுதான் காரணமெனலாம்.

வடக்கே அக்ஷரேகை 40 டிகிரிக்கும், தெற்கே அக்ஷரேகை 40 டிகிரிக்கும் இடையிலுள்ள கரும்பு உற்பத்திசெய்யும் நாடுகளின் மத்தியில் இலங்கை அமைந்திருப்பதிலிருந்து இது வெகு காலமாகக் கரும்புச் சாகுபடிக்கு ஏற்ற இடம் என்பது புலனாகின்றது.

### சூழ்நிலை

கரும்பு பயிரிடுவதற்கு அவசியமான சூழ்நிலை எது என்பதை நாம் அறியவேண்டும். இயற்கையில் ஏராளமாகக் கிடைக்கும் பிராணவாயு, கரியமிலவாயு, ஜலவாயு இவை சேர்ந்து, வெப்பம், வெளிச்சம் இவை இரண்டின் உதவியையும் கொண்டு, சீனி உண்டாகிறது. இலங்கையின் வறண்ட பகுதியில் ஏராளமான சூரிய வெளிச்சமும், அதிக உஷ்ணமும் உண்டு.

தெற்கு ஆசியப்பிரதேசங்களில் மற்றநாட்டு மண்ணைவிட இலங்கை மண்ணை அதிகமாகப் பரிசோதித்திருக்கிறார்கள். டக்டர் ஜோக்கிம் என்பவர் செய்த ஆராய்ச்சியிலிருந்து இலங்கையின் வறண்டபகுதி பெரும்பாலும் கரும்பு உற்பத்திக்குப் பயன்படும் என்று தெரிந்தது. இலங்கையின் இந்தப்பகுதியில் தண்ணீர் குறைவுதான். என்றாலும் நெல் சாகுபடியைவிட மிகக் குறைந்த அளவிலேயே கரும்புப்பயிருக்கு நீர் தேவை. ஆகவே, இங்கு கரும்புப்பயிர் சிறந்துவிளங்குவது சாத்தியமே.

நம் நாட்டில், கல்லோயா, பொலநறுவைப் பகுதிகளில் கரும்பு, செய்கைபண்ணப்படுகிறது. நெல் விளையக்கூடிய இடங்களில் கரும்பு வளரும். அதற்கு மிகுதியான வெப்பமும் தண்ணீரும் தேவை. சில இடங்களில் கரும்பையும் நெல்லையும் மாறி மாறிப் பயிராக்க முயல்கிறார்கள்.

### பயிரிடும் முறை

கரும்பு எவ்வாறு பயிராக்கப்படுகிறது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியம். முதலில் நிலத்தை நன்றாகக் கொத்திய பின்னர் ஒழுங்கான பாத்திகளை நீளமாக அமைக்கிறார்கள். அவற்றில் பசளையிடுகிறார்கள். நீர் பாய்ச்சிய பிறகு கரும்பை நடத் தொடங்குகிறார்கள். முதிர்ந்த கரும்பை ஒவ்வொரு கணு அளவில் நறுக்கி வைத்துக் கொள்கிறார்கள். அந்தக் கணுவில் விதைபோன்ற ஓர் உறுப்பு இருப்பதைக் காணலாம். அதிலிருந்தே முளைகிளம்பிக் கரும்பு வளர்கிறது. பிறகு கரும்பு வளர்ந்து முதிர்ச்சியடையும் வரை நீர் பாய்ச்சுவது அவசியமாகும். கரும்பு முற்றியதும், அதனை வெட்டுகிறார்கள். பிறகு அதைச் சிறு சிறு துண்டுகளாக்கி, ஆலைகளில் இட்டுச் சாறு பிழிவார்கள். அந்தச் சாற்றைக் காய்ச்சி, வெல்லம் செய்கிறார்கள். நம் நாட்டில் சில இடங்களில், கரும்பிலிருந்து சுத்தமான வெள்ளைச் சீனியும் செய்யப்படுகிறது.

### ஆராய்ச்சி நிலையம்

இலங்கையில் கரும்புப் பயிர் செய்வது பற்றி இலங்கை விவசாயப் பகுதியினர் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். ஜாவா, இந்தியா முதலிய இடங்களிலிருந்து நல்ல ரகங்களைத் தருவித்து, அல்லை, பொலனறுவை முதலிய இடங்களில் எல்லாம் பயிர் செய்து பார்த்தார்கள். பொலனறுவையிலேதான் நல்ல விருத்தி காண முடிந்தது. 1957-ஆம் வருடம் பொலனறுவையிலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் சமர்ப்பித்துள்ள கணக்குகள், கந்தளாயிலுள்ள கரும்புச் செய்கைத் திட்டம் என்ற அடிப்படையில் நம்பிக்கையுடன் நிறுவப்படலாம் என்பதைக் காட்டுகின்றன. 1958-இல் 1,600 ஏக்கரிலும், 1960-இல் 3,200 ஏக்கரிலும்; 1961-இல் 4,800 ஏக்கரிலும் கரும்புச் செய்கையை ஸ்தாபிக்கும் வகையில், சீர்திருந்திய இனக் கரும்புகளை நாற்று மேடைகளில் வரிசைக்கிரமமாக நாட்டும் வேலை ஆரம்பமாகியது.

இப்போது சீனி உற்பத்திக்கென அம்பாறையில் மூன்றரைக் கோடி ரூபாய் செலவில் தொழிற்சாலை ஒன்று உருவாக்கிக்கொண்டிருக்கிறது. இதில் நாளொன்றுக்கு 2000 டன் சீனி உற்பத்தி செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

மேனாடுகளில் கரும்பிலிருந்து மட்டுமன்றி, பீட்ரூட், கரட் முதலிய கிழங்கு வகைகளிலிருந்தும் சீனி, வெல்லம் முதலியவைகள் உற்பத்தி செய்வதைப் போலவே, நம் நாட்டிலும் கரும்பிலிருந்து மட்டுமல்லாமல், வேறு வகையாகவும் சீனி உற்பத்தி செய்யக்கூடிய வழிவகையுண்டு.

இலங்கையின் தமிழகமான யாழ்ப்பாணக் குடாநாட்டில் 'கற்பகதரு' என்று போற்றப்படுவது பனைமரம். பனைமரத்தில் பிரயோசனப்படாத பொருள் என்று ஒன்றுமேயில்லை! யாழ்ப்பாணம் பனை வெல்லத்தை நம்மால் மறந்துவிடவே முடியாது. பனைவெல்லத்தை, இப்பொழுது உற்பத்தி செய்வதைவிட இன்னும் பெருவாரியாக உற்பத்தி செய்யலாம். வெல்லம் மட்டுமல்ல; சிறந்த வகைச் சீனியும் உற்பத்தி செய்ய முடியும்.

### தென்னைச் சீரமைப்பு

மேலும், 'நாட்டின் மத்தியில் காடு' என்று சொல்லக்கூடிய வகையில் இலங்கையில் எங்கு பார்த்தாலும் தென்னைமரம் மலிந்து காணப்படுகின்றது. இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஒல்லாந்தர் ஆட்சியில், தென்னை ஏராளமாக உண்டாக்கப்பட்டது. குருநாகல், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய பல இடங்களில் தென்னைமரங்களை ஏராளமாகக் காணலாம். நம் நாட்டில் மிதமிஞ்சிக் காணப்படும் தென்னைமரங்களையும்,—ஏன்? 'கித்துல்' மரங்களையும் கூட, சீனி, வெல்லம் முதலியவைகளின் உற்பத்திக்கென சிறந்த முறையில் பயன் படுத்தலாம்.

1956-ஆம் ஆண்டு, புதிய தென்னைச் சீரமைப்புத் திட்டமொன்று அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சீர் கெட்டுப்போன தென்னை வளர் நிலங்களில் கூடிய பலனளிக்கும் இனத்தைச் சேர்ந்த தென்னங்கன்றுகளை மான்யப் பணத்தின் உதவியுடன் மீண்டும் நடும் வேகத்தைத் துரிதப்படுத்துவதே இத்திட்டத்தின் முதலாவது பாகத்தின் நோக்கமாகும். மான்யப் பணத்தின் உதவியைக் கொண்டு பசளை வழங்குவதன் மூலம் தென்னந் தோட்டங்களினதும், தென்னை வளரும் சிறு துண்டுக் காணிகளினதும் பிரயோசனங்களைச் சீர் திருத்துவது இத்திட்டத்தின் இரண்டாவது பாகத்தின் நோக்கமாகும்.

(அடுத்த இதழில் முடியும்)


'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.


# ஒற்றையாட்சி ஏற்பட வேண்டும்

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லாதபிரதேசங்களுக்கிடையே ஒற்றுமையில்லை. இந்தியாவின் ஒற்றுமையையும், தேசாபிமானத்தையும் வளர்க்க எதுவும் செய்யப்படவில்லை. சாதி வேற்றுமைகள் தலைதூக்குகின்றன. வகுப்புப் பிணக்குகளும் பூசல்களும் பகிரங்க ரகசியம். ஆந்திர ராஜ்யம் தனித்துப் பிரியாமல் சென்னையுடனேயே இருந்திருப்பின், ஐக்கிய இந்திய லட்சியத்துக்கு அது பெரிதும் உதவியிருக்கும்.

பீகாரிலே இரு அரசியல் தலைவர்களிடையே, கட்சிப் போட்டிகள் வளர்வது பலருக்கும் தெரிந்த விஷயம் அவர்களிடையே அன்பு எதுவுமில்லை. அங்கு பகிரங்கமாகப் பிளவு ஏற்படாமைக்குக் காரணம் டில்லி அரசியல் வாதிகள் சிலரது செல்வாக்குத்தான். பீகாரிகள் வங்காளிகளை வெறுக்கிறார்கள். நீண்டகாலமாக பீகாரில் வசித்தாலும் அந்த வங்காளிகள் வெறுக்கப்படுகின்றனர். சாதி, வகுப்புப் பூசல்கள் பலப்பட்டு வருகின்றன. அங்குள்ள வங்காளிகள் யாரையும், உங்களுக்கு பீகாரிகளிடம் நியாயம் கிடைக்கிறதா? என்று கேட்டுப் பாருங்கள். ஜார்கண்ட் கட்சி, ஜனதா கட்சி, பி. எஸ். பி, சமதர்மிகள், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய பல கட்சிகளும் பதவி வேட்டைக்காகவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் போட்டிபோடுகின்றன. லஞ்சம் லாவணம், சுயநலம் முதலியவை பஞ்சாபிலுள்ளதைவிட மோசமாகும்.

### அவல நிலை

சென்னையிலே ஒரு கட்சி ஏற்பட்டுள்ளது. அது, இந்திய அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்க மறுக்கிறது. பாரத நாட்டிலிருந்து தனித்துப் பிரியவும் விரும்புகிறது. தேசியக் கொடியையும், அரசியல் அமைப்புத் திட்டப் பிரதியையும் கொழுத்துகிறது. இந்தியாவுக்கும், தமிழ் நாட்டுக்கும் பொதுவான கலாசாரம் கிடையாதென்றும் மறுக்கின்றது. பிராமண — பிராமணரல்லாதார் பிரச்சினை வேறு. சாதி, வகுப்பு அடிப்படையில் பிரிவினை சக்திகள் அதிகமாகின்றன. கோஷ்டி சூழ்ச்சிகளும், வேறு அரசியல் நோய்களும் அங்கு இல்லாமலில்லை.

பம்பாயிலே மகாராஷ்டிரர்களும், குஜராத்தியர்களும் தெருவில் அடித்துக் கொண்டதைப் பார்த்தோம். இருசார்பினரும் பாரத நாட்டு மக்கள் என்று, தேசாபிமானத்துடன் தங்களைக் கருதியிருந்தால், இந்தக் கண்ருவி ஏற்படுமா? பம்பாய் ராஜ்யத்தில் தனி சட்டசபையில்லாமல் அது ஒரு நிர்வாக உறுப்பாக மட்டும் இருந்திருப்பின், இவ்வித அவல நிலை ஏற்பட்டிராது. பம்பாய்தான் இந்தியாவிலேயே மிகவும் செல்வம் நிறைந்த நகரம். அதன்மீது அதிகாரம் செலுத்த, சட்டசபை மூலம் மகாராஷ்டிரர்கள் விரும்புகிறார்கள். குஜராத்திகளையும் மற்றவர்களையும் மகாராஷ்டிரர்கள் விரும்புவதில்லை. அவர்கள் தனித்து ஒரு ஜாதியாகக் கூடுகிறார்கள்.

1950-ம் வருஷ அரசியல் திட்டம், பாரதம் ஓர் ஐக்கிய நாடாக முடியாமல் தடுத்து வருகின்றது. இது இந்தியாவின் ஒற்றுமைக்குப் பெரிய ஆபத்துமாகும். இந்த அரசியல் திட்டத்தின் பயனாக, அரசியல் வாதிகள், அதிகமான ராஜ்யங்கள் வேண்டுமென்றும், ஆங்காங்கே குண்டு சட்டியில் குதிரை ஓட்டலாமென்றும் விரும்பி அதற்காக முனைகின்றார்கள்.

### சூழ்ச்சியும் கைலஞ்சமும்

மைசூர் ராஜ்யத்திலும் சூழ்ச்சிகள் உள்ளன. முன்னாள் முதல்மந்திரியைக் கேட்டால் அங்குள்ள ஊழல்கள் அம்பலமாகும். கோஷ்டி சூழ்ச்சிகளும், கைலஞ்சமும் அதிகமுள்ளன. மைசூர்காரர்களுக்கு மைசூரைப்பற்றி மட்டும் நினைப்பு. வேறு விஷயங்கள் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

ஒரிஸாவிலே, ஒரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் விரோதம். ஒரே மாகாணமாக இருந்தபோது வங்காளிகள், பீகாரிகள், ஒரியர்கள் எல்லாரும் சகோதரர்கள் போல ஒற்றுமையாக வாழ்ந்தனர். இப்போது அப்படி இல்லை. ஒரியா அரசியல் போக்கைக் கவனித்தால், நிம்மதி யடைவதற்கில்லை. ஸ்திரமான அரசாங்கம் ஏற்படமுடியாதுள்ளது. மற்ற ராஜ்யங்களிலுள்ள குறைகள் இங்கும் பூரணமாகவுள்ளன.

மத்திய பிரதேசத்திலுள்ள அரசியல் வாதிகள், அந்த ராஜ்யத்தை பிளவுபடுத்த வேண்டுகிறார்கள். விதர்ப்பா முதலிய வேறு சில பகுதிகள் தனித்துப் பிரியவேண்டுமாம். டாக்டர் கட்ஜு, தமது கட்சியை சேர்த்து ஒன்றுபடுத்தி நடத்திப்போக சங்கடப்படுகிறார். அங்கு லஞ்ச ஊழல்கள் அதிகமென்றும் சில அரசியல் வாதிகள் பெரும் பணம் திரட்டி விட்டதாயும் கூறப்படுகிறது.

### சமஷ்டிஆட்சிமுறை உதவாது

ஒரே தேசிய சமுதாயத்தை ஏற்படுத்தவும், பாரத நாட்டின்மீது தேசாபிமானத்தை வளர்க்கவும், அது குலையாமல் பாதுகாக்கவும், பிரிட்டனிலுள்ளது போன்ற அரசியல் அமைப்பே சாலச் சிறந்தது. ராஜ்ய மந்திரி சபைகளுடன் கூடிய சமஷ்டி ஆட்சிமுறை இதற்கு முற்றிலும் உதவாது. தனித்தனி ராஜ்யங்கள் ஏற்பட வேண்டுமென்ற உணர்ச்சிகளை இது தூண்டிவிடுகிறது. அரசியல் வாழ்வையே ஆபாசப்படுத்துகிறது. இந்த சமஷ்டி அமைப்பு எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கும் நல்லதாகும். ராஜ்யங்களை, ஆலோசனைகளுடன் கூடிய கவர்னர்கள் நிர்வாக உறுப்புகளாக நிர்வகித்து வரலாம். முக்கிய உத்தியோகங்களை தலைமை அரசாங்க பொறுப்பில் விட்டு, ஸ்தல தேவைகளுக்கு மட்டும் ஆங்காங்கே சிப்பந்திகளை நியமித்துக்கொள்ளலாம்.

1950-ம் வருஷ அரசியல் அமைப்பின் பெரிய குறை என்னவெனில், அது, பிரிட்டிஷார் 1935-ம் வருஷத்தில் தயாரித்த அரசியல் திட்டத்திலிருந்து பெரும் பகுதியை ஸ்வீகரித்ததே! இந்தியாவைப்பிரித்தாளும் நோக்கத்துடன், போட்டிகளை வளர்க்கும் முறையில் பிரிட்டிஷார் அந்த அரசியல் திட்டத்தை வகுத்தார்கள். பல ராஜ்யங்களை சிருஷ்டித்தார்கள். நாட்டைப் பிரிக்கும் அந்த அரசியலமைப்பு நாட்டை ஐக்கியப் படுத்த உதவவே உதவாது. தனித்தனியாக ராஜ்யங்கள் பிரிந்து விடாமல், அவை ரயில்வேக்களைப் போல் ஒன்று சேர்க்கப்படுவது உத்தமமாகும்.

[முற்றும்]

போதிமர நிழலில்: 3

# சீடனின் கடிதம்

— வெள்ளங்காடு, வீ. வியாகேச தேசிகர் —

“ஈழத்து எழுத்தாளர்களிற் சிலர் பொழுதுபோக்குக்காக எழுதுகிறார்கள். சிலர் கட்சிக்காக எழுதுகிறார்கள். சிலர் ‘இடம் நிரப்ப’ எழுதுகிறார்கள்.” இப்படி ஈழத்துப் பிரபல விமர்சகர்களில் ஒருவராகிய திரு. கனக. செந்திநாதன் சமீபத்தில் வெளியிட்ட ‘மூன்றாவது கண்’ என்ற தமது நூல் ஒன்றில் எழுதியிருக்கின்றார்.

பூரண ஞானம்பெற்ற நிலையில், போதிமர நிழலில் நிறைகுடமாக அமர்ந்திருக்கும் எனக்கு, முன்னர் ஒருசமயம் வெறும் பானையாக விளங்கிய மலைநாட்டுச் சீடன் கடிதம் எழுதியிருக்கின்றான். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் முன்னுரை ஒன்றில் குறிப்பிட்டிருப்பது போல, அவன் எழுதாமல் இருக்க முடியாமல் எழுதியிருக்கின்றான்!

ஒரிஜனல் கடிதத்தின் நகல் பிரதி இதோ:
சுவாமி!

அடியேனின் அகத்தில் அலைமோதி நிலைகுலைந்த சந்தேகங்கள் தங்கள் உபதேசத்தினால் விடுபட்டன. தாங்கள் நிறைந்த நெஞ்சுடன் குறிப்பிட்ட எழுத்தாள உலகத்தைக் காணுவதற்காக ஓடோடியும் சென்றேன்.

குருசிரேஷ்டரே! உண்மையை ஒளியாது அப்படியே சொல்லிவிடுகின்றேன். அது ஒரு புதிய உலகம்; புதிய அனுபவம். பென்னம் பெரிய புனைபெயர்களைத் தாங்கிபோர் பலர்; அடங்கி ஒடுங்கிய ஞானிகளைப்போல் மௌனம் சாதிப்போர் சிலர். புனைபெயர் மன்னர்கள் மற்றையோர். இப்படி எத்தனை எத்தனையோ!

நீங்கள் கூறிய உடையலங்காரமிருக்கின்றதே! ஆமாம்; நெஞ்சுப் ‘பாக்கட்’டுடன் சேர்ந்த நீண்ட ஜிப்பா அணிந்திருக்கிறேன் நான். ஆனால் அந்த உடையை எல்லோருமே அணிவதாயில்லை. பிரபல எழுத்தாளர் என்று ஒருவரை எனக்கு அறிமுகப்படுத்திவைத்தார்கள். இவர் ஈழத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் இலக்கியப்பாலம் அமைத்துவருபவராம். என் கண்களையே நம்ப முடியவில்லை. நான் அவரைப் பார்த்ததும் எங்கோ ஒரு ஸ்டுடியோவில் வேலை செய்பவர் என்றுதான் எண்ணிக்கொண்டேன்.

அன்றொருநாள் கூட்டம் ஒன்றுக்குப்போயிருந்தேன். யாரோ கவிஞர் ஒருவர் பொழிந்துதள்ளப்போகின்றார் என நோட்டீஸிற் கண்டிருந்தது. அந்தக் கவிஞர், இலக்கியத்தை எடைபோடப் பிறந்தவராம். நல்லவேளையாக ஒருவரும் அவருக்குப் புகழேந்திப் புலவர் என்றோ, கம்பன் என்றோ பட்டம் ஒட்டவில்லை.

சுவாமி! உருவத்துக்கும் உள்ளத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறுகின்றார்களே. ஆனால் சிலர் அவற்றுக்கு மாறாகவும் சிருட்டிக்கப்படுகின்றனர். நிற்க, எல்லாம் வல்ல ஓர் எழுத்தாளர் இருக்கின்றாராம். அவரை நான் இன்னும் காணவில்லை.

இவர்கள் அனைவரையும் பற்றித் தாங்கள் அறிவீர்கள் என எண்ணுகின்றேன். முற்றிப் பழுத்த பெரும் எழுத்தாளரின் கண்களுக்குத் தட்டுப்படாமல் இவர்கள் இருக்க முடியுமா? இது எனது அனுபவம். இனி தங்களின் அறிவுரையும் மதிப்புரையும் வேண்டும். சிறுகதை ஒன்றினை இப்போது திவ்வியமாகத் தீட்டி வருகின்றேன்.

உண்மையுள்ள,
சீடன் 5.

* * *

அன்புமிக்க மாணாக்கனே!

நீ வெற்றிப் பாதையை நோக்கிவிரைந்து சென்று கொண்டிருக்கின்றாய். ஆரம்பத்திலேயே பெரிய சிக்கல்களுக்குள் நுழைந்து கொண்டாய். பொதுவாகத் தமிழ்நாட்டு எழுத்தாளர்களைப் பற்றியும் சிறப்பாக இந்நாட்டு எழுத்தாளர்களைப் பற்றியும் நீ ஓரளவுக்கு அறிந்திருக்கின்றாய். ஆனால் எழுதாத எழுத்தாளர்களைப் பற்றி நீ அதிகம் அறியமாட்டாய். எழுதும் எழுத்தாளர்களின் சமாச்சாரம் தான் என்ன என்று நீ அறிய அசைப்படுகின்றாய். அதையும் சொல்லிவிடுகின்றேன். இவர்களிற் பலர் ஆசிரியர்களின் அனுக்கிரகத்தினால் முன்னுக்கு வருபவர்கள். அரைகுறையாக எழுதியோகம் பெற்ற ஓர் எழுத்தாளரைப் பற்றி மேனாட்டுப் பத்திரிகை ஒன்றிலே படித்தேன். அவரின் புனை பெயர் ‘ஸ்பார்க்’ என்பது. இவரைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவேன். எங்கள் நாட்டிலோ அப்படியானவர்கள் இல்லை. ஆனால் தமிழ் கூறும் நல்லுலகிலோ காமாசேமா என்று கிறுக்கித் தள்ளுபவர்கள் இருக்கின்றார்கள்.

வீண் விஷயங்களிலும் சண்டை சச்சரவுகளிலும் நீ புலனைச் செலுத்த வேண்டியதில்லை. எழுத்துலகில் நீ மின்னும் நட்சத்திரமாக விளங்குவதற்கு நிறைய வாசிக்க வேண்டும்.

தெளிவும், அமைதியும், நிறைவும் கொண்ட எழுத்தாளனாக நீ ஆகவேண்டும். அதுதானே உனது இலட்சியம்! அதற்கான முறையில் உனக்குப் பலரகமான கடிதங்களை எழுதிவருவேன். அவற்றைக் கொண்டு நீ உனது ‘பசி’யைத் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா!

அடுக்குத் தொடரில் நீ எழுத ஆசைப் படுவதை என்னால் உணரமுடிகின்றது. “கண்ணியமான கருத்துரைகள்; திண்யமாக நம்பினேன். மடமை நீக்கிக் கடமை காட்டினீர்கள்; அதனை என் உடைமையெனத் திடமாக நினைத்தேன்.” இப்படியெல்லாம் எழுதுகின்றாய். இந்த (உரை) நடையலங்காரம் உனக்கு வேண்டாம். அதன் ‘சீசன்’ முடிந்து விட்டது.

ஏதோ ஒரு சிறு கதை எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தாய். பிரபல சிறு கதை எழுத்தாளர் எழுதிய கதையை ஒன்றைப் படித்து விட்டு அதைப் போல எழுத நினையாதே. சிறுகதை என்றால் அதில் கதை இருக்க வேண்டும். சிறிதாகவும் இருக்க வேண்டும். இப்படி அமரர் கல்கி ஒரு சமயம் வானொலியிற் பேசியிருந்தார்.

குத்தலும் கேலியும் நிறைந்த பாணியில் எழுதி உனது முனைப்பை மழுங்கச் செய்யாதே.

நீ மறு கடிதத்தை எழுத முன்னர் கலைபற்றி உனக்கு விளக்கம் தருவேன். அதைத் தொடர்ந்து எழுத்துலகின் அட்டதிக்குகளுக்கும் பதினாறு கோணங்களுக்கும் உன்னை அழைத்துச் செல்வேன்.

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

**‘போட்டோ’ அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்**

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது ‘ஈழநாடு’ இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**◎ போட்டோவின் அளவு, 6" X 4"**

**◎ முடிவு திகதி 31-12-59**

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

# பத்திரிகைத் தொழிலில் பயிற்சி

## சாம்ராச்சிய நாடுகளின் திட்டம்

**சா**ம்ராச்சிய நாடுகளில் உள்ள இளம் எழுத்தாளர்கள் பத்திரிகைத் தொழிற் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக சாம்ராச்சிய நாடுகளுக்கிடையே ஒரு கூட்டுறவு, கல்வி, பிரயாண திட்டத்தை, ஏற்படுத்தப் போவதாகப் பிரிட்டிஷ் காமன்வெல்த் பத்திரிகைச் சங்கம் அறிவித்துள்ளது. சங்கத்தின் அங்கத்தினர் தரும் சன்மானத்தை மூலதனமாகக்கொண்டு இந்தப் பிரயாணத் திட்டத்தை 1960-ம் வருடத்தில் நடை முறைக்குக் கொண்டு வரலாம் என்றும் அது தெரிவித்தது.

அச்சங்கம் மேலும் தெரிவிப்பதாவது: இந்த பிரயாணத் திட்டத்தின் கீழ் ஆறு இளம் எழுத்தாளர்கள் சாம்ராச்சிய நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறு மாதம் கல்வி பயிலுவதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்படுவர். இந்த ஆறு மாதக் கல்வித் திட்டத்திலே இவர்களுக்கு இங்கிலாந்து முழுவதிலும் கல்வித் திட்ட யாத்திரைகள் ஒழுங்கு செய்யப்படும். சரித்திரம், கலாச்சாரம், தொழிற் கல்வி, விளையாட்டுப் போன்ற துறைகளில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

### ஒக்ஸ்போர்ட்டில் சொற்பொழிவு

இந்த 6 மாத கல்வி திட்டத்திலே இவர்களுக்கு 3 மாத காலம் வரை இங்கிலாந்தின் மிகப் பெரிய பத்திரிகை ஸ்தாபனங்களிலே பயிற்சியளிக்கப்படும். அதோடு சாம்ராச்சிய உறவுகள் பற்றிய சொற்பொழிவுகளும் இவர்களது நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும். இந்த திட்டத்திற் கலந்து கொள்ளச் சகல சாம்ராச்சிய நாடுகளுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். இதற்குரிய விண்ணப்பங்கள் இந்த வருட இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பொதுவாகச் சகல சாம்ராச்சிய நாடுகளும் இந்த உபகாரத் திட்டத்தை வரவேற்று ஊக்குவித்தால் பிரிட்டிஷ் எழுத்தாளர்களும் பிற சாம்ராச்சிய நாடுகளுக்கு விஜயம் செய்ய வாய்ப்புக்கிட்டுவதோடு சாம்ராச்சிய நாடுகளுக்கிடையே பரஸ்பர நல்லுறவும், நேசபான்மையும் வளர எழுத்தாளர்களின் பரிமாறுதல் பெரிதும் உதவுமென எதிர் பார்க்கிறது.

## சந்திரனில் உள்ள எரிமலைக் குன்று

## ருஷிய விஞ்ஞானி படம் பிடித்துள்ளார்

சந்திரனில் உள்ள அல்போன்சு எரிமலையின் மத்திய குன்றை ‘ஸ்பெக்ட்ரோகிராப்’ என்ற கருவி மூலம் மற்றொரு படம் பிடிப்பதில் தாம் வெற்றி பெற்றிருப்பதாக லெனின் கிராடில் உள்ள புலோவோ ஆராய்ச்சி நிலையத்திற்குப் பேராசிரியர் நிக்கலாய் கோசிரோவ் தெரிவித்துள்ளார். சந்திரனில் எரிமலை இருக்கிறது என்று சென்ற ஆண்டில் அவர் கண்டு பிடித்தார்.

அல்பொன்சு எரிமலை தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. சந்திரனில் எரிமலை இருக்கிறது என்பதை இது உறுதி செய்கிறது.

# குழந்தைகள் நாட்டின் செல்வம்

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமது எதிர்கால வாழ்வு நன்கு சோபிக்கும் என்ற திடசித்தத்தை ஊட்ட வேண்டும்.

### விரிந்த மனப்பான்மை

சில பெற்றோர்கள் தமது குழந்தைகளை அங்குமிங்கும் ஓடியாடித் திரிய விடுவதில்லை. பிள்ளை எதைச் செய்தாலும் அதைக் கடுமையாகக் கண்டிப்பார்கள். இந்த மனப்பான்மை மாறி குழந்தைகள் சில காரியங்களைத் தாமே செய்துபழக வேண்டும் என்ற விரிந்த நோக்கு பெற்றோர்களிடையே அரும்பி மலரவேண்டும். அப்பொழுது தான் குழந்தைகளுக்குத் தமது ஆற்றலில் தன்னம்பிக்கை உண்டாகித் தாமே சுயமாகக் காரியத்தைச் செய்ய முயல்வார்கள். பெற்றோர்கள் தம்முடன் கண்ணியமாகநடந்து கொள்கிறார்கள், தமது சுயமரியாதைக்கு மதிப்புக் கொடுத்து வருகின்றார்கள் என்ற எண்ணங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு வளம் தருவன. ஒவ்வொரு பெற்றோரும் இதை மனதிற் பதித்துத் தக்கவாறு நடந்துகொள்வது இருசாராருக்கும் நன்மை பயப்பதாகும்.

பிள்ளைக் கனியமுதே—
கண்ணம்மா!
பேசும் பொற் சித்திரமே!
அள்ளியணைத்திடவே—
எனமுன்னே
ஆடிவருந் தேனே!

என்று பாடிப் பிள்ளைகளை வாரி அணைத்து முத்தமிடும் காட்சி உள்ளத்தையே குளிரச் செய்கின்றது. ஆமாம்; பெற்றோர் தம் மீது கனிந்த அன்பு உள்ளவர்கள் என்று குழந்தை உணரும் பொழுது அதன் பிஞ்சு உள்ளத்தில் ஆனந்தம் விஞ்சிவிடுகின்றது.

### அன்புக் கரம்

தாங்கள் விரும்புவதைச் செய்யும் போதுதான் பெற்றோர்கள் தம்மீது அன்பு பாராட்டுகின்றார்கள் என்றிராது அவர்கள் விரும்பாதவற்றைச் செய்யும் பொழுதும் அன்புக்கரம் நீட்டி ஆதரிப்பார்கள் என்பதை அவர்கள் உள்ளத்தில் படியச் செய்வது பெற்றோரின் பெருங் கடனாகும்.

ஒழுக்கம் உயிரினும் மேலானது. எனவே, குழந்தைகளுக்கும் சில ஒழுக்க நெறிகள் அவசியமானவை. அவற்றை அவர்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். தனிமனிதப்பண்பு மிக மதிப்பானதொன்று. இது மாத்திரமன்றி துணிவு, நேர்மை, தாராள மனப்பான்மை, அன்பு ஆகிய பண்புகள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை என்பதை இளமையிலிருந்தே குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டும்.

* * *

குழந்தைகள் நாட்டின் எதிர்காலச் செல்வம். அவர்கள் நாட்டின் தேசியச் சொத்து எனக் கூறினும் மிகையாகாது. ஐக்கிய நாடுகள் சங்க ஸ்தாபனம், உலகக் குழந்தைகளின் நல் வாழ்க்கையில் நாட்டம் கொண்டு அவற்றுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. நாடு செழிக்கவும் நலம் பெருகவும் குழந்தைகளின் வாழ்க்கை வளமுற வேண்டுமன்றோ.

## பூஜ்யம் தபால்

ஸ்ரீ ஸ்டான்லிசொய்ஸா,
நிதி மந்திரி,
C/o, காமன்வெல்த்
மகாநாடு,
ஸிட்னி, ஆஸ்திரேலியா.

மந்திரியாரே!

இலங்கையிலிருந்து இச்சமயம் உங்களை வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாதென்றும், உங்கள் பாஸ்போர்ட்டை ரத்துச்செய்ய வேண்டுமென்றும் எதிர்க்கட்சியினர் பலர் பார்லிமெண்டில் கேட்டனர்.

இலங்கையில் அரசியல் நெருக்கடி நீடிக்கும் வரையில், நீங்கள் இலங்கையைவிட்டு வெளிச்செல்லுவதை பிரதம மந்திரி தகநாயக்காவும் விரும்பவில்லை என்று நீங்கள் அங்கிருந்து அறிவித்திருக்கிறீர்கள்.

காமன்வெல்த் பார்லிமெண்ட் மகாநாட்டுக்கு இலங்கையின் சார்பாகச் செல்லும் பிரதிநிதி கோஷ்டியில் உங்கள் பெயர் சேர்க்கப்படவில்லை என்று ஆஸ்திரேலிய பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இவ்வித நிலையில் நீங்கள் ஏன் அவசரமாக இலங்கையை விட்டு வெளியேறி, ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவேண்டும்? தாங்கள் இச்சமயம் அங்கு எப்படியாவது வந்து காமன்வெல்த் பார்லிமெண்ட் மகாநாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றும் யாரும் அவசரமாக வேண்டிக்கொண்டார்களா?

அல்லது சில நாட்களாவது, இலங்கையிலிருந்து மனைவியாருடன் வெளிச்சென்று சற்றே நிம்மதியாக இருக்கலாமென்ரு?

இது எப்படியாயினும் இலங்கைப் பார்லிமெண்டில் உங்களுக்கு மாருகப் பல குற்றச்சாட்டுகள் உங்கள் எதிரிலேயே சுமத்தப்பட்டன. உங்களை மந்திரி பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று, எதிர்க்கட்சியினர் மட்டுமன்றி, மந்திரி சபையைச் சேர்ந்த உங்கள் சகாக்களில் சிலரே கிளர்ச்சி செய்வதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் மந்திரியாக இருக்கும்வரை, பண்டாரநாயக்கா கொலைச்சதியைப் பற்றிய உண்மையை அம்பலப் படுத்த முடியாதென்றும் கூறுகின்ருர்கள்.

ஆனல் நீங்களோ இவையெல்லாம், மூன்று மந்திரிகள் மீது கம்யூனிஸ்டுகள் கிளப்பிவிட்டுள்ள 'பெரிய சதித்திட்டம்' என்று ஆஸ்திரேலியாவிலிருந்து கூறியிருக்கிறீர்கள்.

மந்திரி சபையிலேயும், அரசாங்கக் கட்சிகளிலேயுள்ளவர்களில் சிலரும்கூட இந்தச் சதித்திட்டத்தில் சேர்ந்துவிட்டார்களா?

கைத்தொழில் உதவி மந்திரி வீரசேகரா, ஒன்று நீங்கள் ராஜினுமாசெய்ய வேண்டுமென்றும், அல்லது பண்டா கொலை வழக்கு முடியும் வரையிலே உங்களை வேலையிலிருந்து தள்ளிவைக்க வேண்டுமென்றும் அல்லது குற்றச் சாட்டுகளுக்கு நீங்கள் தக்க பதில் கொடுக்க வேண்டுமென்றும் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கலாசார மந்திரி கலுகல்லே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வாலிபர் கூட்டத்துக்குத் தலைமை வகித்து, உங்களை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

மந்திரி செனேட்டர் ஏ. பி. ஜயசூரியாவும் வேறு பல மந்திரிகளும் தங்களுக்கு விரோதமான நடவடிக்கையில் சேர்ந்திருப்பதாக வதந்திகள் உலவுகின்றன.

இங்கு உள்ள நிலைமையைப் பார்க்கையில், உங்களுக்கு மாருன சதி வளர்ந்துகொண்டே போகிறது. தோழர் கெனமன் கூறியதுபோல் வர வர இந்த நாடனைத்துமே இச்சதியில் சேர்ந்து விடும்போல் உள்ளது!

நீங்கள் இம்மாதம் 16ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பப் போவதாக பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது. நண்பன் என்ற முறையில் கூறுகிறேன். நீங்கள் இச்சமயம் இலங்கை திரும்புவது எவ்விதத்திலும் நல்லதல்ல.

நீங்கள் விரும்பினுலும் இனி நீங்கள் இந்த மந்திரி சபையிலிருந்து நிம்மதியாக வேலை செய்வது முடியாது.

உங்களால் பிரதம மந்திரிக்கு உதவியை விட உபத்திரவமே அதிகமாகலாம்.

ஆகவே, நீங்களாக இச்சமயம் விலகிவிடுவது, மேலான பார்லிமெண்ட் சம்பிரதாயமாகும். காமன்வெல்த் பார்லிமெண்ட் மாநாட்டில் கலந்து, அங்கு நடப்பவற்றைக் கேட்டதின் பயனுக, தங்கள் மனம் நான் கூறிய முறையில் மாறுமென்று எதிர்பார்க்கும்

பூஜ்யம்

குறிப்பு:-

இங்கு தங்களுக்குப் பதிலாக தங்கள் சகோதரர் ஸிட்னி சொய்ஸா, பார்லிமெண்ட் எதிர்க்கட்சியினருக் கெல்லாம் "பாயிண்ட் பாயிண்டாக" நீண்ட பதில் கொடுத்திருக்கிருர். அவரது அறிக்கையைக் கண்டு எதிர்க்கட்சியினரனைவரும் பெரிய பரபரப்பு அடைந்திருக்கிருர்கள். தங்களால் கூட இப்படிச் செய்திருக்க முடியாது.

அவர் அரசாங்கத்தில் ஒரு மந்திரியாக இருக்க வேண்டியவர். ஐ. ஜி. பி. பதவியெல்லாம் இனி அவருக்கு அற்பமென்றே தோன்றுகிறது. ஆகவே மந்திரி சபையில், உங்கள் ஸ்தானத்துக்கு உங்கள் தம்பியாரை நியமிக்க ஒழுங்கு செய்வது உத்தமமென்று நான் பலமாகச் சிபார்சு செய்ய விரும்புகிறேன். எதிர்காலத்தில் அவர் இந்நாட்டு சர்வாதிகாரியாக வரவும் கூடுமென யாரோ ஒருவர் சோதிடம் கூறினர். அப்பதவிக்கான தகுதிகளனைத்தும் அவரிடம் இருக்கிறதென்பதை இந்த அறிக்கை மூலம் அவர் நிரூபித்து விட்டதைச் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்.

பூஜ்யம்

## முட்டாள்தனமான ஆர்ப்பாட்டங்கள்:
### அடி, உதை, துப்பாக்கிச் சூடு, சண்டியர் காவலாளி

தாமரவள்ளி, டெமேரியா, டியகம—இவையெல்லாம் புகழ் பெற்ற தோட்டப் பெயர்கள். மலைநாட்டுத் தொழிலாளரின் நினைவைவிட்டு அவை என்றென்றைக்கும் பிரியமாட்டா. இங்கேதான் அவர்கள் துப்பாக்கிக் குண்டையும் எதிர்த்து மனித உரிமை, ஒன்று கூடிப் பேசும் உரிமை முதலியவற்றிற்காகப் போராடியவர்கள்.

நாவலப்பிட்டியிலுள்ள தாமரவள்ளித் தோட்டத்தில் பதினைந்து வருடங்களுக்கு முன் துப்பாக்கி வெடி தீர்ந்தபோது அயலிலுள்ள தோட்டங்கள் யாவும் அதிர்ச்சியுற்றன. அவை மறுபடியும் சுய உணர்ச்சிக்கு வரப் பல நாள் பிடித்தது.

டெமேரியாவில் இதற்கு எதிர்மாருன விளைவு ஏற்பட்டது. அங்குள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர் துப்பாக்கி வெடிச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு கொந்தளித்தெழுந்தனர். அதேபோல, டியகம வெடித்தீர்ப்பிலும் நேற்றுவரை புழுவென மதிக்கப்பட்ட தோட்டத்தொழிலாளி இரும்பு நெஞ்சினனுக மாறினுன். "நீதி வேண்டும்" என்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒரே குரலில் வற்புறுத்திக் கேட்டார்கள்.

### காட்டு மிராண்டிச் செயல்

துப்பாக்கிச் சூடு ஒரு காட்டு மிராண்டிச் செயல். சுடுபவர்களுக்கு அது ஒருபோதும் பந்தோபஸ்து அளிக்காது. இதற்கு சான்று வேண்டுமானல் இந்தத் தோட்டங்களையே நோக்குவோம். துப்பாக்கியின் உதவியால் எந்தத் தொழிற் சங்கங்களை அடக்கி நசுக்க முயன்ருர்களோ அதே சங்கங்கள் செழித்தோங்கி வளருகின்றன. உண்மையில் ஏராளமான தொழிலாளர் (முன் சங்கத்தில் சேராத தொழிலாளர்) சங்கங்களில் சேர்ந்தனர். துப்புரவான தண்ணீர் விநியோகம், குடியிருப்பு வசதிகள், நல்ல பள்ளிக் கூட வசதிகள், சுகாதாரம் முதலிய சாமான்ய வாழ்க்கை சுகங்களைப் பெறுவதற்கு இன்று அவர்கள் முன்னணியில் நின்று போராடுகிருர்கள்.

### 'லெட்சுமி' தோட்டத்தில்

இரண்டு வாரங்களுக்கு முன் "லெட்சுமி" தோட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்து 30,000 தொழிலாளர் நாவலப்பிட்டி பகுதியில் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த சம்பவத்தில் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிய வருகிறது. தாமரவள்ளி, டெமேரியா, "லெச்சுமி" தோட்டங்களில் தோட்டக் காவலாளிகள் தொழிலாளரை நோக்கிச் சுட்டனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. வேலை நிறுத்த நாட்களில் இதே "காவலாளிகள்" முதலாளிகளுடைய நன்மைகளைப் பாதுகாக்க உபயோகிக்கப் பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

பொகவந்தலாவை, காஞ்சமலை, மெல்போட், ரூபெரி முதலிய தோட்டங்களிலும் இம்மாதிரி காவலாளிகள் உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

**வேலை நிறுத்தங்களை முறிப்பதற்கும் தொழிலாளர் மீது கண்டபடி சுடுவதற்கும் கூலிக்கமர்த்தப்பட்ட சண்டியர்களை உபயோகப்படுத்தப்படாதென்று தொழிற் சங்கங்கள் தோட்ட முதலாளிகளுக்கு எடுத்துக் கூறும் காலம் நெருங்கிவிட்டது.**

சமீபகால வருடங்களில் மலைநாட்டுத் தொழிலாளரின் சீவியத்தைப் பலரும் திரணமாக மதித்து விட்டார்கள். அடியும் உதையும் துப்பாக்கிச் சூடும் சாதாரண சம்பவங்களாகிவிட்டன. மனித உயிருக்கு எப்பொழுதும் மதிப்பு இருக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர் அநாவசியமாகத் தங்கள் உயிர்களை இழக்கும் சந்தர்ப்பங்களைத் தடுக்க வேண்டும். அடியும் உதையும் சுடுதலும் தவிர்க்கப்படவேண்டும். சண்டியர்களை காவலாளிகளாக அமர்த்துவது போலவே முட்டாள் தனமான ஆர்ப்பாட்டங்களும் விரும்பத்தக்கனவல்ல.

### தொழிற் சங்கங்களுக்கு வெற்றி

கடந்த நான்கு வருடங்களாகவும் அதற்கு மேலும் ஒரு தோட்டம் ஒரு சொந்தக்காரர் கையிலிருந்து இன்னெருவருக்கு மாற்றப்படும்போது, முதலாளிகள் தொழிலாளர்களை ஏமாற்றி வந்திருக்கிருர்கள். தோட்டம் கைமாறி விட்டாலும் அது எங்கள் தோட்ட முதலாளிகள் சங்கத்துக்குள்ளே தான் இருக்கிறதென்று அவர்கள் கூறிவந்தார்கள். 'உங்கள் பழைய சேவைகளையும் பென்ஷன் முதலிய உபகாரங்களையும் நாங்களே கவனித்துக் கொள்வோம்' என்று புதிய முதலாளிகள் கடத்தி வந்தார்கள். ஆனல் தோட்டசிப்பந்திகளுக்கும்,(ஒருவேளை சூப்பரிண்டென்றுக்கும் கூட இருக்கலாம்) அவர்களுடைய பழைய சேவைகளுக்காக "ஏதாவது" கொடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலைமையை மூன்று வருடங்களுக்கு முன்பு மத்துகமத்திலுள்ள ஒரு தோட்டத்தில் தொழிற் சங்கங்கள் எதிர்த்தன. ஆனல் அந்த வழக்கு தொழில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட பின்,

## மலைநாட்டுக் கடிதம்

முதலாளிகள் ஏற்கெனவே கொடுப்பதாகக் கூறிய தொகையைவிடக் குறைந்த தொகையே தொழிலாளர்களுக்குக் கிடைத்தது.

ஆனல் நாவலப்பிட்டியிலுள்ள கடுகன் சேனைத் தோட்டத்தில். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர் சங்கம், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இம் மூன்று சங்கங்களும் ஒன்று கூடி இவ் விஷயத்தில் வெற்றிபெற்று விட்டனவென்று ஒரு தொழிற் சங்கப் பிரதிநிதி கூறுகிருர். இம் மூன்று சங்கங்களும் ஒன்ருக நடத்திய (பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் சம்பந்தப்பட்ட) வேலை நிறுத்தத்துக்குப் பின், ஒரு தோட்டம் கைமாறும் போது தொழிலாளர்களுக்கு உபகார சம்பளம் வழங்கத்தான் வேண்டுமென்ற நியதியை முதலாளிகள் ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். இது மிகவும் முன்னேற்றமான ஒரு செயல் என்பதை எவரும் மறுக்க முடியாது. எவ்வளவு தொகை அளிக்கப்பட வேண்டுமென்பது பின்னர் கணிக்கப்படும். பெரியவையும் சிறியவையுமாக சுமார் 90 தோட்டங்கள் கடந்த சில வருடங்களில் கைமாறி விட்டன. இப்புதிய ஒழுங்கு மற்றைய தோட்டங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுமா என்று இந்நிலையில் கூறமுடியாது.

### பால் சேர்க்கும் நிலையங்கள்

இலங்கை பால் சபை ஏற்கெனவே கம்பளையிலும் கோட்டகலையிலும் இரண்டு நிலையங்களை ஸ்தாபித்துள்ளது. இவை தோட்டத்தில் வசிக்கும் மக்கள் பலருக்கு ஓர் புதிய வழியில் வருமானத்தைத் தேடிக் கொடுக்கும். தோட்டங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுள்ள இந்நேரத்தில் இது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. வெகு விரைவில் பலாங்கொடையிலும் ஒரு நிலையம் நிறுவப்படும். பிற்பகல் ஒன்றேகால் மணிக்குத் தோட்ட வேலையை முடித்துவிடும் ஆண்கள் மாட்டு வளர்ப்பில் இனிமேல் கவனம் செலுத்துவார்கள். இன்னெரு சீவனுக்கு உணவு தேடலாம்.

## வைத்திய சாஸ்திரத்தில் ஒரு புதிய சாதனை

அமெரிக்காவில், ஓர் இளைஞனின் துண்டிக்கப்பட்ட கால், டக்டர்களால் திரும்பவும் பொருத்தப்பட்டுள்ளது. இந்த வெற்றிகரமான சாதனையைக் கடைசி வரைக்கும் டக்டர்கள் வெளிவிடவில்லை.. வைத்திய சாஸ்திரத்தின் வரலாற்றிலே இது ஒரு புதிய சாதனையாகும். இளைஞனின் கால் இப்பொழுது இரண்டு அங்குலம் கட்டையாக இருக்கின்றது அவ்வளவுதான். மற்றும்படி, கால் முன்னர் இருந்தது போலவே இருக்கின்றது.

மிகச் சிறந்த
அலுமினியப்
பாத்திரங்களுக்கு
எங்களிடம் வாருங்கள்
சி. வி. பாட்
டாம் வீதி, :: கொழும்பு.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஐப்பசி மீ 21 வ. (7-11-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## கவர்னர் ஜெனரலின் பொறுப்பு

நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின் பிறகு தஹநாயக்காவின் மந்திரிசபை பெரிதும் ஆட்டம் கண்டுவிட்டது.

"இந்த அரசாங்கத்துக்கு இந்த நாட்டை ஆள தார்மிக உரிமை சிறிதும் கிடையாது. இதன் ஒவ்வொரு நடவடிக்கையும் இச்சபையின் நம்பிக்கையை இழக்கச் செய்ததாக இருக்கிறது" என்பது எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை.

நியமன அங்கத்தினர் அறுவரின் வாக்குகளால், இந்த அரசாங்கத்தின் உயிர் தப்பியது. ஜனப் பிரதிநிதிகளின் வாக்குகளை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால், ஜனநாயக முறைப்படி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதாகவே மதிக்கப்படும். சட்டப்படியான வெற்றி அரசாங்கத்துக்குக் கிடைத்திருப்பினும் தார்மிக வெற்றி எதிர்க் கட்சிகளுக்கே கிடைத்துள்ளது.

என்றாலும் இலங்கை அரசியல் சட்டத்தின் எழுத்துப்படி, இந்த அரசாங்கம் முதல் கண்டத்துக்குத் தப்பிவிட்டது. என்றாலும் அரசாங்கக் கட்சிக்குள்ளாகவும், மந்திரி சபைக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டு அவை அம்பலத்துக்கு வந்துவிட்டன. நிதிமந்திரியை மட்டுமன்றி நீதி மந்திரியையும் நீக்க வேண்டுமென்ற கிளர்ச்சி பலப்பட்டுள்ளது. நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமை மாறிவருகிறது. அடுத்தபடி என்ன நடக்குமோ என்ற நிச்சயமற்ற நிலையில், மந்திரி சபையின் வாழ்வு இருந்துவருகின்றது.

ஆறு மந்திரிகள், கவர்னர் ஜெனரல் மாளிகைக்குச் சென்று ஏதோ 'குசுகுசு' கூட்டம் நடத்தினர். நிதிமந்திரியை நீக்கவேண்டுமென்றும் அப்பொழுதுதான், பண்டாரநாயக்கா கொலை சதி வழக்கு விசாரணை தடையின்றி நடந்து உண்மைக் குற்றவாளிகளுக்கு வரும் தண்டனைக்கு உள்ளாவரென்று அவர்கள் எதிர்க் கட்சிகளைப்போலவே கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பைப் பிரதமர் ஒரு விதமாகச் சமாளிக்கலாம். ஆனால் தமது மந்திரி சகாக்களிலே 14 பேர்களில் 6 பேர், அதாவது, ஏ. பி. ஜெயசூரியா, (சுகாதாரம்) டி.பி. இலங்கரத்ன, [உள்நாடு) மைத்திரிபாலசேனநாயக்க, (போக்குவரத்து) கலுகல்லே, (கலாச்சாரம்) எம். பி. டி. சொய்ஸா, (தொழில்) ஸரத் விஜயசிங்க, (தேசியமய சேவைகள்), பொலிஸ் இலாகாவை, பிரதமரே ஏற்கவேண்டுமென்றும் கொலை சதி வழக்கு விசாரணைப் பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டுமென்றும் கூறி, இப்போது நடைபெறும் புலன் விசாரணையில் அவநம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிரதமர் தமது சகாக்களை வசப்படுத்த, ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் உதவியை நாட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது!

இதற்கிடையே எதிர்க் கட்சியினர், நிதிமந்திரிமீதும் நீதி மந்திரிமீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதாயின், அரசாங்கக் கட்சியிலுள்ள சிலரின் ஆதரவு பெற்று அது நிறைவேறவும் செய்யலாம். அரசாங்கத்தின் அவல நிலையையும், தஹநாயக்கா மந்திரி சபையின் பலவீனத்தையும் விவரிக்க வேறு ஒன்றும் தேவையில்லை.

என்றாலும் திரு. தஹநாயக்கா 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அரசாங்கத்தைக் கொண்டு செலுத்தப் போவதாயும், சபையைக் கலைத்து பொதுத் தேர்தல் நடாத்தப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். வேறு விஷயங்களிலே அவருடன் கருத்து வேற்றுமை கொண்டிருப்பினும் அரசாங்கக் கட்சியில், அனைவரும், எதிர்க் கட்சியில் சிலரும், இச்சமயம் சபையைக் கலைக்க பொதுவாக விரும்பவில்லை. காரணம் கூறாமலே விளங்கும்.

ஆகவே இவ்வித சச்சரவுகள் பற்றி, ஏதோ ஒரு தற்காலிக சமரசங்கள் செய்து கொண்டு சிலரை நீக்கி, வேறு சிலரைச் சேர்த்து, கூடுமான வரை, இந்த அரசாங்கத்தின் ஆயுளை நீடித்துக் கொண்டு செல்ல முயலக்கூடும்.

ஆனால், பொது மக்களின் நம்பிக்கையை இந்த அரசாங்கம் ஏற்கனவே வெகுவாக இழந்து விட்டது. பண்டாரநாயக்காவின் கொலை சதி வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் அனைவரும் கண்டு பிடிக்கப்பட்டு, தண்டிக்கப் படுவார்களா? என்பது குறித்து பொது மக்களிடையே சந்தேகம் அதிகரித்து வருகின்றது.

முக்கிய காரணம் பற்றியே, பிரதமர் தகநாயக்கா இந்தப் பொறுப்பு, தமக்கு வேண்டாமென்று நீதி மந்திரியிடம் இதை ஒப்புவித்துவிட்டு ஒதுங்கினார். அவர் விருப்பத்துக்கு மாறாக, அவரிடம் இந்தப் பொறுப்பை, அதுவும் பார்லிமெண்ட் விவாதத்தில் கூறப்பட்ட பல குற்றச் சாட்டுகளுக்குப் பிறகும் ஒப்புவிப்பதாயின், அது பிரதமருக்கே பெரிய பளுவாவதுடன், பொது மக்களின் நம்பிக்கையையும் இவ்விஷயமாகப் பலப்படுத்த முடியாது.

இது போன்ற ஒரு பெரிய நெருக்கடி, சுதந்திரம் கிடைத்த பின் இலங்கைக்கு ஏற்பட்டதில்லை. பிரதமர் பதவி வகித்த ஒருவர் பட்டப் பகலில் கொலை செய்யப்பட்டுள்ளார். இது பாரதூரயான விஷயம்.

நாம் ஏற்கனவே கூறியது போல், பெரியதோர் அரசியல் சதி நடந்திருக்கிறது. இந்தச் சதியில் ஈடுபட்டவர்களை தயவுதாட்சண்யமின்றிக் கண்டு பிடித்து தண்டனைக்கு உட்படுத்தாவிடில், இந் நாட்டில் இனி எந்தப் பிரதமரும், மந்திரியும், அல்லது எம். பியும் நிம்மதியாகப் பயமின்றிக் கடமையாற்ற முடியாது போய்விடும். உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

இவ்வித அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள சமயத்தில் அதைச் சமாளிக்க மிகவும் பலமான அரசாங்கம் தேவை. ஆனால் இன்றுள்ள அரசாங்கமோ பெரிதும் ஆட்டம் கண்டு பலவீனமாகவுள்ளது. எதிர்க்கட்சிகளும் பிளவு பட்டுள்ளதாலும், இன்றைய ஆட்சிப் பொறுப்பை அவர்களாலும் சரிவர நிறைவேற்ற முடியாது. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வருகிறது.

இச்சமயம் நாட்டு மக்களின் நன்மையைப்பாதுகாக்க வேண்டிய பெரிய பொறுப்பு கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்காவையே சேரும். அரசியல் சட்டப்படி, எந்த மந்திரி சபையை எந்தச் சமயமும் நீக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை முன்னிட்டும், இன்றுள்ள மந்திரி சபைக்கு, மக்கள் பிரதிநிதிகளின் மெஜாரிட்டி பலம் இல்லாததாலும், கவர்னர் ஜெனரல் குறுக்கிட்டு, தாமேகொலைச் சதி வழக்கு சரிவர நடக்கவும் நாட்டில் அமைதி ஏற்படச் செய்யவும் திறமை மிக்க அனுபவஸ்தர்களடங்கிய ஆலோசனைச் சபை உதவியுடன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இனி சற்றும் தாமதியாது ஏற்க வேண்டுமென்பதே பொது மக்களின் விருப்பமாகும்.

---

## காங்கிரஸ் சமரசம்

இலங்கை சுப்ரீம் கோட் அளித்த தீர்ப்புக்குப் பின் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸுக்கும் சமரசமும் ஒற்றுமையும் ஏற்பட வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

இ. தொ. காங்கிரஸிலிருந்து திரு. அஸீஸையும் மற்றும் சிலரையும் நீக்குவதாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக நிறைவேற்றிய தீர்மானத்தை, நாவலப்பிட்டியில் சமீபத்திற் கூடிய இ. தொ. காங்கிரஸ் புனராலோசனை செய்து, அத் தலைவர்கள்மீதிருந்த தடையை நீக்கி விட்டது. இருதரப்பினருக்கும் சமரசப் பேச்சுகள் நடந்து வருவதாயும் இருசார்பினரும் முன்போல் ஒற்றுமையாகி விடலாமென்றும் இதற்கான முயற்சிகள் நடப்பதாயும் சில வாரங்களாகவே செய்திகள் அடிபடுகின்றன. இந்தச் சூழ்நிலையில், ஏற்கனவே தொடரப்பட்ட வழக்கோ, சுப்ரீம் கோட் தீர்ப்போ அர்த்தமற்றது.

தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாகக் கிடைத்துவிட்டதாக ஜ. தொ. காங்கிரஸ்காரர் நினைத்து, பழைய வழக்கை மேற்கொண்டு நடத்தவோ, அல்லது, இத் தீர்ப்பை ஆட்சேபித்து இ. தொ. காங்கிரஸ் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளுவதோ மலைநாட்டுத் தொழிலாளரின் நன்மைக்கு உகந்ததாகாது. ஏற்கனவே, இந்திய தொழிலாளரின் பணம் இவ்வழக்குகளுக்காக, பெருமளவு வீணாக்கப்பட்டுவிட்டது. இனியும் வழக்குகளிலும், பிளவுகளிலும் இப் பணத்தை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது.

தவறுகள் செய்வது யாருக்கும் சகஜம். குற்றம் காணிற் சுற்றமில்லை. பத்து லட்சம் மக்களின் எதிர்காலத்துக்கு பொறுப்பேற்றுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் பழைய வேற்றுமைகளை அடியோடு மறந்து, மீண்டும் ஒரே ஸ்தாபனத்தின்கீழ் பணியாற்றவேண்டியது அவர்களது பெருங் கடமையாகும். இன்னும் பிளவுபட்டு, வேற்றுமைகளை வளர்ப்பது அத்தொழிலாளருக்குப் பாதகம் செய்வதேயாகும்.

---

## செல்வக் குழந்தைகள்

குழந்தைகள் நாட்டின் செல்வம். எதிர்கால உலகம் சகல வளங்களையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் திகழ வேண்டுமாயின் இன்றைய குழந்தைகளின் நல்வாழ்வே அதற்கு அடித்தளமாக அமைய வேண்டும்.

உலகிலே தங்களுக்கு ஓர் உன்னத இடம் உண்டு என்பதை ஒவ்வொரு குழந்தையும் உணர வேண்டுமென்பதற்காகவே குழந்தைகள் விழா உலகெங்கணும் கொண்டாடப் பெற்று வருகின்றது.

ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதத்திற் கொண்டாடப்படும் உலக குழந்தைகள் விழா இவ்வாரம் இலங்கையில் தேசிய குழந்தைகள் வாரமாகக் கொண்டாடப்படுகின்றது.

சுகமேசெல்வம் என்பார்கள். குழந்தைகளும் சுகவாழ்வுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பெற்று நல்ல சூழ்நிலையில் வளர்ந்து வருவார்களாயின், அவர்களின் எதிர் காலம் மகோன்னதமாக விளங்குமென்பது குழந்தை உள்ளத்தை நன்கு உணர்ந்தவர்களின் முடிபாகும்.

அறிவு, அன்பு, ஆண்மை, என்ற பண்புகளில் ஊறி வளரும் குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல பெற்றோர்களாகவும், அயலவரை நேசித்து அவர்களின் சுக துக்கங்களிற் பங்கு பற்றும் பண்பாளர்களாகவும், நல்ல நண்பர்களாகவும் விளங்குவார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை. இவ்வளவு சிறப்பும் அவர்களிடம் குடி கொள்ளுமாயின் அவர்கள் நல்ல குடியுரிமையாளர்களாக வாழ்ந்து நாட்டுக்கும் உலகுக்கும் நன்மையானவற்றையே செய்து வருவார்கள்.

ஒரு குழந்தை வளர்ந்து கல்வி கற்றுப் பொறுப்பான காரியங்களை நிறைவேற்ற வேண்டுமாயின் அவற்றுக்கான அடிப்படைத் தேவைகள் கிடைத்தேயாக வேண்டும். அந்த வசதிகள் அவர்களுக்குக் கிடையாதாயின், நோயாளர்களாகவும் சண்டை சச்சரவுகளில் நாட்டம் கொள்பவர்களாகவும், தகாதவற்றைச் செய்து சமூகத்துக்கும் பூமிக்கும் பாரமுள்ளவர்களாகவுமே இருந்து வருவார்கள். இந்தப் பரிதாபமான நிலை குழந்தைகளுக்கு ஏற்படுவதை ஒருவரும் விரும்ப மாட்டார்கள். குழந்தைகளின். எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் அவர்களுக்கான சகல வசதிகளையும் அளித்து அவர்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

---

## பிரதமரின் வாக்குறுதி

திரு. தகநாயக்கா புதிய பிரதமராகப் பதவி ஏற்றதும், வாழ்க்கைச் செலவைக்கூடக் குறைக்கப்போவதாக வாக்களித்தார். அதற்கு முதற்படியாக இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு பருப்பு முதலியவற்றை இறக்குமதி செய்ய வசதி அளிப்பதாயும் கூறினர். அவர் பதவி ஏற்று ஐந்து வாரங்களுக்கு மேலாகின்றன. இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் எந்தப் பொருள்களின் விலையும் குறைவதற்குப் பதில் அதிகரிப்பதாகவே தெரிகிறது. ஒரு கொத்து பருப்பு ரூ. 1-90. மிளகாய் ஒரு ருத்தல் 2 ரூபாய், ஒரு தேங்காய் 30 முதல் 35 சதம். ஒரு எலுமிச்சம்பழம் 10 சதம். இந்த விலை வாசிகள் பிரதமருக்குத் தெரிந்தே இருக்கும். பொதுமக்களின் வாழ்க்கைச் செலவுப்பளுவு குறைவதற்குப்பதில் உயர்ந்துகொண்டு போகிறது. இறக்குமதிப் பொருள்களின் விலை வாசிகள் அநேகமாக நமது கையில் முற்றிலும் இல்லை என்று சமாதானம் சொல்லலாம். ஆனால் உள்நாட்டில் விளையும் தேங்காய், தேயிலை விலை வாசிகளையாவது குறைத்து மக்களுக்கு அவை தாராளமாகக் கிடைக்கும்படி செய்ய முடியாதா? தேங்காய்கள் கிடைப்பதே அரிதாக இருப்பதாயும், கிடைத்தாலும் விலை அதிகமென்றும் பொது மக்கள், சிறப்பாக வறிய குடும்பத்தினர் சங்கடப்பட்டு முணுமுணுக்கிறார்கள். பிரதமர் தகநாயக்காவுக்கு வேறு பல எவ்வளவோ கவலைகள் உள்ளன வென்பது உண்மையே. எனினும் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பளுவைக் குறைக்க வேண்டியது எந்த அரசாங்கத்தினதும் முதற்கடமை என்பதை அறிவுறுத்தி, அவர் அளித்த வாக்குறுதியையும் இங்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

## கதிர்காமத்தில் பிரதமர் தகநாயக்கா

சென்ற திங்கட்கிழமை ஒரு புத்தபிக்கு வந்தார். கண்டியைச் சேர்ந்தவர். வாலிபவயது. கொச்சைத் தமிழ் பேசுவார். சில வருஷங்களாக அவரைத் தெரியும். சிங்களத்தில் சில தமிழ் நூல்களை மொழி பெயர்த்து வருகிறார். மதுரைக்குச் சென்று, அங்குள்ள தமிழ்ச் சங்கத்தில் படிக்க வேண்டுமென்று அவருக்கு வெகு நாள் ஆசை.

மஞ்சள் உடையைக் கண்டதும் மனம் திடுக்கிட்டது. அவர் நல்லவர்தான் என்றாலும் காலப்போக்கு அப்படி எம்மை நினைக்கச் செய்கிறதல்லவா?

வந்தவரை அழைத்துச் சுகம் விசாரித்தேன். "இப்பம் சாமிமாருக்கு யாரும் தானம் கொடுப்பதில்லை. மிச்சம்கஸ்டம். வெளியில் தெருவிலே நடக்கவும் பயமாக இருக்கிறது. யாராவது கல்லால் அடிப்பார்களோ என்று பயம்.

இலங்கையே மிச்சம் கூடாது. இந்தியாவுக்குப் போய் இந்து சாமியாராகிவிடப் போகிறேன். பாஸ்போர்ட் கூட வாங்கிவிட்டேன்" என்றார். பாவம்!

சென்ற ஒரு மாதத்துக்குள்ளாக, நூற்றுக்கணக்கான புத்தபிக்குகள் மஞ்சள் உடையைக் கழற்றிவிட்டு சாரம் கட்டிக் கொண்டு விட்டனராம்!

சென்ற வாரம் பார்லிமெண்ட் சபைக்குச் சென்றேன். அங்கு நடந்த அபூர்வமான அரசியல் நாடகமெல்லாம் பார்த்தேன், கேட்டேன்! முதலில் பாஸ் கிடைக்கவில்லைத்தான். நானும் விடவில்லை. பகீரத முயற்சியால் அது கிடைத்தது.

எனக்கு மட்டுமல்ல இங்குள்ள தினசரிப் பேப்பர்களுக்கே பாஸ்களை மிகவும் குறைத்து விட்டனராம். அவர்களே கூப்பாடு போடுகிறார்கள்.

காலரிகளெல்லாம் காலி. ஏன் பேப்பர்காரர்களையும் கூட இப்படித் தடுக்க வேண்டும்? எதிர்க்கட்சிகளின் ஏச்சையும் பேச்சையும் அதிகம்பேர்கேட்டு விடுவார்களே என்று வெட்கமா?

காரணம் எதுவாயினும், அன்றைய விவாதம் என்றும் மறக்க முடியாதது. டாக்டர் என். எம்., பீட்டர் கெனமன், ரொபர்ட்குணவர்த்தன, நிமால் கருணாதிலக்கா இவர்களின் கர்ஜனை என் செவிகளில் இன்னும் அப்படியே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நிமால் ஒரு இளைஞர். பேப்பர்காரராக இருந்தவர். எல்லாரும் குறிப்பெழுதிப் பேசினர். அவர் மட்டும் குறிப்பெதுவுமில்லாமல், தகநாயக்காவை நேரடியாக ஏகவசனத்தில் காரசாரமாகத் தாக்கிப் பேசினர்.

இப்படி எல்லாம் தாக்கியது கூடப் பெரிதல்ல. இத்தனையையும் தலை குனிந்து கேட்டுக் கொண்டு, வாய்மூடி மௌனியாக, பொறுமையே பூஷணமாக இருந்தாரே பிரதமர், அதுதான் பெரிது. பொறுமைசாலிக்கு ஒரு நோபல் பரிசு கொடுப்பதாயின் அது பிரதமர் தகநாயக்காவுக்குத்தான் கிடைக்கவேண்டும். நானாகவிருந்தால், உங்கள் பிரதம மந்திரி வேலையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாமென்று உடன் சபையை விட்டு வெளியேறியிருப்பேன்!

* * *

"கதிர்காமக் கடவுள் கூட உமக்குக் கருணை காட்ட மாட்டார்!" என்று சபித்தார் பிரதமரை நோக்கி கருணாதிலக்கா.

என்றாலும் பிரதமர் தகநாயக்கா மீண்டும் கதிர்காமம் சென்று "கருணைகூர் முகங்கள் ஆறும்" கொண்ட முருகனை வழிபட்டார். பலத்த பொலிஸ் பந்தோபஸ்தாம்.

சிங்களம் பேசுகிறார் அங்கு ஒரு தமிழ் வாலிபர். அவரது 'ஒட்டோகிராப்' புத்தகத்தில்

[9ஆம் பக்கம் பார்க்க]

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதென்று சொல்லுவார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது எங்கள் சின்னஞ்சிறு இலங்கைத் தீவு. இலங்கையின் பெயர் இன்று உலகெங்கணுமே சாரமாரியாக அடிபடுகின்றதென்ருல் அதன் கீர்த்தியைப்பற்றி இங்கு எழுதுவதற்கு நான் யார்?.

'கொழும்புத் திட்டம்' என்ற பெயர் சாம்ராச்சிய நாடுகளுக்கே பெரும்புகழ் ஈட்டிக்கொடுத்து வருகின்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளின் விருத்திக்கென 1950ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட இத்திட்டம் திக்கனைத்தும் இலங்கையின் மதிப்பைப் பரப்பி வருகின்றதெனலாம். கொழும்பு இலங்கையிலா, அல்லது இலங்கை கொழும்பிலா என்று பிறநாட்டார் திக்குமுக்குப்படுகின்ருர்கள் என்ருல் கொழும்பு மாநகரைப் பற்றியும் இலங்கையைப் பற்றியும் வேறு என்ன கூற இருக்கின்றது!

## லோகநாதன் திட்டம்

இந்த மாதிரி எல்லாம் இரத்தினக் கம்பளத்தில் அளந்து கொட்டுவதை நான் விரும்பவில்லை. அதுவும் மழைகாலத்தின் போது அன்பான வாசகர்களை எதற்காக இழுத்துப்பிடித்து இதில் அமர்த்த வேண்டும். நான் சொல்லவந்த காரியத்தை இதோ சொல்லி விடுகின்றேன். அப்புறம் உங்கள் பாடு.

'மார்ஷல் திட்டம்', 'கொழும்புத் திட்டம்' என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கின்றீர்களல்லவா? அதே போல 'லோகநாதன் திட்டம்' என்ற ஒரு திட்டமும் உலகின் பாராட்டை மிகுதியும் பெற்று வருகின்றது. இத்திட்டத்தைத் தயாரித்தவர் வேறெவருமில்லை. அவர்தான் எங்கள் இலங்கை வங்கியின் ஜெனரல் மனேஜர் திரு. ஸி. லோகநாதன்.

பின் தங்கிய நாடுகளின் விருத்திக்காக மிகச் சிறந்த ஒரு திட்டத்தை வகுத்துள்ள திரு. லோகநாதன் இலங்கைக்குப் பெரு மதிப்புத் தேடிக் கொடுத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

## கல்விமான்கள் சேவை

பொருளாதார விற்பன்னரின் பாராட்டுகளுக்குப் பாத்திரராக விளங்கும் திரு. லோகநாதன் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். சென். பட்ரிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்புவிழாவுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த திரு. லோகநாதன் கல்வியைப்பற்றி அரிய கருத்துக்களை அவ்விழாவிற் கூறியிருந்தார். குழந்தைகளின் தேவைகளை அறியமுடியாத அரசியல் வாதிகளாற் சிறந்த கல்வியை ஊட்டமுடியாதென்றும் அனுபவம் மிக்க கல்விமான்களால்தான் அப்பணியை நன்கு நிறைவேற்ற முடியுமென்றும் அவர் கூறியதை நாட்டின் நல்வாழ்வில் அக்கறைகொண்ட எவரும் தட்டிக்கழித்துவிட முடியாது.

## அனுபவ உண்மை

திரு. லோகநாதன் இன்னுமோர் அனுபவ உண்மையைத் தெரிவித்துள்ளார். அது நாட்டின் பொருளாதார விருத்தி பற்றியது. நாட்டின் செல்வம் வளமுறுவதற்கு வெளி நாட்டின் பொருளாதார உதவிகள் அவசியமாயினும் செல்வத்தைப் பகிர்ந்தளிப்பதிலேதான் அரசாங்கங்களும் அரசியற் கட்சிகளும் நாட்டங்கொள்வதை அவர் கண்டித்துள்ளார். ஒரு நாட்டின் விருத்தி செல்வப் பெருக்கத்திலேயே தங்கியிருக்கிறதென்பதை அவர் மிக அழகாக எடுத்துக்காட்டியிருந்தார். அரசியல்வாதிகளின் பேச்சுக்களைக் கேட்டுப் பழகியுள்ள மக்களுக்குத் திரு. லோகநாதன் போன்றவர்களின் மணிவாக்குக் காதுகளிற் புகுமா என்பது சந்தேகமே.

## இடைத் தேர்தல்

கோப்பாய்த் தொகுதி இடைத் தேர்தலுக்குத் திருவாட்டி கோமதி வன்னியசிங்கம் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டிபோடவிருப்பதைப்பற்றி இருவகையான கருத்துக்கள் நிலவிவருகின்றன. "திரு. வன்னியசிங்கம் தமிழ்மக்களுக்குச் செய்த சேவைக்கு நன்றி தெரிவிக்குமுகமாகத் திருவாட்டி வன்னியசிங்கத்தைப் பார்லிமண்டுக்கு அனுப்புவதே முறை" என ஒருசாரார் கருதுகின்றனர். "பண்டாரநாயக்காவின் பிரிவுக்குப்பின்னர் தமிழ்மக்களின் கதி யாதாகுமோவென ஏங்க வேண்டிய இந்தவேளையிலே அரசியலிற் போதிய அனுபவம்வாய்ந்தவர்களையே அனுப்ப வேண்டும்" என மற்ருெருசாரார் எண்ணுகின்றனர்.

புதிய பொதுத்தேர்தல் நடைபெறும்போது திரு. வன்னியசிங்கத்துக்கு எதிராகத் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் ஒருவரை நிறுத்துவதாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திட்டமிட்டிருந்தாராம். திரு. வன்னியசிங்கம் பிரிந்து இடைத் தேர்தல் வந்துங்கூடத் திரு. பொன்னம்பலத்தின் சத்தமேயில்லை. புலி பதுங்கியிருப்பது பாய்ச்சலுக்காகவா?

## கதிர்காமத்தில் பிரதமர்

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

'நேர்மையாயிரு. துணிச்சலுடன் இரு"(Be Just Be Bold) டபிள்யு. தகநாயக்கா பிரதம மந்திரி. என்று உபதேசித்து கையொப்பமிட்டதைக் கண்டேன்.

கதிர்காமத்திலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் அவர் கோப்பி சாப்பிட்டுவிட்டு, "இந்த மடத்தை அரசாங்கம் பறிக்காது" என்று சுவாமிக்கு உறுதி கூறித் திரும்பினராம். அந்த மட்டில் நல்லதுதானே!

— ஐயாறன்

# அரசாங்க எம். பிக்களின் பதவி ஆசை

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப்போது மந்திரிசபையில் 14 பேர்தான் உள்ளனர். இரண்டு ஸ்தானங்கள் காலியாகியுள்ளன. நிதிமந்திரியும், நீதிமந்திரியும் விலகுவதாயின் நான்கு ஸ்தானங்கள் காலியாகும். எப்படியும் இரண்டாவது நிச்சயம்.

திரு. தகநாயக்காவுக்கு இப்போது அவசரமாகப் புதிய பலம் தேவையுள்ளது. ஆகவே தமது சுயநலத்தை முன்னிட்டாவது தமிழ்ப்பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி இரண்டல்லது மூன்று மந்திரிப் பதவிகளை இவர்களுக்கு அளிப்பதாயின், (1) திரு. தகநாயக்காவின் மந்திரிசபை பலப்படும். (2) வகுப்புவாத நோய் முறியடிக்கப்பட வழி பிறக்கும் (3) எதிர்காலத்துக்கு திருப்திகரமான அரசியல் திட்டம் தயாரிக்க வசதி ஏற்படும், என்று அனுபவமிக்க ஓர் அரசியல் அறிஞர் கருதுகின்ருர்.

தமிழரின் குறைகளைத் தீர்க்கத்தாம் முற்படப்போவதாகக் கூறிய திரு. தகநாயக்கா தமிழ் எம்.பிக்களைக்கலந்துபேச தீவிர முயற்சிகள் எடுத்து தூதர்கள் அனுப்பி வருவதாகக் கேள்விப்பட்டேன். தமிழரசு வட்டாரங்களில் விசாரித்ததில் இதுவரை அவ்வித தூதர் யாரும் வரவில்லை என்றும், என்ருலும் கல்வி இலாகா விஷயமாக தமிழரசுக் கட்சிக்கும் பிரதமருக்கும் நெருங்கியதொடர்புகள் இருப்பதாயும் தெரியவந்தது.

எப்படியும் இன்னும் 18 மாதம் நீடித்து பதவி வகிக்க வேண்டுமென்று திரு. தகநாயக்காவும் அவரது கட்சியினரும் அவா கொண்டுள்ளனர். இதற்குத் தங்கள் பலத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். எதிர்க்கட்சிகளுக்குள்ளாக தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்ருல்எட்டுப்பிரதிநிதிகளின் புதிய பலம் பெறலாம்.

**தமிழர்களின் குறைகளை நீக்க திரு. தகநாயக்கா உண்மையில் முற்படுவதாயின் தமிழ்ப் பிரதிநிதிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்க மாட்டாரென்று அறிகிறேன்.**

தமிழர்களுக்குச் செய்த அரசியல் முதலிய அநீதிகள்தாம், இன்று நாட்டின் பிரதமர் கொலை செய்யப்பட்டு, இழிந்த நிலை அடைந்திருக்கக் காரணமென்றும் இது கர்ம பலனே என்றும், அந்தஅநீதிகளை நீக்கக்கூடுமானதைச் சீக்கிரம் செய்ய வேண்டு மென்றும் சிங்கள மக்களிடையேயும் பலர் வாய் விட்டுக் கூற ஆரம்பித்திருக்கிருர்கள். இதற்கு முதற்படியாக, தமிழருக்கு சில உறுதி மொழிகள் கூறி, அவர்களுக்கு மந்திரி பதவிகளை அளிக்க திரு. தகநாயக்கா வெகு சீக்கிரத்தில் முன்வரலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

## ஸ்ரீமதி பண்டார நாயக்கா

ஸ்ரீமதி பண்டாரநாயக்காவை பிரதமர் தகநாயக்கா கண்டு, அவரது ஆதரவை தமது அரசாங்கத்துக்குப் பெற முடிந்தது பெரிய காரியம். இப்போதுள்ள அரசாங்கத்தைக் குலைத்தால், பண்டாரநாயக்கா கொலை வழக்கு விசாரணை சரிவர நடைபெருமல் போகுமென்றும், ஆகவே அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படியும், ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, 6 மந்திரிகளை நேரில் அழைத்து வேண்டிக்கொண்டுள்ளார். இதன் பயனை அவர்களும், நிதி மந்திரியை நீக்க வேண்டுமென்று கேட்கவில்லை. நிதி மந்திரி ஸ்டான்லி சொய்ஸா, ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பும் வரை அவர் விஷயம்பற்றி எவ்வித விவாதமும் நடத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதிலிருந்து மந்திரி சபையில் ஏற்பட இருந்த பிளவு ஒரு விதமாக தற்காலிகமாகவாவது நீங்கியிருக்கிறதென்பது தெரிகிறது.

ஒற்றுமை ஏற்படாவிட்டால் தாம் வெளியேறுவதாயும், பார்லிமெண்டைக் கலைப்பதாயும் எச்சரித்தாராம் திரு. தகநாயக்கா. ஆனல் பார்லிமெண்டைக் கலைத்தால், எல்லாரும் பதவி இழக்க நேரிடும். இந்தப் பதவி ஆசை ஒன்றுதான், வேற்றுமை எவ்வளவு இருப்பினும், அரசாங்க எம்.பிக்களை ஒன்றுபடுத்தி வருகின்றது.

அத்தனகலை தொகுதிக்கு ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக அபேட்சகராக முன்வரச் சம்மதித்து விட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீமதி விமலா நீக்கப்பட்டுவிட்டது இதற்கு வழி செய்துள்ளது. அவர் அரசாங்கக் கட்சியில் சேருவதாயின், அரசாங்கக் கட்சியின் பலமும் மதிப்பும் அதிகரிக்கலாம். ஆனல் அவர் எக்கட்சியிலும் சேராமல் சுயேச்சை அபேட்சகராக முன் வருவதே நல்லதென்றும், பழைய அரசியல் கட்சிச் சேற்றில் சிக்குவது அவரின் எதிர் காலத்துக்கு நல்லதல்லவென்றும் மதிக்கப்படுகிறது.

## செனேட் சபை

செனேட்டர் எஸ். நடேசனை, செனேட் சபைக்கு அரசாங்கம் நியமிக்கத்தயாராக முன் வந்ததாயும், ஆனல் அவர் அதை மறுத்து, தேர்தலுக்கு நின்றதாகவும் தெரிகிறது. அவரை நியமன அங்கத்தினர்களும், வேறு சுயேச்சை மெம்பர்களும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரித்ததாகவும் கூறப்படுகிறது.

செனேட் சபை தேர்தலில் அரசாங்கக் கட்சி மூவரை ஆதரிப்பதென்று தீர்மானித்திருந்தது. ஆனல் அதில் இருவர்தான் வெற்றி பெற்றுள்ளனர். அரசாங்கக் கட்சியில் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லை என்பது இதிலிருந்து வெளியாகிறதென்று பிரதமர் திரு. தகநாயக்கா கவலைப்படுகின்ருர். என்ருலும் புதிய தேர்தலின் பயனை செனேட் சபையில் அரசாங்கக் கட்சி பலப்பட்டிருக்கிறது. ஆகவே, அடுத்த மாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அச்சபையில் கொண்டுவரப்பட்டால், அது பிரதமர் நம்புவது போல் தோற்றுவிடும்.

சென்ற வாரம் ஒரே நாள் செனேட் சபை கூடியதும், பொலிஸ் அதிகாரி ஸிட்னி சொய்ஸா வெளியிட்ட அறிக்கைக்கு நிதி மந்திரி ஜயவிக்ரம அனுமதி அளித்ததை செனேட்டர் ரிஜி. பெரேரா பலமாக ஆட்சேபித்தார். ஸ்ரீ பண்டாரநாயக்காவின் கொலை விஷயம் நீதி மன்ற விசாரணையில் இருப்பதால் அதைப்பற்றி எதுவும் விவாதிக்கக் கூடாதென்று செனேட் தலைவர் தடைபோட்டு விட்டார். இதே தடையை ஜனப்பிரதிநிதி சபையிலும் போட்டிருந்தால், பல விஷயங்கள் அம்பலமாகியிருக்க முடியாது. அந்த விவாதமே 'சப்' என்று போயிருக்கும்.

## பிரதமர் தகநாயக்கா

பிரதமர் தகநாயக்கா, ருஷிய வர்த்தக கண்காட்சி ஆரம்ப விழாவுக்கு வரவில்லை, அவர் டெம்பிள் டிரீஸ் மாளிகையில் இருந்து, தமது கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள அரசியல் தந்திரோபாயங்களையெல்லாம் செய்து வருவதாயும், இப்போது அவர் நிலை பலப்பட்டு வருவதாயும், அவரது முயற்சி வெல்லுமாயின், அடுத்த 18 மாதங்களும் அவர் போட்ட திட்டப்படி அவர் ஆட்சி நடத்தலாமென்றும் தெரியவருகிறது.

ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன, இப்போது 'டெம்பிள் டிரீஸ்' மாளிகையிலே ஓர் அறையில் வசிப்பதாக 'சமசமாஜ்ய' என்ற சிங்களப் பத்திரிகை கூறுகிறது. அவர் வீடு கொழும்பு புல்லர்ஸ் ரோடில் இருப்பினும் கால்பேஸ் ஹோட்டலில் அவர் ஓர் அறை எடுத்திருப்பினும், பாதுகாப்பைக் கருதி, "டெம்பிள் டிரீஸி"ல் வசிப்பதாக அப் பத்திரிகை கூறுகிறது.

## நிதி மந்திரியும் எதிர்க் கட்சிகளும்

பார்லிமெண்ட் எதிர்க் கட்சியினரின் கூட்டத்தில் நிதி மந்திரி மீது கொண்டுவரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி ஆராயப்பட்டது. தமிழரசுக் கட்சியினர் இத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதில்லையெனவும், அரசியல் அமைப்புத் திட்டத்தின் பிரகாரம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தமது கருத்தைத்தெரிவித்துள்ளனராம்.

# வவனியாத் தொகுதி இடைத் தேர்தல்

## மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி

— நமது நிருபர் —

வவனியா

வவனியாத் தொகுதியில் நடைபெற இருக்கும் பார்லிமெண்ட் இடைத்தேர்தல் அத்தொகுதி மக்களிடையே, சிறப்பாகத் தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தமிழர் வவனியாத் தமிழர் என்றபாகுபாடு நாளுக்குநாள் வலுப்பெற்று வருகிறது. உள்ளூர்ப்பிறந்த ஒருவரை அபேட்சகராக நியமிக்க வேண்டுமென்ற எண்ணத்திற்கு தமிழரசுக்கட்சி ஆதரவு அளிக்குமாளுல் வவனியாத் தொகுதியைக் காப்பாற்றியது என்ற பெருமையை ஈட்டிக் கொள்ளும் எனப் பலரும் பேசிக் கொள்கின்றனர்.

கூட்டுறவு இயக்கத்தில் முக்கிய பாகம் எடுக்கும் பிரமுகர் ஒருவர் இவ்விடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி மௌனம்சாதிப்பதே நல்லது என அபிப்பிராயம் கூறினர். அப் பிரமுகர் உள்ளத்தே உள்ளூர்ப்பிறந்தவர் ஒருவருக்கே உரியதாக வேண்டுமென்ற எண்ணத்தை உரையாடலின் போது நன்கு உணரமுடிந்தது. யாழ்ப்பாணத் தமிழர் வவனியாத் தமிழர் முல்லைத்தீவுத் தமிழர் என்று பலவாறு பிரித்துக் கொண்டு போனல் அது சிங்களருக்கே உரிமையாகி விடும் என்ற எண்ணமும் அத்தொகுதி மக்களிடையே உதித்துள்ளது. தமிழர் என்ற ஒரே நோக்கில் ஒத்துழைப்பு என்ற அச்சாணியில் இயங்கவேண்டுமென்ற விரிந்த மனப்பான்மை, படித்தவர்களிலும் பார்க்க சாதாரணமக்களிடையே நன்கு உரம்பெற்று வருவது வரவேற்கத்தக்கது. வவனியாப் பகுதியில் நன்கு சேவைசெய்த ஒருவர் அபேட்சகராக வருவாராளுல் மக்கள் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் நிச்சயமாகப் பெறுதல் முடியும். எனவே, தமிழரசுக்கட்சி தீர்க்க புத்தியுடன் சாதுரியமாக நடந்து கொள்ளுமென்பதே அனுதாபிகள் பலரின் நம்பிக்கையாகும்.

# சந்திரனின் முழு உருவம்

## ருஷியர் படம் பிடித்துள்ளனர்

சந்திரனின் முழு உருவத்தையும் படம் பிடித்து ருஷியர்கள் அளித்திருக்கிருர்கள். சந்திரனின் ஒரு புறத்தைத்தான் பூமியிலுள்ள நாம் பார்த்து வந்திருக்கிறேம். சந்திரனின் அந்தப் புற ரகசியங்களை இது வரை யாருமே கண்டதில்லை. காணுத அந்த அரிய காட்சிகளை, 40 ஆயிரம் மைல் தூரத்திலிருந்து படம் பிடித்து அந்தப் படத்தை மூன்று லட்சம் மைல் தூரத்திலிருந்து ரேடியோ போட்டோ மூலம் பெற்று, ருஷியர்கள் வெளியிட்டதைக் கண்டு, அமெரிக்க விஞ்ஞானிகளுள்ளிட்டு உலகமே அதிசயிக்கின்றது.

சந்திரனின் மறுபுறம் அதிக சீராக இருக்கிறதாம். அங்குள்ள ஒரு கடலுக்கு "மாஸ்கோ கடல்" என்று ருஷியர்கள் பெயரிட்டுவிட்டனர். இன்னும் சில வாரங்களிலே சந்திரனுக்கு ருஷியர்கள், கருவிகளுடன், ஆட்களையே நேரில் அனுப்பினல் அதில் வியப்பில்லை என்று பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். இயற்கை சக்திகளை மனிதன் ஒவ்வொன்ருக வென்று வருவது மனிதகுலத்துக்கே பெருமை அளிப்பதாகும்.

# இந்தியா – சீன உறவு மோசம் அடைந்து வருகின்றது

கிழக்கு காஷ்மீரைச் சேர்ந்த லடாக்கில் சீனப்படைகள் இந்திய எல்லைப்புறப் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த (21-10-59) சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியா—சீன உறவுகள் மேலும் மோசமடைந்து வருகின்றன. இச்சம்பவத்தின்போது பத்து இந்தியப் பொலிஸார் கொல்லப்பட்டனர். பத்து இந்தியர் கைது செய்யப்பட்டனர். நாலுபேர் காயமடைந்தனர். இந்தியாவின் எல்லைக்கு 30 மைல் உள்ளே இக்கைகலப்பு நிகழ்ந்தது. லடாக் பிரிவில் சீனர் 40 தொடக்கம் 80 மைல் வரை முன்னேறி 2000 சதுர மைல் பிரதேசத்தைக் கைப்பற்றியதோடு ஒரு வீதியையும் அமைத்திருக்கின்றனர்.

இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்திற்கு வன்மையான ஆட்சேபக் குறிப்பை அனுப்பியிருக்கிறது. கொல்லப்பட்டவரின் ஒன்பது சடலங்களையும் கைது செய்யப்பட்டவர்களையும் ஒப்படைப்பதற்கு சீன அரசாங்கம் ஆயத்தமாக இருப்பதைத்தொடர்ந்து 20பொலிஸ்காரர்கள் அடங்கிய கோஷ்டியினர் ஹொற் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்திற்குப் போய் காத்திருக்கின்றனர்.

### காரணம்

தெற்கு லடாக்கில் நிகழ்ந்த கைகலப்பிற்குக் காரணம் இந்தியப் பொலிஸார் அத்துமீறிச் சீனப் பிராந்தியத்தினுள் பிரவேசித்ததேயாகும் என சீன அரசாங்கம் இந்தியாமீது பழி சுமத்தியிருப்பதோடு இந்தியர்கள் லடாக்கில் இருந்து வெளியேருவிட்டால், சீனம் மக்மாஹன் எல்லையை கடக்கப்போவதாகவும் பயமுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இந்திய அரசாங்கம் இவ்வறிக்கையைத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இந்தியா—சீன எல்லை சம்பவங்கள் குறித்து சோவியத் பிரதமர்குருஷேவ்ஆழ்ந்தமனவருத்தத்தைத் தெரிவித்து, அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் மேலும் நடவாத வண்ணம் இரு நாடுகளும் எல்லைச் சிக்கல்களைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறியிருக்கிறார்.

எல்லைப் புற சம்பவங்கள் இந்தியாவின் பொறுமையைச் சிதடிக்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்டதாகவும் இந்தியா விரைவில் செயலிலிறங்க வேண்டும் என்றும் இந்தியாவின் சுயேச்சைப் பத்திரிகைகள் வற்புறுத்தி வருகின்றன.

சீனர், இந்தியாவின் எல்லைகளைச் சுரண்டுவதற்குக் காரணம் என்ன?

தலாய்லாமாவுக்கும்திபேத்திலிருந்து வந்த 12,000 அகதிகளுக்கும் இந்தியா தஞ்சம் அளி

**இந்தியா.**

த்து திபெத் விவகாரம் ஐக்கிய நாடுகள் தாபன பொதுச் சபையின் விவாதத்திற்கு கொண்டு வரப்பட்டதை இந்தியா தடுக்காமலிருந்ததே காரணமென யூகிக்க இடமிருக்கிறது. பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக்கொண்ட சீனம் எல்லைத் தகராறுகளை பலாத்கார முறையில் தீர்த்துவைக்க முயற்சிப்பது விந்தையாகவேயிருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் சேனாதிபதி, ஜெனரல் காரியப்பா, இந்தியா செயலில் இறங்கா விடுமாயின் சீனத்தின் கை ஓங்கிவிடும் என எச்சரித்திருக்கிறார்.

சிக்கிம், பூற்றன், நேபாளம் ஆகிய நாடுகளின் எல்லையோரமாக சீனப் படைகள் குவிவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### இந்தியா — பாகிஸ்தான் உறவு

இந்தியா—பாகிஸ்தான் உறவு சீரடைந்து வருவது வரவேற்கத் தக்கது. பன்னிரண்டு வருட காலமாக இருந்து வந்த தகராறுகளைத் தீர்ப்பதற்கு இரு நாடுகளும் உடன்பட்டு கிழக்கு பாகிஸ்தான்—இந்தியா எல்லைத் தகராறுகளை சமரசமாக பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்திருக்கின்றன. மேற்கு பாகிஸ்தான் — இந்தியா எல்லைத் தகராறுகள் குறித்து சமீபகாலத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமெனத் தெரிகிறது. பிரிவினைகால நதிப் பங்கீடு குறித்து கராய்ச்சியில், கடந்த மாத நடுப்பகுதியில் ஒரு மாநாடு நடைபெற்றது. சிந்து நதிப் பங்கீடு சம்பந்தமான ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் கைச்சாத்திடப்படும். இதற்கு உலக வங்கியின் அயராத முயற்சி போற்றத்தக்கது.

நேருவும் ஜனாதிபதி அயூப்கானும் 1-9-59இல் முதன் முதலாகச் சந்தித்ததுமுதல் இந்தியா—பாகிஸ்தான் உறவில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகியிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது. 23-10-59இல் இந்தியா—கிழக்கு பாகிஸ்தான் எல்லைத் தகராறுகள் தீர்க்கப்பட்ட கூட்டறிக்கை வெளியாயிற்று.

### ஜோன் மத்தாய் மரணம்

இந்தியாவில் 1948 தொடக்கம் 1950வரை நிதிமந்திரியாக இருந்தவரான டக்டர் ஜோன் மதாய் திங்கட்கிழமை பம்பாயிற் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 73. இவர் வகித்து வந்த முக்கிய பதவிகள் சில வருமாறு:- கைத்தொழில் மந்திரி 1946—47; போக்குவரத்து புகையிரதவிதி மந்திரி 1947—48. இந்திய வங்கியின் தலைமை அதிபர் 1955—56. பத்மவிபூஷண் 1954இல் இவருக்கு பத்மவிபூஷண்விருது வழங்கப்பட்டது.






# டிசம்பரில் பெருந் தலைவர்கள் மாநாடு

## பெல்ஜியன் கொங்கோவில் மீண்டும் கலவரம்

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளின் பெருந் தலைவர்கள் மாநாடு டிசம்பர் 19-ம் திகதி பாரிஸ் நகரில் ஆரம்பமாகும். ருஷியா அடங்கிய பெருந்தலைவர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முதற்படியாக இம்மாநாடு நடைபெறுகின்றது. கிழக்கு—மேற்கு பெருந்தலைவர் மாநாட்டுக்குரிய திகதி, ஆலோசனைக்குரிய விஷயங்கள், மேற்கு வல்லரசுகளின் கொள்கை முதலியன இம்மாநாட்டில் ஆராயப்படும்.

ருஷியா அடங்கிய பெருந் தலைவர்கள் மாநாடு இவ்வருடத்தில் நடைபெறுவதையே பிரிட்டனும் ருஷியாவும் விரும்பின. ஆனால் இம்மாநாடு வசந்த காலத்தில் தான் நடைபெறும் எனத் தெரிகிறது. ருஷியப் பிரதமர் குருஷேவ் பெருந்தலைவர் மாநாடு விரைவில் நடைபெற வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார்.

அடுத்த மாதம் மேற்கு ஜேர்மனியின் பிரதம மந்திரி பாரிஸுக்கு விஜயம் செய்கிறார். அடுத்த வருட முற்பகுதியில் ருஷியப் பிரதமர் பிரான்சுக்கு செல்கிறார். உலக சமாதானத்திற்குரிய சூழ்நிலை உருவாகிய வண்ணம் இருக்கிறது.

### பெல்ஜியன் கொங்கோ

பெல்ஜியத்தின் ஆட்சியிலிருக்கும் ஆபிரிக்க நாடாகிய கொங்கோவில் சுதந்திர கிளர்ச்சிகள் ஆரம்பித்திருக்கின்றன. பெல்ஜிய தேசிய இயக்கத்தினர் சட்ட விரோதமாக கடந்த மாதம் 30-ம் திகதி நடாத்திய கூட்டத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 7 ஆபிரிக்கர் இறந்தனர்; 30 பேர் காயமடைந்தனர். இயக்கத்தின் தலைவர் மொம்பா பெல்ஜிய அரசாங்கத்தின் அரசியல் திட்டத்தை நிராகரித்திருக்கிறார். அவர் இப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார். சென்ற சனிக்கிழமையும் அதற்குப் பின்பும் நிகழ்ந்த கலவரங்களில் 70ஆபிரிக்கர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலர் காயமடைந்திருக்கின்றனர்.

### சைப்பிரஸில் முறிவும் உடன்பாடும்

ஒரு துருக்கிய கப்பல் கள்ளத்தனமாக யுத்த ஆயுதங்களை சைப்பிரஸிற்கு கொண்டு வந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டதும் அதி மேற்றிராணியார் மக்காரியோஸ் அரசியல் திட்டப் பேச்சு வார்த்தைகளை கடந்த மாதம் 21-ந் திகதி நிறுத்தியிருந்தார். இவ்வாரம் மீண்டும் இப் பேச்சு வார்த்தைகளைத்தொடர்ந்து நடாத்த அதி மேற்றிராணியார் மக்காரி

**உலக நிலை**

யோஸ் சம்மதித்திருக்கிறார். பல கிரேக்க சைப்பிரிய மாநகர சபைத் தலைவர்கள் அரசியற் திட்ட மாநாட்டைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

### அல்ஜீரியா

அல்ஜீரியாவில் சுதந்திர யுத்தம் ஆரம்பித்து சென்ற ஞாயிற்றுக்கிழமையுடன் ஐந்து வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இக்காலத்தில் 1,20,000 அல்ஜீரியர் உயிரிழந்துள்ளனர்; 55,000 அல்ஜீரியர்கள் காயமடைந்தும் காணமலும் போய்விட்டனர். 9,300 பிரெஞ்சுத் துருப்புகள் இறந்திருக்கின்றனர். 22,000 பிரெஞ்சுத் துருப்புகள் காயமடைந்துள்ளனர். 12,000 அல்ஜீரிய பொது மக்களும் 2,000 ஐரோப்பியர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த நரபலி தொடர்ந்து நடைபெருமல் இருப்பதற்கு

[14ஆம் பக்கம் பார்க்க]

# சிறுவர் பகுதி

## உண்மை உயர்வு தரும்

(ப. எண். 277 — எஸ். ஜெயரத்தினம்)

பாலுவும் சோமுவும் எந்த நாளும் சந்தைக்குச் செல்வார்கள். பாலு பழ வியாபாரமும், சோமு தேங்காய் வியாபாரமும் செய்து வந்தார்கள். அன்று ஒரு நாள் சோமுவுக்கு நல்ல வியாபாரம். எல்லாத் தேங்காய்களும் ஒரு நொடியில் விலைப்பட்டுவிட்டன. அவன் பெருமிதத்தோடு பாலுவிடம் வந்து 'நீ சுத்த முட்டாள்! என்னைப்பார். நான் பழுதுபட்ட தேங்காய்களையும் நல்லதென்று பொய் சொல்லி ஒரு நொடியில் விற்றுவிட்டேன். நீ உண்மை சொல்லி இன்னமும் ஒரு பழமும் விற்கவில்லையே' என்று பரிகாசம் செய்தான். 'சோமு! வீணாக உளறுதே! உண்மைக்கு என்றும் அழிவில்லை.' 'ஆமடா நீ உண்மை சொல்லி என்னத்தைக் கண்டுவிட்டாய்?' என்று அவனை ஏளனம் செய்துவிட்டு சோமு தேநீர்க் கடைக்குச் சென்றுவிட்டான். பாலு தன் உறுதியை இழக்காமல் பழங்களில் பழுதிருந்தால் அதை உள்ளபடியே வாங்குபவர்களிடம் சொன்னான். அதனால் அவனுக்கு அன்று வியாபாரம் ஓடவில்லை. பொறுமையையிழந்த பாலு வீட்டிற்குப் போவதற்காகப் பழங்களைப் பெட்டிக்குள் போட்டான். அச்சமயம் ஒரு தனவந்தர் வந்து 'தம்பீ! இப் பலாப்பழம் என்னவிலை?' என்று கேட்டார். 'ஐயா! அதில் கொஞ்சம் பழுதிருக்கிறது. ஆனபடியால் அதைக் கழித்துப் பணத்தைத் தாருங்கள்' என்றான். அவரும் அப்படியே செய்தார். மறு நாளும் இருவரும் சந்தைக்கு வந்தார்கள் அன்று சோமு நல்ல தேங்காய்கள் கொண்டு வந்தும் எவரும் அவன் கடையை எட்டியும் பார்க்கவில்லை. அவன் பழுதானதையும் பழுதற்ற தேங்காய் என்று சொல்லி விற்றது தான் காரணம். பாலுவிடம் வழக்கமாக எல்லோரும் வந்து வாங்கினார்கள். முதல் நாள் பலாப்பழம் வாங்கிய தனவந்தரும் அன்று அவனிடம் முன்பிலும் பார்க்க அனேக பழங்கள் வாங்கிக் கொண்டு, பாலுவைப் பார்த்து 'தம்பீ! நீ எத்தனையாவது வரை படித்திருக்கிறாய்?' என்றுகேட்டார். 'நான் எட்டாவது வரை படித்திருக்கிறேன்' என்று பணிவுடன் பதிலிறுத்தான் பாலு. அத் தனவந்தர் 'தம்பீ! இன்று தொடக்கம் நீ இப்படிக் கஷ்டப்படத் தேவையில்லை. உனது நேர்மையும், அடக்கமும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. அதனால் நான் நடத்தும் மோட்டார் கம்பெனிக்கு நீயே மனேஜராக இருக்க வேண்டும். சகல வசதிகளும் செய்து தருகிறேன்' என்று சொன்னார். பாலுவிற்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அடுத்த நாள் அவன் புது பாலுவாக, செல்வச் சீமானாக, விலையுயர்ந்த மிகப் பெரிய காரில் கம்பெனிக்குச் சென்றான். அங்குள்ளவர்கள் அவனுக்கு அமோக வரவேற்பளித்தார்கள். அவனின் நேர்மையான குணம் அங்குள்ளவர்கள் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. அத் தனவந்தர் தன் ஒரே மகளையும் பாலுவிற்கு மணம் செய்து வைத்தார்.

உண்மை என்றும் தோற்காது. எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் உறுதியோடு உண்மையையே பேச வேண்டும். அப்போது தான் நாம் பாலுவைப்போல் முன்னேற முடியும்.

## பனி மனிதன்

(ப.எண். 14—எஸ். மகேந்திரன்)

இமயமலைப் பகுதியில் மனிதனைப்போல ஒரு மிருகம் இருக்கிறது. அதை அப்பகுதியினர் முனிவர் என்றும், மேதி, மீகோ, காங்மீங் என்றும் கூறுவர். வெகுகாலம்வரை மேல் நாட்டவர் இதை நம்பவே இல்லை. இந்தப் பனி மனிதனைப் பற்றி முதன் முதலாக கர்னல் வாடல் என்னும் ஆங்கிலேயர் அறிந்தார். அவர் 1887ல் சீக்கிம் நாட்டில் பதினாறாயிரம் அடி உயரமுள்ள ஒருமலை ஏறி பனிப்பிரதேசத்தில் நடந்து செல்கையில் அங்கு ஏதோ காலடிகள் பதிந்துள்ளதைக் கண்டார். அவை ஒரு மனிதனின் காலடிகளைப் போலவே இருந்தாலும் மிகப் பெரியனவாக இருந்தன. ஒரு மனிதன் அந்தப் பனிப் பிரதேசத்தில் எவ்வித செருப்பும் அணிந்து கொள்ளாது நடந்து சென்றது அவருக்கு ஆச்சரியமளித்தது. 1906 இல் ஹென்றிஎல்வின் என்பவர் பனி மனிதனின் காலடிகளை மட்டுமல்லாது அது ஓடிக்கொண்டிருப்பதையும் நேர்முகமாகக்கண்டாராம். அதன் உடல்முழுவதும் ரோமம் அடர்ந்து வளர்ந்திருந்ததாம். 1921-ல் எவரஸ்ட்சிகரத்தின்மீது ஏறமுயன்ற லெப்டினன்ட்கர்னல்ஹோவர்ட்ப்யூரி ஒரு மலைமீதிருந்து கீழே பார்க்கையில் ஒரு பள்ளத்தாக்கில் ரோமங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள ஒரு மனிதன் அங்குமிங்கும் செல்வதைக் கண்டாராம். அது மனிதனைப்போல் இரு கால்களால்நடந்துசென்றதாம். அது ஆடு மாடுகளையும் ஆடு மேய்ப்போரையும் கொன்று விடுவதாக அவருடைய ஷெர்ப்பாக்கள் தெரிவித்தனர். 1922ல் சிக்கிமிலுள்ள சில பிரிட்டிஷ் ராணுவப் படையினர் பலபனி மனிதர்கள் ஒன்றாக ஓடுவதைப் பார்த்தனராம். நேபாளநாட்டில், பிரிட்டனைச் சேர்ந்த தாவர விஞ்ஞானியாகிய ரொனட் கோலெக் என்பவர் பதினாறாயிரம் அடி உயரத்தில் பனி மனிதனின் காலடிகளைக் கண்டாராம். இது 1936ல் நிகழ்ந்தது. அடுத்தவருடம் பிராங்க் ஸ்மித் என்பவர் பனி மனிதனின் காலடிகளைக் கண்டாராம்.

(தொடரும்)

அன்புள்ள சிறுவர்களே,

வணக்கம்.

உங்களிற் பலர் அனுப்பிய தீபாவளி வாழ்த்துக்கள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டியுள்ளன. வாழ்த்துக்கள் அனுப்பியவர்களுக்கு நன்றி. பனி மனிதனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? மருமகன் ஒருவர் அம்மனிதனைப்பற்றிஎழுதியுள்ள கட்டுரையை வெளியிட்டிருக்கிறேன். அதனைப் படிக்கவும்.

சின்ன மாமா

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

578. க. மகாதேவா, கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை.
579. க. சபாநாயகம், ஹென்றி பீட்டோ விடுதி, புனித யோவான் கல்லூரி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
580. அ. ஸ்ரீபாலஸ்காந்தா, 2, 'லஷ்மி கார்டின்ஸ்' பொறளை, கொழும்பு-8.
581. பொ. கருணாகரன், 3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி.
582. செ. நாகம்மா, கைதடி, நாவற்குழி.
583. ந. மதுரராணி, 'ராணிவில்லா' மண்டைதீவு.
584. சி. ஞானலிங்கம், குப்பிழான், சுன்னாகம்.
585. ஐ. ஜெயமணிதேவி, 91/12, 5ஆம் ஒழுங்கை, கந்தர்மடம்.
586. க. கிறிஸீரிஞ, ரெத்ஸ்ரயில்ட் தோட்டம் புசல்லாவை.
587. எஸ். ஏனீஸ், அறனயக்கா பஸார், அறனயக்கா.
588. மு. மகேந்திரன், உனுவலை தோட்டம், ஒப்பநாயக்க.
589. எஸ். சிவசுப்பிரமணியம், சிவானந்த வித்யாலயம் மட்டக்களப்பு.
590. க. செல்வநாயகம், சொர்ணவாசம், உக்குவளை.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 14-11-59 க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(7-11-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..........................................................

விலாசம்..............................................


..................................

..................................................
கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

## உண்மைக் கதைகள்: டெலிவிஷனின் தந்தை V



நிறைவாளர்: டு மொன்ற்றின் பணச்சிக்கல் ஒருவாறு தீர்ந்ததும், அவருடைய கவனம் முழுவதும் டெலிவிஷன் கருவிகளை இயக்குவதிலேயே சென்றிருந்தது. மேலும் மேலும், கருவிகளைச் சிறப்பான முறையில் ஆக்குவதற்கு அவர் முயற்சித்தார். அவர் டெலிவிஷன் கருவியின் நிறைவை நாடினார் என்றே சொல்ல வேண்டும். இதன் பயனாக அவர் செய்த முயற்சிகள் டெலிவிஷனின் முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவி புரிந்தன.



இன்றைய டெலிவிஷன்: டு மொன்ற்றின் முயற்சியின் பயனாக, இன்று அமெரிக்காவில் டெலிவிஷன் பல்லாயிரக் கணக்கான மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுவருகிறது. பொழுது போக்குக்கான அம்சங்களுடன், கல்வி சம்பந்தப்பட்ட அறிவுரைகளும், பாடங்களும் டெலிவிஷனின் நிகழ்ச்சிநிரல்களில் இன்று இடம்பெறுகின்றன. இவற்றை எல்லாம் அமெரிக்க மக்கள் பார்த்தும், கேட்டும் மகிழ்கின்றார்கள்.



டு மொன்ற்றின் சேவை: டெலிவிஷன் இன்று இவ்வளவுக்கு முன்னேறியிருப்பது ஏனென்றால், அது டு மொன்ற் ஆற்றிய சேவையினாலேயே எனக் கூறலாம். பரீட்சைக் கூடத்தில் ஓர் உபகரணமாகவிருந்த 'கதோட்டரே' ரியூப்பை, டெலிவிஷன், ரடார், முதலிய பல்வேறு கருவிகளின் வெற்றிக்கும் அடிப்படையாக விளங்கச் செய்தவர் டு மொன்றேயாவர்.

(முற்றும்)

# சபையில் நடைபெற்ற தகிடுதித்தங்கள்

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

**1956ம்** ஆண்டு ஜூன் மாதம் காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா தேச பரிபாலனப் பதவியை ஏற்றபோது, பொதுமக்கள் தலைவர் முன்னணிக்கு வந்துவிட்டாரென்று மகிழ்ந்து, சாதாரண மக்கள் எல்லோரும் புதுயுகம் பிறந்துவிட்டதென்று ஆரவாரித்துப் பிரதிநிதிகள் சபா மண்டபத்தை முற்றுகையிட்டனர். "எமது அரசாங்கம்" என்று இறுமாப்புற்று ஒருவர் அன்றைய தினம் சபாநாயகர் ஆசனத்திலேயே ஏறி உட்கார்ந்தார்!

ஆனால் அதே பிரதமரின் துர்மரணத்தைக் குறித்து சபை அனுதாபம் தெரிவிக்கையில் பொதுமக்களின் பிரதிநிதிகள் எவரும் அங்கு பிரசன்னமாகாதது விந்தையல்லவா?

புதன்கிழமையன்று (28-10-59) சபை கூடியபோது பிரதம மந்திரி திரு. தகநாயக்கா காலஞ் சென்ற பிரதமரின் மரணத்தைக் குறித்து அநுதாபத் தீர்மானம் ஒன்றைப் பிரேரிக்கையில், திரு. பண்டாரநாயக்காவின் சீவிய சரித்திரத்தையும் அவரது பலதிறப்பட்ட ஆற்றல்களையும் எடுத்துரைத்தாரேயன்றி, அவர் கொலையுண்ட சம்பவத்தைப்பற்றியோ, அது சம்பந்தமான விசாரணைகள் பற்றியோ ஒன்றுமே கூறவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள்தான் அந்த விஷயத்தை எடுத்துக் கூறினர்கள்.

### என். எம். கவலை

திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மரணமடைந்தபோதும், அவருடைய மரணக் கிரியைகளின் போதும், சகல ஒழுங்குகளையும் கவனித்து வந்தவர் டக்டர் என். எம். பெரேரா. அவர் அன்று சபையில் பேசும்போது, சில பல முக்கியமான விஷயங்களைஎடுத்துக் காட்டினர். இலங்கையிலுள்ளஎல்லாக் கிராம சங்கங்களும், நகரசபைகளும் அநுதாபம் தெரிவித்தபின், நாட்டின் மூத்த சபையாகிய பாராளுமன்றம் கடைசியாக அநுதாபம் தெரிவிப்பதையிட்டு அவர் கவலைப்பட்டார். "நாம் கடமையில் தவறிவிட்டோம். மிகவும் இழிவான முறையில் நடந்து கொண்டோம். காலஞ் சென்ற அந்த மகானுக்கு அநுதாபம் தெரிவிக்க எமக்கு இரண்டு நாள் கிடைக்கவில்லை. இதை நான் எடுத்துரைக்காவிட்டால் நான் கடமையில் தவறியவன் ஆவேன்" என்று டக்டர் பெரேரா கூறினர்.

ஒரு வாரத்துக்கு முன்புதான் எனக்கெதிரே நின்று கோப்பாய் எம். பி. திரு. வன்னியசிங்கத்தின் மறைவையிட்டு இச் சபையில் அநுதாபம் தெரிவித்தார். அடுத்தவாரம் கூற்றுவன் அவரையும் அழைத்துப் போய்விட்டான்! அந்த துக்கமான தினத்தில், "பண்டா, நீயும் எங்களோடு யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்க வேண்டும்" என்று இதே சபையில் கூறினேன். அதற்கு அவர் "நான் உங்களோடு வர முடியாததற்கு வருந்துகிறேன். நீங்கள் திரு. வன்னியசிங்கத்தின் மரணக் கிரியைகளுக்குப் போனதையிட்டு மகிழ்கிறேன்" என்று சொன்னர்.

டக்டர் என். எம். பெரேரா மேலும் பேசுகையில், "வெறுமனே அநுதாபம் தெரிவித்துவிட்டால் போதாது: திரு. பண்டாரநாயக்கா பாலூட்டி வளர்த்த பாம்புகள் எல்லாவற்றையும் அழித்துத் தொலைக்க வேண்டும்" எனவும் கூறினர்.

### மூன்று விதங்களில்

யாழ்ப்பாணத்து எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது, திரு. பண்டாரநாயக்கா, வரப்போகும் புதுயுகத்தின் அறிகுறியாக மூன்று விதங்களில் தம்மை மாற்றிக் கொண்டார் என்று சொன்னர். ஒன்று ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் முதலிய மேலைத்தேய மொழிகளில் பாண்டித்தியம் அடைந்திருந்தும் சுயபாஷை வீரனக மாறினர்; பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தும் சாதாரண மனிதனின் தயாளனக விளங்கினர். மூன்ருவது, ஒக்ஸ்போட்டில் அசல் ஆங்கில உடை தரித்து வந்தவர் இங்கே பொது மக்களின் உடையை அணிந்தார்.

நியமன அங்கத்தவர் திரு. பெளலியர், கொம்யூனிஸ்ட் தலைவர் டக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, திரு. பண்டாரநாயக்காவின் முன்னள் சக மந்திரியாகிய திரு. பிலிப் குணவர்த்தன, சேர் ரஸீக் பரீட், யு. என். பி. சார்பில் திரு. எம். டி. பண்டா முதலியவர்கள் பேசியபின் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் தமது அநுதாபங்களைத் தெரிவித்தார்.

"ஒருவர் தமது கொள்கைகளுக்காகத் தமது உயிரையே பறிகொடுக்க வேண்டுமானல் எமது நாடு அழிந்தே போய்விடும். சனநாயக அரசியல் விதிப்படி எவரும் தத்தம் அரசியற் கொள்கைக்கேற்ப நடந்து கொள்ளலாம். திரு. பண்டாரநாயக்கா தனிச் சிங்கள கோஷத்தைக் கிளப்பாமலே அரசியல் அதிகார பீடத்துக்கு வந்திருக்கலாம். ஆனல் துரதிர்ஷ்டவசமாக, சிங்களவரையும், தமிழரையும் பிரிக்கும் அந்தக் கொள்கையை அவர் பின்பற்ற வேண்டிவந்துவிட்டது" என்று அவர் சொன்னர்.

### துப்பாக்கி சகிதம்

செவ்வாய்க்கிழமை சபை கூடியபோது, பல தகிடுதித்தங்கள் நடைபெற்றன. சில மந்திரிமார் துப்பாக்கிகள் வைத்திருக்கிருர்கள், அவர்களைப் பொலீசார் ஏன் பார்வையிடவில்லையென்று ஓர் அங்கத்தவர் சத்தமிட்டார். மந்திரிகளில் எவரிடமாவது துப்பாகிகள் இருந்தால் நான் அவர்களைப் பரிசோதித்துப் பார்ப்பேன் என்று சபாநாயகர் கூறினர்.

இந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எதிர்க்கட்சியிலுள்ள எங்களைப் பாதுகாப்பதற்கா அல்லது கொலையாளிகளாகிய இவர்களைப் பாதுகாப்பதற்கா என்று அரசாங்கக் கட்சியைச் சுட்டிக் காட்டினர் மாத்தளைப் பிரதிநிதி.

"கொலையாளிகள் யார்" என்ருர் ஒரு அங்கத்தவர். "நிதி மந்திரி" என்று கேட்டது இன்னெரு குரல். திரு. ஸ்டான்லி சொய்சா சடாரென்று இதை ஆட்சேபித்தார். அதற்கிடையில் சபையில் பெரும் குழப்ப மேற்பட்டு அந்தப் பேச்சு அப்படியே நின்று விட்டது.


யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.


## "இறுதி யாத்திரை"

**கா**லஞ் சென்ற இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களைத் தொகுத்து, அரசாங்க திரைப்படப்பகுதி ஒரு சலனப் படத்தைத் தயாரித்துள்ளது. இப்படம் இன்று எல்லா தியேட்டர்களிலும் தமிழ் வர்ணனையுடன் காண்பிக்கப்படுகின்றது.

திரு. பண்டாரநாயக்கா அவர்கள் ஐக்கிய நாட்டுப் பேரவையில் சொற்பொழிவாற்றி விட்டு வெற்றி வாகையுடன் திரும்பியது, அத்தனகல்லையில் அவர் மன்னன் ஸ்ரீ சங்கபோவின் உருவச்சிலையைத் திறந்து வைத்தது, அவர் மரணமடைந்த தினத்தன்று அடக்க முடியாத சோகத்தினல் விம்மி விம்மி அழுத பொதுமக்கள், மந்திரிகள், எம். பீ. க்கள், அவருடைய இறுதி யாத்திரை, கொழும்பிலிருந்து ஹொரகொல்லைக்குப் போகும் 24 மைல் தூரத்தில் பெருந்திரளாக நின்று அஞ்சலி செய்த பொது மக்கள், ஹொரகொல்லையில் நடந்த இறுதிச் சடங்குகள் — இவை யாவற்றையும் இந்தப் படம் சித்தரிக்கிறது.

மும்மொழி வர்ணனைகளுடன் இப் படம் இலங்கை முழுவதிலும் காட்டப்படும். தமிழில் வர்ணனை செய்தவர் திரு. வி. என். பாலசுப்பிரமணியம். இப் படத்தின் மூலம் வசூலிக்கப்படும் பணம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நிதியில் சேர்க்கப்படும்.

திரு. எல். ரைட்லண்ட் ஆங்கிலத்தில் எழுதிய 'Paths of Science' என்ற நூலிலுள்ள ஒரு கட்டுரையின் தமிழாக்கம் இது.

# சாவு பின்வாங்கியது

— வீ. இராமகிருஷ்ணன் —

இராணுவ சார்ஜென்ட் செரப்பனுவு முறிந்த வலது தொடைக் காயத்துடன் யுத்தகள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டான். தொடையின் தமனிகளும். நாளங்களும், நரம்புகளும் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டிருந்தன. தொடை எலும்பும் பாதிக்கப்பட்டிருந்தது.

சோவியத் இராணுவ வைத்திய பகுதி ஒழுங்குடன் இயங்கும் ஒரு இயந்திரம். காயமடைந்த இராணுவ வீரன் சில நிமிடங்களுள் யுத்தகளத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டான். இரண்டு மணி நேரத்துள் அவன் யுத்தகள ஆஸ்பத்திரியை அடைந்தான்.

அங்கு அவன் உயிர்வாழ்வதற்குத் தேவையான உதவிகளெல்லாம் உடனே செய்யப்பட்டன. அவனது உடலைச் சுற்றிலும் சுடுநீர்ப் போத்தல்கள் வைக்கப்பட்டன. அறுந்த இரத்தக் குழாய்கள் தைக்கப்பட்டன. உடலுள் புதிய இரத்தம் செலுத்தப்பட்டது. ஆனல் செரப்பனுவு பயங்கரமான அதிர்ச்சியடைந்திருந்தான். வெளிறிய முகத்துடன் சத்திர சிகிச்சை செய்யப்படும் மேசை மீது கிடந்தான். கண்கள் ஒளியற்றிருந்தன. நாடியும் சுவாசமும் கிட்டத்தட்ட நீண்டிருந்தன. ஊசிமூலம் கற்பூர எண்ணெய் உடலுள் செலுத்தப்பட்டது. இதன்பின் காபீனும் (Caffine) அட்றினலினும் (Adrenaline) உட் செலுத்தப்பட்டன. கடைசியாக உயிர் வாழ்வதற்கு அவசியமான உப்புத்திரவமும்உட் செலுத்தப்பட்டது. எல்லாவித உதவிக்குப் பின்னரும் செரப்பனுவின் இருதயத் துடிப்பு நின்றுவிட்டது. அவன் இறந்தான்.

யுத்தகள வைத்தியசாலை அதிபர் அவனது பெயர்ச் சீட்டில் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டிருந்தார்:

"செரப்பனுவு 1944ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8ஆம் திகதி பிற்பகல் ஏழு மணி நாற்பத்தொரு நிமிடத்தில் அதிர்ச்சியினலும் இரத்தக் கசிவினலும் இறந்தான்" இது இவ்விராணுவ வீரனின் வாழ்க்கைக் கதையின் கடைசிக் குறிப்பாக இருந்திருக்க வேண்டும்.

ஆனல், இவ்வேளையில் வெள்ளை உடை அணிந்த சில வைத்தியர்கள் இவன் கிடந்த அறையில் நுழைந்தனர். உள்ளே சென்றவர்கள் பேராசிரியர் நெகோவிஸ்கியும் அவரது உதவியாளர்களான சிமிறென்கயா விட்ரிவினேவியா கொஸ்லாவு ஆகியவர்களே.

பேராசிரியர் நெகோ விஸ்கி புது முறைகளின் மூலம் சாவை எதிர்த்துப் போராட யுத்தகள வைத்தியசாலைகளைப் பார்வையிட்டுக்கொண்டு எதேச்சையாக அந்த இராணுவ வீரன் இருந்த வைத்தியசாலையைச் சென்றடைந்தான்.

உடனே அவர் செரப்பனுவை சோதிக்கத் தொடங்கினர். அவன் இறந்து ஒரு நிமிடமாயிற்று. அடுத்த ஒரு நிமிடத்துள் பேராசிரியது உதவியாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தொடங்கினர். சத்தமற்ற இச் சூழ்நிலையில் பேராசிரியரின் குரல் மட்டும் கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தது.

இராணுவ வீரன் இறந்த நேரம் ஏழுமணி நாற்பத்தொரு நிமிடம் என்று குறிக்கப்பட்டது நினைவிருக்கின்றது தானே? ஏழு மணி 45 நிமிடம் 30 விநாடியில் அடுத்த குறிப்பு எழுதப்பட்டது. "முதல் இருதயத் துடிப்பு"

7 மணி 48 நிமிடத்தில் மற்றும் ஒரு குறிப்பு- "கழுத்துத் தசைகள் சுருங்குகின்றன. இயற்கையாகச்சுவாசித்தல் ஆரம்பமாகிவிட்டது." மற்றும் அனேக குறிப்புகள் தொடர்ந்து எழுதப்பட்டன.

7—56— "மார்புக் கூட்டின் சுவாச அசைவுகள்"

8—00 "பெருமூச்சு. மார்பையும் வயிற்றையும் பிரிக்கும் தசையின் அசைவு"

8—07 "கண்ணின் கருமணியின் அசைவு"

8—45 "மயக்கம் தெளிகின்றது"

11—00 "நிலைமை அபாயகரமாயிருக்கின்றது. நித்திரை செய்கின்ருன். திடீர் என்று விழிப்படைகிருன். கேள்விகளுக்குப் பதில் கூறுகின்ருன். கண் தெரியவில்லை என்று கூறுகின்ருன். நாடித்துடிப்பு வேகமாக இருக்கின்றது.—நிமிடத்திற்கு 114. சுவாசித்தல் இயற்கையாக இருக்கின்றது."

24 மணி நேரத்தில் அடுத்த குறிப்பு எழுதப்பட்டது. "பார்வை நன்கு திரும்பிவிட்டது. நகர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லலாம்"

இக்குறிப்புக்களுக்குப் பின் எழுத வேண்டியவை ஒன்றுமில்லை. பேராசிரியர் நெகோவிஸ்கி, செரப்பனுவின் படுக்கையில் இருந்து சாவை விரட்டிவிட்டார்.


இங்கே வெட்டவும்

ஈழநாடு
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து (10/-) இதனுடன் மனிஓடர் / செக் மூலம் அனுப்பி வைக்கின்றேன்

..................................
கையொப்பம்.

பெயர்: ..................................

விலாசம்: ..................................

இங்கே வெட்டவும்

அருள்வழி

# தீண்டாமை, உயிர்ப் பலியிடுதல், களியாட்டத் திருவிழாக்கள் சைவத்தை மாசுபடுத்துகின்றன

## இவற்றை அகற்றுவது வாலிபர் கடன்

“சைவசமயம் பழம்பெருஞ் சமயம்; தமிழர் சமயம். ஆரியர்கள் இந்தியாவிற்குள் புகுவதற்கு முன் ஹரப்பா—மொகஞ்சதாரோ நாகரிக காலத்திலேயே கி. மு. 3500 ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்து விளங்கிய சமயம். இதனை இந்து சமயத்துள் அடக்கி வழங்குதல் முறையான செயலன்று” இவ்வாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற இந்து வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார். பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: இந்தியாவின் வைதிக சமயங்களை எல்லாம் இந்து சமயம் என்று வழங்கத் தொடங்கியவர்கள் மேனாட்டவரும் ஆங்கிலப் புலமைபெற்ற கீழ் நாட்டவருமேயாவர். நாவலர் காலம்வரையும் சைவம் தனித்து வாழ்ந்தது. சைவபரிபாலன சபை, சைவப்பிரகாச வித்தியாசாலை முதலியன காண்க. ஆங்கிலம் கற்றவர்களின் தொடர்பாலேதான் இந்து சாதனம், இந்துக் கல்லூரி எனும் பெயர்கள் இடம் பெற்றன. இந்து சமயத்துள்ளே சைவத்தை அடக்கியதால் தமிழின் சிறப்பும், தமிழரின் பண்பும், சைவத்தின் பழமையும் உயர்வும் மங்கிவிட்டன. கத்தோலிக்க சமயம் புறட்டத்தர்ந்த சமயம் என்று வழங்குதல் போல, இந்துசமயம் என்றும் சைவசமயம் என்றும் வழங்குதல் நன்று.

### மூவகை நிலையங்கள்

சைவ சமயத்தை வளர்ப்பதற்கு இலங்கையில் மூன்று வகையான நிலையங்கள் இன்று உள. கோயில்கள், கல்விநிலையங்கள், சைவசமய சங்கங்கள் என்பனவே, அவையாகும். இவை ஒன்றுபட்டுச் சமயத்தொண்டு செய்யவில்லை. இவற்றின் சமயப்பணிகள் இணைப்படுத்தப்பட்டால் சைவசமயம் தான் இழந்த பழம் பெருமையைப் பெற்றிருக்கும். சைவத்தின் உயிர்நிலைக்கு மாறான அநாகரிகச் செயல்கள் சைவர்களிடையே எப்பொழுதோ ஒழிக்கப்பட்டிருக்கும். சைவத்தின் பெயரால் சாதிவேற்றுமையைப் போற்றித் தீண்டாமை பாராட்டுதல், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி இடுதல், கையிலுள்ளபணத்துக்குத் தகத் துண்டு வாங்கி அருச்சனை செய்வித்தல், வானவிளையாட்டு, சதுர்க்கச்சேரி போன்ற களியாட்டங்களைத் திருவிழாக்களுடன் நடாத்தல் முதலியன சைவத்தை மாசுபடுத்துகின்றன. இவற்றை நீக்குதற்கு இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தானும் நம் சைவர்களும் சைவநிலையங்களும் முற்படவில்லை. முற்படும் சிலருக்கும் போதிய ஆதரவு இல்லை. வயது வந்தவர்களிலும் வாலிபர்களே முற்போக்கு உடையவர்கள், உணர்ச்சியுடன் முயலத் தக்கவர்கள். ஆகவே இந்து வாலிபர் சங்கத்தினர் ஏனைய வாலிபர் சங்கங்களுடன் சேர்ந்து இந்தக் குறைகளை நீக்கிச் சைவநீதியை உலகமெலாம் விளங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழர் கண்ட நெறி சிவநெறி. தமிழர் பேசும் மொழி தமிழ் மொழி. எனவே சிவநெறிக்கும் தமிழோடு உள்ள தொடர்பு பண்டு தொட்டு உண்டானது. பிறமொழிகளோடு உள்ள தொடர்பு இடையில் உண்டானது. இடையில் உண்டான தொடர்புகளாற் பழந் தொடர்பு பாதிக்கப்பட்ட காலங்களில் தமிழ்ப் பெருமக்கள் பலர் தோன்றிப் பழந் தொடர்பை நிலைநாட்டியுளர். தேவார திருவாசகங்களைப் பாடியருளிய நாயன்மார்களும் அண்மைக் காலத்தில் வாழ்ந்த நாவலரும் சைவத்தையும் தமிழையும் தளராமற் பிணைத்து வைத்தார்கள். இந்த நூற்றாண்டிலே தமிழரின் தனிச் சிறப்பையும் ஒப்பிலாப் பழமையையும் தமிழ் மக்கள் நன்கு அறியத் தொடங்கிவிட்டார்கள். இவற்றை வேண்டுமென்றே சிலர் மூடி மறைத்து வைத்தார்கள் என்பதையும் உணரத் தொடங்கி விட்டார்கள். தமிழ் நாடும், ஈழமும் அரசியற் சுதந்திரத்தையும் பெற்று விட்டன. எனவே உணர்ச்சியுடைய, உண்மை காணும் ஆற்றலுடைய தமிழறிஞர்கள் பலர் இன்று சைவ சமய வழிபாடுகள் யாவும் தமிழிலேதான் நடைபெறல் வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியுளர். இந்தத் தலைமுறையிலேயே இன்னும் இருபதாண்டுகளுக்குள்ளே தமிழ் சைவசமயத் துறையிலேதான் இழந்த முதன்மையைப் பெற்றுவிடும் என்பதிற் சந்தேகமில்லை. பகுத்தறிவைச் சிதைத்து மானத்தைக் கெடுத்து இன்றும் தமிழரைப் பிறமொழிகளுக்கு அடிமைப் படுத்தும் போலித் தமிழருக்கு இனித் தமிழ் நாட்டில் இடமில்லை. மக்களின் விழிப்பையும், இயற்கை நியதியையும் பண்டை வரலாற்றையும் உணர்ந்து தமிழைப் போற்ற வெட்கப்படாமல் வீரத்துடன் வருமாறு இவர்களை இளைஞர்கள் அழைக்க வேண்டும்.

சாதி, குலம், பிறப்பு, செல்வம், வறுமை, பட்டம், பதவி முதலிய வேறுபாடுகளை எல்லாம் தகர்த்துச் சமத்துவத்தை நிலைநாட்டுவது சைவம். அன்பு, அருள், அறம் இந்த மூன்றும் தமிழன் வாழ்ந்து கண்ட உயர் பண்புகள். அன்பிற் றொடங்கி அருளில் முடியும் வாழ்வு நெறிதான் தமிழன் கண்ட அறநெறி. இதுதான் சைவநெறி; சிவநெறி; தமிழ் நெறி; அன்பனைத்தினைக் களாவுநெறி. அன்புஞ் சிவமும் ஒன்று. தமிழும் சிவமும் ஒன்று. எனவே அன்புக்கும் அருளுக்கும் மாறுபட்டனவற்றையெல்லாம் சைவம் என்று போற்றும் மடமை ஒழிதல் வேண்டும்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

மாதர் பகுதி

# பெண்ணினத்தின் பெருமை
# மலாயா மகளிர் நிலைமை

— செல்வி அன்னலட்சுமி மயில்வாகனம் —
(மெந்தக்காப்)

உலக நாகரிகத்தின் ஆணி வேரே, முதலில் முளைத்தது தமிழ் நாட்டிலேதான். கடல் கொள்ளைகொண்ட லெமுரியா குமரிக் கண்டமே நாகரிகத்துக்குப் பிறப்பிடமாக விளங்கியது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

மற்றவர்கள் காடுகளில் மிருகங்களோடு மிருகங்களாய் திரிந்தலைந்த போது, வீடு கட்டி வாழ்ந்திருக்கிறான் தமிழன். ஓய்வாக இருக்கும் போது பழைய நூல்களைப் புரட்டிப் பார்த்தால் இதன் உண்மை புலப்படும். “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்ற பொன்மொழிக்கு இலக்காகவே தமிழன் வாழ்ந்தான்.

கடல் விழுங்கிய லெமுரியாவில் உதயமான தமிழ் நாகரிகம், சிறுகச் சிறுக சிந்துவெளி, யூப்பிரட்டிஸ், கங்கை, முதலிய இடங்களில் பரவி, மேலும் தொடர்ந்து அரேபியா, எகிப்து, ரோம், கிரேக்கம், இத்தாலி முதலிய உலக நாடுகளிலும் நிலை பெற்று விட்டது. எனவே, ஆதிகாலம் முதற்கொண்டு நற் பண்பாடுகளில் தலை சிறந்து விளங்கினேம் நாம் என்பது புலனாகிறது.

தமிழன் என்று குறிப்பிடும் போது, தமிழினத்தில் ஆடவர் திலகங்களை மட்டும் குறிப்பிடுவதாகாது. தமிழ் மகளிரும் அப்படியேதான். நாகரிகத்தில் மாத்திரம் அல்ல, அறிவுப் பாதையிலும் ஆடவர்களோடு சரிநிகர் சமமாகவே விளங்கியிருக்கின்றனர், ஆதிகால மகளிரான ஔவையார், வெள்ளி வீதியார், காக்கைப் பாடினியார், நச்சொள்ளையார், பாரி மகளிர் போன்றவர்கள். அது மாத்திரமல்ல—ஓரிரு சமயங்களில் ஆடவர்களை மிஞ்சிய அறிவுக் களஞ்சியங்களாக விளங்கியிருக்கின்றனர் மங்கையர்.

மாநிலம் புகழும் செந்நாப் புலவர் வள்ளுவரைவிட, புத்தி நுட்பம் மிக்கவர் ஔவைப் பாட்டி எனலாம். எப்படி? தெய்வப் புலவர் வள்ளுவரோ புருஷார்த்தங்கள் நான்கினுள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் விளக்க 1330 குறள்கள் பாடினர். பாட்டியாரோ அவற்றுடன் வீட்டையும் இணைத்து

“ஈதலறந் தீவினைவிட்டல்
பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்
- தாதரவு
பட்டதே இன்பம் பரனை
நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு”

என்று ஒரு வெண்பா மூலம் தெள்ளத் தெளியத் தீட்டி விட்டார்.

## வீரம்

அறிவு ஒரு புறமிருக்கட்டும். நம்மினம்-அதாவது பெண்ணினத்தின் திறமையைப் புலப்படுத்த இன்னுமொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். வீரம் என்றவுடனேயே அது ஆடவர்களுக்கே உரித்தான உன்னதமான பண்பு என்பது எல்லாருடைய ஏகோபித்த வாதம். அத்தகைய ஆடவருக்கே சொந்தமான வீரப்பண்பிலும் கூட விட்டுக் கொடுக்கவில்லைப்பண்டைக்கால மகளிர். சிலப்பதிகாரம், புறநானூறு, கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்கள் இதற்குச் சான்று பகரும்.

பெண்களின் வாழ்க்கை இப்படியே என்றும் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறதா என்ருல், இல்லை என்றே கூறலாம். இடைக்காலத்தில் ஒரு புயல் ஏற்பட்டு, படுகுழியில் வீழ்த்தி விட்டது பெண்ணின் பெருமையை. அதனுல் பறந்தது பெண்ணுரிமை. பெண்களை அடிமைகளாக—உயிரற்ற யந்திரங்களாக எண்ணி வீட்டுக்குள் பூட்டி வைத்தது அந்த இடைக்காலம். ஆனுல், அது நிலைபெற்று நிற்கவில்லை.

இருபதாம் நூற்ருண்டில் புரட்சிக் கவிஞர் பாரதி தோன்றினர். நாட்டின் நிலைமை, மக்களின் செய்கை அவரது உள்ளத்தை உருக்குலைத்தன. உணர்ச்சி வசப்பட்டு கவிதைமாரி பொழியலானர். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென முழக்கினர்.

இன்று எந்தக் கோணத்தில் திரும்பினுலும், ஆண் பெண் இருபாலாரும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து வருவதைக் காணமுடிகிறது.

பாரதப் பிரதமர் நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் அவர்களைப் பார்ப்போம். படிப்பில் மட்டுமன்றி பதவியிலும் முன்னின்று, தம் சொந்த தேசத்திலுமல்லாது அகில உலகமே பாராட்டும்படி வாழ்ந்து வருகிருர். சர்வ தேசத் துறைகளிற் பங்கெடுத்துக் கொண்டதற்காக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இவருக்கு இது நாள்வரை ஒன்பது கௌரவ ‘டாக்டர்’ பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவரைப் போன்று இன்னும் எத்தனையோ பெண்மணிகளைப் பாரதத்திற் பார்க்கிறேம்.

## மலாயாவில்

மாதர் முன்னேற்றம் பற்றி பொதுவான அபிப்பிராயம் ஒருபுறமிருக்கட்டும். இனி, எங்களது மலாயா மகளிர் நிலைமை பற்றியும் சிறிது கவனிப்போம். “மலாயா” என்று சொல்லும் போதே, அது, தென்கிழக்காசியாவில் சீரும், சிறப்பும் பெற்ற ஒரு நாடு என்ற எண்ணமே எல்லோரினதும் இதயங்களிலும் உதயமாகும்.

பற்பல வளங்களும், செழித்துக் கொழிக்கும் தங்கத் திருநாடு மலாயா. அடிமை விலங்கறுத்து, மூன்ருவது ஆண்டின் பாதையிலே வீர நடை போடுகிற நவமலாயாவிலே, மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் சீராகவே நடைபெற்று வருகிறது.

தமிழ் மகளிரின் விஷயமும் அவ்வாறேதான். வீட்டினுள்ளே பெண்களைப் பூட்டி வைத்த காலம் மலையேறிவிட்டது. எல்லாப் பெண்களும் கல்வி பயில்வதோடு நின்று விடாமல் மேற்படிப்புக்கும் சென்று கொண்டிருக்கிருர்கள். உள்நாட்டில் படிப்பது மட்டுமின்றி வெளிநாடுகளான லண்டன், ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் சென்றும் பயின்று திரும்புகிருர்கள். இன்றைய மலாயாப் பெண்மணிகள் காரியாலயங்களில் உத்தியோகம் பார்ப்பதோடு மட்டுமன்றி ஆசிரியைகளாகவும், டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் பதவிகள் வகித்து வருகின்றனர்.

இசைக் கலையிலும் இவர்கள் ஊக்கம் காட்டிப் புகழ் ஈட்டி வருகின்றனர். சில பெண்கள் மலாயாவில் வசித்துக்கொண்டிருந்த போதிலும் நம் தாய் மொழியை மறந்துவிடவில்லை. மலாயாவில் வெளியாகும் தினசரி, வார ஏடுகளுக்கு, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கட்டுரைகளும் கதைகளும் எழுதி வருகின்றனர்.

## அரசியலில்

மலாயாவிலே மாதர்கள் பல துறைகளில் முன்னேறி வருகிருர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைய இந்தியாவில் பெண்கள் மந்திரிகள் மாதிரி எதிர்காலம் மலாய் நாட்டிலும் தமிழ்ப் பெண் மந்திரிகள் தோன்றினுல் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்கு அடிப்படையாக அரசியல் துறையிலும் மலாயா மாதர்கள் படிப்படியாகப் பங்கு பெறுகிருர்கள். இன்னும் மாதர் முன்னேற்றம் கருதி, ஆங்காங்கு மாதர் கழகங்களும் தோன்றி வருகின்றன.

எனினும் ஒரு குறை உண்டு. சில மங்கையர், நாகரிகம் என்ற பெயரில் நம் தமிழ்ப் பண்பாடுகளை மறந்து, மேலை நாட்டு நாகரிகங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகிருர்கள். இது தவறு. நாம் என்னதான் படித்துப் படித்துப் பட்டங்கள் பெற்ருலும், எந்த நிலையிலும் நமது பண்பாடுகளைப் புறக்கணிக்கக்கூடாது. ஆங்கிலம் கற்பது அறிவு விருத்திக்கும், உத்தியோகப் பெருக்கத்துக்குமே. வீட்டிலும் நண்பர்கள், பெற்ருேர், உற்ருேர்களுடன் உரையாடும் போது நம் தேன்மொழி தமிழிலே உரையாடும் பழக்கத்தைக் கைநழுவ விடக்கூடாது.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்” என்ருர் அமரகவி பாரதியார். அத்தகைய தித்திக்கும் தமிழ் மொழியைத் தமிழ் மக்களே ஒதுக்கி விடுவதா? கூடவே கூடாது. உலகம் சிறப்பது பெண்ணுலே, தமிழ்க் குலம் சிறப்பதும் தமிழ் மகளிராலேதான் என்பதை மறந்து விடலாகாது.

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதியில்லாக் குறை

அச்சுவேலியில் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்று நிறுவப்பட்டது. இன்றுவரை அங்கு நோயாளருக்கு வேண்டிய முக்கிய வசதிகள் செய்யப்படவில்லை. பிரசவ விடுதியோ பயிற்சிபெற்ற தாதியோ அங்கு இல்லை. இவற்றையெல்லாம் பத்தைமேனி மாதர் சங்கம் அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளது. இதுசம்பந்தமாகச் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு திருமதி பி. அமிர்தலிங்கம் தலைமை தாங்கினர்.

## டிசம்பரில் பெருந் தலைவர்கள் மாநாடு

[10ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜெனரல் டீ கோலின் திட்ட அடிப்படையில் இரு தரப்பினரும் ஒரு உடன் பாட்டுக்கு வருவார்களா?

### லாவொஸின் மன்னர் காலமானர்

இந்துச்சீன நாடாகிய லாவொஸின் அரசராக சுமார் 55 வருடங்கள் கடமைபுரிந்த 74 வயது நிரம்பிய மாட்சிமை தங்கிய சிசாவாங் வோங் சென்ற மாதம் 30ஆந் திகதி காலமானர். சென்ற ஓகஸ்ட் மாதம் தொடக்கம் முடிக்குரிய இளவரசர் சவங்கிரத்தான நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடாத்திவருகிருர்.

### படைக் குறைப்பு

82 உறுப்பு நாடுகளும் ஆதரிக்கும் பூரண படைக்குறைப்புத் திட்டம் ஐக்கியநாடுகள் தாபன பொதுச்சபையில் விவாதிக்கப்பட விருக்கிறது. உடனடியாக பூரண படைக்குறைப்புக்கு ஏனைய நாடுகள் இணங்காவிட்டால் படிப்படியாக இதைச் செய்வதற்கு சோவியத் ருஷியாவும் ஒத்துழைக்கும் என ருஷியப் பிரதமர் குருஷேவ் கூறியிருக்கிருர்.

வானத்திலும் கடலின் கீழும் அணுக்குண்டுப் பரீட்சைகள் நடாத்துவதை நிறுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் உடன்பட்டுள்ளன.

### எஃகுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

சென்ற 16 வார காலமாக நடை பெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் எஃகுத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் இன்னும் நீடிக்கிறது. 5 லட்சம் தொழிலாளர் இதில் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை அமெரிக்க உயர் நீதிமன்றம் தடைசெய்துள்ளது.


முருகன் ஒடியன் ராணி ஜோதி லிபர்ட்டி
(ஜிந்துப்பிட்டி) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (திருக்கோணமலை) (பதுளை)



★ ஜெமினி கணேசன்
★ ராஜசுலோசன
★ சாவித்திரி
★ வி. ஆர். ராஜகோபால்
★ எம். என். நம்பியார்
★ எம். எஸ். எஸ். பாக்கியம்

முதலியோர் நடித்த

பாக்கிய தேவதை

(தமிழ்)

குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணம் செய்கிருள் கடமை உணர்ச்சியுள்ள ஒரு பெண்!

தன் கணவனின் வீண் சந்தேகத்தைப் போக்கடித்துத் தனது நேர்மையை நிலைநாட்டப் பல கஷ்டங்களையும் எதிர்த்துப் போராடுகிருள் இன்னுமொரு பெண்!

இவர்கள் இருவரையும் “பாக்கிய தேவதை”யில் நீங்கள் சந்திக்கலாம்!

சினிமா உலகம்

# கல்யாணப் பரிசு

## ரசிகர் கருத்து

### ( i )

கல்யாணப் பரிசைப்போலச் சிறந்த படம் இவ்வாண்டில் வெளிவரவில்லை.

பாஸ்கர் ஓர் கல்லூரி மாணவன். குறும்புத்தனம் மிக்கவன். தன்னுடன் படிக்கும் வசந்தியென்ற மாணவியைக் காதலித்துக் கடிதமூலம் தூதனுப்புகிறான். கடிதம் கல்லூரிப் பிரின்ஸிப்பலிடம் சிக்குகிறது. அவனுக்குக் கல்லூரியிலிருந்து விடுதலை கிடைக்கிறது. இதனால் வேலையும், வசந்தியின் அன்பும், அவள் வீட்டில் இடமும் கிடைக்கின்றன.

தன் அக்கா தனது காதலனைக் காதலிப்பதை அறிந்த வசந்தி தன் அக்காவை மணக்கும்படி பாஸ்கரை வேண்டுகிறாள். இதயத்தை அழுத்திப் பிடிக்கிறான் பாஸ்கர். அவளை மறக்கமுடியாமல் தவித்துத் துடிக்கிறான். ஆனால் முதலில் கீதாவை மணக்கிறான்.

இதில் பாஸ்கராக வரும் ஜெமினி கணேசனும், வசந்தியாக வரும் சரோஜாதேவியும் உணர்ச்சியுடன் நடிக்கிறார்கள். அவர்கள் நடிப்பு எம் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துவிடுகிறது. தனக்கு வாழ்வளித்தவள் என்பதை உணராத கீதா வசந்தி மீதுபழி சுமத்துகிறாள். இதனால் அவள் வீட்டைவிட்டு வெளியேற நேர்ந்ததும், பாஸ்கர் என்ற எரிமலை வெடிக்கிறது. (இக்கட்டத்தில் ஜெமினியின் நடிப்பு அபாரம்) அதன் கொடுமை தாங்கமுடியாமல் தவிக்கிறாள் கீதா. பாஸ்கரின் கோபம் அழுகையாக மாறுகிறது. வசந்திக்காக அவன் உள்ளம் உருகுகிறது. கீதா மறைந்துவிடுகிறாள். கடைசியில் பாஸ்கர் குழந்தையுடன் வசந்தி வீட்டிற்கு வருகிறான். ஆனால், காரியம் மிஞ்சிவிடுகிறது. வேதனையோடு கால்வழி போகிறான்.

நம்மால் இந்த இடத்தில் வேதனை தாங்கமுடியவில்லை. நம்மோடு வெகு நாட்கள் பழகிக் கூட இருந்தவர் பிரிவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

சரோஜா தேவியும் நன்றாக நடித்திருக்கிறார். எதிர்காலத்தில், தான் ஓர் சிறந்த நடிகையாகத் திகழப்போவதை இதன் மூலம் காட்டிவிட்டார். ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவள்தான் பெண். அந்தப் பெண்ணினத்தில் பிறந்துவிட்ட வசந்தி பெண்மைக்கே உயர்வு தந்தாள். மற்றும் விஜயகுமாரி, தங்கவேலு தங்கள் பாகத்தைப் பிழையில்லாமல் நடித்திருக்கிறார்கள். ஏ. நாகேஸ்வரராவுக்குப் போதிய சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களும், ஏ. எம். ராஜாவின் இசை அமைப்பும் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றன. உதாரணமாக (துள்ளாத மனமும், உன்னைக் கண்டு நான் வாட, காதலிலே தோல்வி) இவை அனைத்தும் சிறந்து விளங்குகின்றன.

இளைஞர் ஸ்ரீதரின் டைரக்ஷன் இளமைக்கு மாபெரும் வெற்றி.

—கணேசதாசன்

### (ii)

**கல்யாணப்பரிசு**, தமிழ் சினிமாவுலகில், கதையின் முடிவைப்பொறுத்த அளவில் ஒரு புதுமையை உண்டாக்கியுள்ளது. அத்துடன், படரசிகர்களின் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியையும் தூண்டியுள்ளது.

ஸ்ரீதர் கதை, வசனம், டைரக்ஷன் முத்துறைகளிலும் வெற்றிஈட்டிவிட்டாரென்றே சொல்லவேண்டும். அவரது கருத்துச் செறிந்த வசனம் 'கட, புடா' அடுக்குமொழிக்கு இலக்காகாமல், கதைக்குச் சுவையையும், கருத்துக்கு நிறைவையும் அளித்துள்ளது.

காதலனாகத் தோன்றும் ஜெமினி கணேசன் காதலில் தோல்வியடைந்த போதிலும், நடிப்பில் வெற்றியடைந்துவிட்டார்.

கல்யாணப்பரிசுக் கதை, சாதாரணமாக எந்தக் குடும்பத்திலும் ஏற்படக்கூடிய சம்பவங்களைக்கொண்டு விளங்குவதோடு, தொடர்ச்சியில் சுவை குன்றாதிருப்பதும் ஆசிரியரின் திறமையை விளக்குவதாகும்.

ஜெமினி கணேசன்—சரோஜா தேவி ஜோடியின் நடிப்பு உணர்ச்சி மிக்கது. உண்மையிலேயே உள்ளத்தை உருக்கிவிடுகிறது.

நாகேஸ்வரராவின் பாத்திரம் குணம் நிறைந்தபாத்திரம். மணக்கோலத்தில் நின்றபடியே, மனைவியைப் பார்த்து 'கூப்பிடட்டுமா?' என்று கேட்கும்பொழுது அவரது பாத்திரத்தின் சிறப்பை எம்மால் நன்கு உணரமுடிகிறது.

சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; பலரைப் பலகாலம் ஏமாற்றமுடியாது என்ற உண்மையைத் தங்கவேலு நகைச் சுவையுடன் விளக்கிவிட்டார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் பட்டுப் போல் பளபளக்கின்றன.

சுருங்கக்கூறின், 80 புள்ளிகள் கொடுக்கலாம் கல்யாணப் பரிசுக்கு.

ச. இராசையா
யாழ்ப்பாணம்

### (iii)

**கல்யாணப்பரிசு** படத்தில் எனக்குப் பிடித்த சில சம்பவங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தான் காதலிக்கும் பெண் ஏற்கனவே ஒருவனைக் காதலித்திருக்கிறாள் என்பதையும், அவள் மனத்தில் சஞ்சலத்தை உண்டுபண்ணிவிட்டதையும் அறிந்து மனேஜர் ரகு தன் பதவியிலிருந்து ராஜினமா செய்யும் கட்டம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. 'காதல், காதல்' என்று கூச்சலிடும் பல இளைஞருக்கு இது ஒரு படிப்பினையாகும்.

இரண்டாவதாக, தன்மீது தனது அக்கா சந்தேகம் கொள்கிறாள் என்பதையும், அதன் பயனாகக் குடும்பத்தில் சச்சரவு ஏற்படுவதையும்உணர்ந்து, வசந்தி வீட்டைவிட்டு வெளியேறியதும் நல்லவொரு சம்பவமே. இதன்மூலம் ஒரு பெண்ணின் உத்தம குணத்தை நாம் அறியமுடிகிறது.

குழந்தையை வசந்தியிடம் கல்யாணப்பரிசாக ஒப்புவித்துவிட்டு வெறுமனே, வெறுங்கையுடன் பாஸ்கர் திரும்பிச் செல்லும்போது 'காதலிலே தோல்வியுற்றான் காளை யொருவன்' என்ற பாட்டுப் பாடப்படுகிறது. அந்த நேரத்தில் எமது உள்ளம் சோகத்தினால் விம்மி வேதனையடைகிறது.

படத்தில் ஒரு சில காட்சிகள் தான் எனக்குப் பிடிக்காதவை என்று கூறலாம். 'பிடிக்காதவை' என்று சொல்வதிலும் 'வேறுவிதமாக அமைந்திருக்கலாம்' என்று கூறுவதே பொருந்தும்.

—பூ. செல்லத்துரை
தெல்லிப்பழை.


# பாக்கிய தேவதை

## பட விமர்சனம்

ஒரு குடும்பத்தில் இரு சகோதரிகள். மூத்தவள் பெயர் லலிதா. இளையவள் பெயர் சரஸா. தந்தையை இழந்துவிட்ட குடும்பத்தில் வளர்ந்த இரு சகோதரிகளும் மிகுந்த ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். தன் கணவன் மரணப்படுக்கையில் தெரிவித்த விருப்பத்தின் படி, தன் மூத்த மகளைத் தன் தம்பி மகன் கிரிக்கு மணம் முடிக்க விரும்பினாள் தாய். ஆனால், லலிதாவோ டக்டர் மூர்த்தியிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டாள். தன் தந்தை கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவும், குடும்ப கௌரவத்தைப் பாதுகாக்கவும் இளையவளான சரஸா கிரிக்குத் தன்னை அர்ப்பணித்து விடுகிறாள். ஆனால், கிரிக்கோ லலிதா மீது அளவு கடந்த ஆசை. அவன் லலிதாவுக்கும், டக்டர் மூர்த்திக்குமிடையே பிளவை ஏற்படுத்தி அவர்கள் இல்லற வாழ்வில் புயலைக் கிளப்பி விடுகிறான். கடைசியில், சரஸாவின் பொறுமையினாலும், சிறந்த குணத்தினாலும் குடும்பம் ஒன்றாகின்றது; வேற்றுமைகள் அற்றுப் போய் விடுகின்றன.

இந்தக் கதையில், நம்ப முடியாத பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. டக்டர் மூர்த்தியைக் காதலித்த லலிதா மணப்பந்தல் தயாராகும் வரை, தாயிடமோ அல்லது அன்புச் சகோதரியிடமோ ஏன் தனது உள்ளத்தைத் திறந்து காட்டவில்லை?. டக்டர் மூர்த்தியின் வீட்டுக்குப் பகலிலும், இரவிலும், தான் நினைத்த நேரமெல்லாம் கிரி வந்து போவதைப் பார்த்தால், அவன் தான் லலிதாவின் கணவன், டக்டர் மூர்த்தியல்ல என்று எண்ணவே தோன்றுகிறது. வேண்டுமென்றே, தன் கணவனின் சந்தேகத்தைத் தூண்டிவிட லலிதா முயற்சிப்பதும் கதைக்குப் பொருத்தமாகவில்லை. இன்னும் இப்படிப் பல சம்பவங்கள்.

டக்டர் மூர்த்தியாக வந்து, நல்ல விதமாக நடித்திருக்கிறார் ஜெமினி கணேசன். இப்பொழுதெல்லாம் அவருடைய நடிப்பில் உயிர்த்துவம் நிலவுகின்றது. ரண சிகிச்சை அறையில், கட்டிலில் கிடந்தவன் தனது எதிரியே என்பதை அறிந்ததும், சிகிச்சை செய்ய மறுத்து, அவர் ஆத்திரப்பட்டுச் சத்தம் போடுவது, இயற்கையாக அமைந்திருக்கிறது.



டக்டர் மூர்த்தியின் காதலியாக ராஜசுலோசனா நடித்துள்ளார். காதற் காட்சிகளில் அவர் சரளமாகப் பேசிப் பழகி, ஆர்வத்துடன் நடிக்கிறார். சில சமயங்களில், அவருடைய சோக நடிப்பு தத்ரூபமாக அமைந்து விடுகிறது. ஆனாலும், பலசமயங்களில், அவருடைய சோகத்தினூடே ஒரு புன்சிரிப்பும் தவழ்ந்து விடுகிறது ஆச்சரியம் தான்!.

குடும்ப கௌரவத்தைக் காக்கும்கடமையுணர்ச்சி நிறைந்த மகளாக, ஆசையினால், கண்ணிருந்தும் குருடனாக வாழும் கணவனுக்குப் பணிவிடை செய்து, அன்பினால் அவனை வெல்லும் மனைவியாக, மாமியின் கொடுமையைப் பொறுத்து வாழும் மருமகளாக நடிக்கும் சாவித்திரி, தமது பாத்திரத்தின் பல்வேறு குணங்களுக்கும் பங்கமேற்படாமல் பவுத்திரமாக நடித்திருக்கிறார். சில இடங்களில், அவரது நடிப்பு நம் கண்களில் நீரை வரவழைத்துவிடுகிறது. மற்றும் சில இடங்களில், தனது குடும்ப கௌரவத்தின் சார்பாக அவர் பேசும் பொழுது, நமக்கே ஆவேசம் வந்து விடுகிறது!

கிரியாக வரும் நம்பியார், இப்படத்தில் முற்று முழுக்க ஒரு வில்லன் அல்ல; அரைக் கரைவாசிதான். வழக்கம் போல வில்லன் பாகத்தை அவர் அப்பழுக்கின்றி நிறைவேற்றியுள்ளார். அத்துடன், மற்றப்படங்களில் காணமுடியாத ஒரு தனி அழகு, இப்படத்தில் அவரிடம் காணப்படுகிறது. அசல் மாப்பிள்ளை மாதிரியே இருக்கிறார் என்று சொல்லுங்களேன்!

ராஜகோபாலும், அவருடன் கூட ஒரு புதுமுகமும் படத்தின் ஹாஸ்யப் பகுதியை நிரப்ப முயற்சிக்கிறார்கள். அவர்கள் அம் முயற்சியில் வெற்றி அடைந்து விட்டார்களோ வெனில், அது சந்தேகம் தான். ஒரு மருந்துவச்சாலையை மருந்து கலப்பவரின் கேளிக்கைகளுக்கு இடமாக்கியிருப்பது வரவேற்கத்தக்கதல்ல.

ஜெமினிகணேசனும், ராஜசுலோசனாவும் கணவன் மனைவியாக, இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் காட்சிகள் இயற்கையாக அமைந்துள்ளன.

இப் படத்தின் ஒலிப்பதிவு நன்றாகவே இல்லை. பல விடங்களில்,என்ன பேசுகிறார்கள் என்பதே கேட்கவில்லை. அத்துடன், பாத்திரங்கள் தமது உச்சரிப்பிலும் கவனம் செலுத்தவில்லை.

பாடல்கள், ஒன்றோ இரண்டோதான் இனிமையாக விருக்கின்றன. நடனங்கள்-வெறும் நடனங்களே !

படம்? பார்க்கலாம்—மனமிருந்தால்; நேரமுமிருந்தால்.

—மின்மினி

# இசை வேந்தனின் பிரிவு

தியாகராஜ பாகவதர் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவரின் பிரிவு சினிமா ரசிகர்களுக்குப் பெரும் வருத்தத்தை உண்டாக்கியுள்ளது.

தமிழ்த் திரையுலகின் ஆரம்ப காலத்திலே, தியாகராஜ பாகவதர் தனக்கென ஒரு தனி இடம் வகுத்திருந்தார். அவரது இனிமையான குரலும், சிறந்த நடிப்பும் ரசிகப் பெருமக்களின் அழியா அன்பை அவருக்குப் பெற்றுத் தந்தன. பாகவதரும் அஸ்வத்தம்மாளும் நடித்த 'சிந்தாமணி' அந்தக்காலத்தில் பட உலகில் பெரும் புகழீட்டியது. பல படங்களில் நடித்துப் புகழ் பெற்ற பாகவதர், 'அசோக் குமார்', 'ஹரிதாஸ்' போன்ற சில படங்களின் மூலம் ரசிகர்களின் உள்ளங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்டார்.

சிறைவாசம் முடிந்து திரும்பிய பின் அவர் நடித்த படங்கள், எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி அளிக்கவில்லையாயினும், பாகவதர் நடிக்கிறாரென்ற ஒரே காரணத்துக்காகப் படம் பார்க்கச் செல்லும் அன்பர்களின் தொகை பல்லாயிரக்கணக்காகும். பாகவதரின் குரலுக்குக் கிடைத்த மதிப்பைப்போல் இன்றுவரை வேறு எந்தப் பாடகரின் குரலுக்கும் கிடைத்தது என்று சொல்லிவிட முடியாது.

தியாகராஜ பாகவதர் சென்றுவிட்டார். ஆனால், அவர் குரல் இறந்துவிடவில்லை. இசைத் தட்டுகள் மூலம் இன்றும் அவர் குரலைக் கேட்டு மகிழ்பவர், என்றும் கேட்டு இன்புறுவர் என்று நிச்சயமாகக் கூறலாம்.

——

## 'அப்புவின் உலகம்' லண்டனில் பரிசு பெற்றது

சத்யஜித்ரேயின் வங்காளப் படமான 'அப்புவின் உலகம்' பற்றி நாம் சென்ற வாரம் இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். இப்படம் கலிபோர்னியா சர்வதேசப்பட விழாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதெனவும், அங்கு அது பரிசு பெறலாம் எனவும் கூறியிருந்தோம். ஆனால், லண்டனிலுள்ள பிரிட்டிஷ் நஷெனல் தியேட்டரில் முதல் முறையாக இப்படம் காண்பிக்கப்பட்டதும், 'பிரிட்டிஷ் பிலிம் இன்ஸ்றிறியூற்' என்னும் பிரிட்டிஷ் சினிமாச் சங்கம், ரேயின் 'அப்புவின் உலக'த்திற்கு சதர்லாண்ட் பரிசுக் கிண்ணத்தை அளித்துள்ளது.

சர்வதேசப்பட விழாவில் 'அப்புவின் உலகம்' முக்கியமான பரிசு ஒன்றைத் தட்டிக்கொண்டு போய்விடும் என்பதற்கு, லண்டன் பரிசு அத்தாட்சியல்லவா?

——

## ஜெமினி ஸ்டுடியோவின் படம்

ஜெமினி ஸ்டுடியோ தயாரித்து வரும் படம் வேகமாக வளர்ந்து வருகிறது. இப்படம் நவம்பர் மாதக் கடைசியிலோ அல்லது டிசெம்பர் முற்பகுதியிலேயோ திரையிடப்படலாம். தமிழ், இந்தி ஆகிய இருமொழிகளிலும் படம் தயாரிக்கப்படுகிறது. படத்தின் கதை பஞ்சாலையில் பணியாற்றும் பொறியியல் வல்லுநர் ஒருவரைப்பற்றியது. அவரை, ஆலையின் முதலாளியின் மகளும், நடுத்தரத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவொரு பெண்ணும் காதலிக்கின்றனர். தமிழ்ப்படத்தில் பொறியியல் வல்லுநராக நடிப்பவர் சிவாஜி கணேசன். முதலாளியின் மகள் பி. சரோஜா தேவி; தொழிலாளர் குடும்பப் பெண் வைஜயந்திமாலா. சிவாஜி கணேசனின் தமையனாக குணசித்திர நடிகர் எஸ். வி. சுப்பையா நடிக்கிறார். வைஜயந்திமாலா, வசுந்தரா தேவி, பண்டரிபாய், சரோஜாதேவி, மோதிலால், ஜொனி வோக்கர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

மக்கள் மனங் கவரும் 4-வது வாரம்!

கிங்ஸ்லி - பிளாஸா - நவா (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை)

அயின் (மன்னர்) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) லக்ஷ்மி (ரத்தினபுரி) தீவொளி (நுவரெலியா) சரசாவி (அக்கரைப்பத்தன) ஜெமினி (பொஹவன்தலாவ)

நடிகர்கள்:

ஜெமினி கணேசன்
நாகேஸ்வரராவ்
நம்பியார்
தங்கவேலு
பி. சரோஜாதேவி
விஜயகுமாரி
எம். சரோஜா
எஸ். டி. சுப்புலட்சுமி

வீனஸ் பிக்சர்ஸ்




பின்னணி:
ஏ. எம். ராஜா
ஜிக்கி
சுசீலா
ஜமுனாராணி

கதை - வசனம்
டைரக்ஷன்:
ஸ்ரீதர்

# கல்யாண பரிசு

2-வது வாரம்!
எல்பின்ஸ்டன் - ரொக்ஸி (கொழும்பு)
தினசரி மாலை 6-30, இரவு 9-30

வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
தினசரி மாலை 2-30, 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

நடிகர்கள்:
- எஸ். எஸ். ராஜேந்திரன்
- எம். என். ராஜம்
- ஜீ. வரலட்சுமி
- தாம்பரம் லலிதா



நடனம்:
சாயி - சுப்புலட்சுமி

பின்னணி:
எம். எல். வசந்தகுமாரி
டி. எம். சௌந்தரராஜன்
ஏ. பி. கோமளா,
சீர்காழி கோவிந்தராஜன்

# மாமியார் மெச்சிய மருமகள்

எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய ஓர் குடும்பச் சித்திரம்

வெற்றிகரமான 3-வது வாரம்! செல்லமஹால் [கொழும்பு] குயின்ஸ் [காலி] அசோகமாலா [நீர்கொழும்பு]

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலசந்திரன், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசனா, அசோகன், டி. பி. முத்துலட்சுமி
முதலியோர் நடிக்கும்

# பாண்டித்தேவன்

பின்னணி:
பி. ஸ்ரீநிவாசன், ஜெயலட்சுமி, ஜமுனாராணி, ரத்னமாலா, கே. ரவி, சந்திரபாபு, பி. லீலா, டி. வி. ரத்னம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ந் திகதி வெளியிடப்பெற்றது.